
# கல்கி

KALKI 3.3.96 ரூ. 3.00

## ஆவேச அம்மகாரு!





# மாற்றமில்லாத கொள்கைகள்
# 1946 முதல்

A TRADITION OF TRUST & SERVICE
SINCE 1946
FIFTY GOLDEN YEARS

### 50 ஆண்டு திடநம்பிக்கை மற்றும் சிறந்த சேவைக் கொண்டாட்டம்

## பிக்செட் டெபாசிட்டுகளை வரவேற்கிறது

### பிக்செட் டெபாசிட் திட்டங்கள்

| காலம் மாதங்களில் | ஆண்டுக்கு வட்டி விகிதம் | |
|---|---|---|
| | மாதாந்திரம் | காலாண்டு (மாதந்தோறும் கூட்டு வட்டியாக) |
| 12 மாதங்கள் & 1 நாள்<br>25 மாதங்கள்<br>36 மாதங்கள்<br>48 மாதங்கள்<br>60 மாதங்கள் | 15% | 15.19% |

* குறைந்தபட்ச டெபாசிட் ரூ. 1000/- பின், அதன் மடங்குகளில்.
** ரூ. 16,000 வரையிலுள்ள டெபாசிட்டுகளுக்கு இங்கு வரிக்கழிப்பு இல்லை.

### குமுலேட்டிவ் டெபாசிட் திட்டங்கள்

| காலம் மாதங்களில் | ரூ. 1000 டெபாசிட்டுக்கு முதிர்வடையும் போது தரப்படும் தொகை | ஆண்டு வருவாய் (மாதந்தோறும் கூட்டு வட்டியாக) | கீழ்கண்ட டெபாசிட்டுகள் வரை வரிக் கழிப்பு இல்லை |
|---|---|---|---|
| 12 மாதங்கள் & 1 நாள் | ரூ. 1161 | 16.10% | ரூ. 15000 |
| 25 மாதங்கள் | ரூ. 1364 | 17.47% | ரூ. 13000 |
| 36 மாதங்கள் | ரூ. 1564 | 18.80% | ரூ. 11000 |
| 48 மாதங்கள் | ரூ. 1815 | 20.38% | ரூ. 10000 |
| 60 மாதங்கள் | ரூ. 2107 | 22.14% | ரூ. 8000 |

* குறைந்தபட்ச டெபாசிட் ரூ. 1000/- பின், அதன் மடங்குகளில்.

ICRA RATING
MAA +
HIGH SAFETY

### ரெக்கரிங் டெபாசிட் திட்டங்கள்
(குறைந்தபட்ச தொகை ரூ. 500)

| காலம் மாதங்களில் | ஆண்டு ஒன்றுக்கு வட்டி | முதிர்வடையும் போது மதிப்பு (ரூ. 500-க்கு) | கூடுதலான ஒவ்வொரு ரூ. 100-க்கும் |
|---|---|---|---|
| 12 மாதங்கள் & 1 நாள் | 14% | ரூ. 6477 | ரூ. 1295 |
| 25 மாதங்கள் | 15% | ரூ. 14749 | ரூ. 2949 |
| 36 மாதங்கள் | 15% | ரூ. 22840 | ரூ. 4568 |

**தி இன்வெஸ்ட்மென்ட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா லிட்**
ஒரு H. C. கோத்தாரி குரூப் நிறுவனம்

மஷ்கூர் பில்டிங்ஸ், 1 கிருஷ்ணமாச்சாரி சாலை, நுங்கம்பாக்கம் சென்னை 600 034
தொ. பே: 827 6297, 827 4871, 823 3202

For statutory details, refer to our advertisement in The Hindu dated 7.9.95

'சம்சாரம் அது மின்சாரம்' என்று படமெடுத்த விசுவைச் சந்திக்க நேர்ந்தால், 'கணவர் அவர் மின் சாரம்' என்று சொல்லுவார் திருமதி சாந்தி மின்சாரம்!

ஆம், சாந்தியின் கணவர் பெயர்: மின்சாரம்! நம்ப முடியவில்லையா? "சில நாட்களுக்கு முன்பு நான் காஸ் சிலிண்டருக்காக டெலிபோன் செய்தபோது மறுமுனையில் இருந்தவரும் இப்படித்தான் நம்ப முடியாமல் திரும்பத் திரும்ப என் கணவர் பெயரைக் கேட்டார்!" என்கிறார் சாந்தி.

சேலம் மாவட்டத்துக்காரரான சாந்தியின் கணவருக்கு "மின்சாரம்" என்று ஏன் பெயர் வைத்தார்கள்? "என் தாத்தா திராவிடர் கழகத்தைச் சேர்ந்தவர். அதனால் ஜாதி, மதம் சாராத ஒரு பெயரைத்தான் எனக்கு வைக்க வேண்டும் என்று யோசித்து யோசித்துக் கடைசியில் "மின்சாரம்" என்று பெயர் வைத்து விட்டார்!" என்கிறார் மின்சாரம்.

இப்போது ரிசர்வ் வங்கியில் பணியாற்றும் மின்சாரம், பி.காம் படித்தது தாம்பரம் கிறிஸ்துவக் கல்லூரியில். "அப்போது என் சகமாணவர்களுக்கு என் பெயர் விசித்திரமாகப் பட்டது; என்னை ஏதோவொரு ஜந்துவைப் பார்ப்பது போல்தான் பார்ப்பார்கள். பிறகு பழகப் பழக சரியாகிவிட்டது!" என்கிறார்.

கல்யாணத்துக்காகப் பெண் பார்த்த

# கணவர் அவர் மின்சாரம்!





''என்ன பிச்சுவா.. மாமூல் வாங்கறப்ப வழக்கமா ரொம்பக் கறார் பண்ணும் அந்த இன்ஸ்பெக்டர், இப்ப குடுக்கறதை வாங்கிட்டு கம்முனு போறாரு...?''

''அதுவா? எனக்கு டைரி எழுதற பழக்கம் உண்டுன்னு சும்மானாச்சும் காதுல போட்டு வைச்சேன் அதான்!''

— போத்தனூர் ஏ. செந்தில்

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

போது, பெண்ணுக்கு எப்படியிருந்தது இவர் பெயரைக் கேட்டதும்?

''அவளுக்கு என் பெயர் ஒன்றும் ஷாக் அடிக்கவில்லை. அவள் என் அப்பாவுடைய நண்பரின் பெண்தான் என்பதால் என் பெயர் ஏற்கெனவே அவளுக்கு அறிமுகமான பெயர் தான்!'' என்று சொல்லும் மின்சாரம், திருவல்லிக்கேணியில் இவர் பிரம்மச்சாரியாய் வாழ்ந்த போது ஏற்பட்ட ஓர் அனுபவத்தை மட்டும் மறக்க முடியாததாகக் கூறுகிறார்.

''அப்போதெல்லாம் ரேடியோவுக்கு லைசென்ஸ் கட்டணம் உண்டு. அதைக் கட்டுவதற்காக ஒருமுறை தபால் ஆபீஸ் சென்றேன். அங்கே என் பெயரைக் கேட்டார்கள். 'மின்சாரம்' என்றேன். மீண்டும் கேட்டார்கள். மறுபடியும் 'மின்சாரம்' என்றேன். 'என்ன, உங்கள் பெயரைக் கேட்டால் மின்சாரம் என்று உளறிக் கொண்டிருக்கிறீர்களே?' என்று கோபமாகக் கேட்டார்கள். நான் விளக்கியதும், உண்மையை உணர்ந்து மன்னிப்புக் கேட்டார்கள்!'' என்கிறார்.

புதுமையான பெயரைக் கொண்ட மின்சாரம், தமது குழந்தைகளுக்கு எப்படிப் பெயர் வைத்திருக்கிறார்?

''மகள் கார்த்திகையன்று பிறந்ததால் தீபா கார்த்தி என்று பெயர். மகனுக்கு 'கல்வினாத்' என்று பெயரிட்டுள்ளேன். ஏதாவது குறும்பு செய்யும் போது செல்லமாக நான் அடிக்க நேர்ந்தால், 'மிஸ்டர் கரெண்ட் என்னை அடிக்காதே!' என்பான் என் மகன்!'' என்கிறார் மின்சாரம்!

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**

படம் : **ஸ்ரீஹரி**

# பொதுமக்கள் கருத்தும் முதல்வர் போட்ட தடையும்!

அரசியல் கட்சிகள் அடிக்கடி போராட்டம், ஊர்வலம் என்று நடத்துவதால் பொதுமக்களுக்கு ஏகப்பட்ட சிரமங்கள். திருவனந்தபுரத்தைப் பொறுத்த வரை நகரின் முக்கிய சாலையான மகாத்மாகாந்தி சாலையிலேயே நடப்பதால் நகரமே ஸ்தம்பித்துப் போய் விடும். பார்த்தார் கேரள சட்டமன்ற உறுப்பினரான எம்.எம். ஹசன். போராட்டம், ஊர்வலங்கள் நடத்தப்படுவதைக் கண்டித்து கேரள சட்டசபை முன்பு உண்ணாவிரதம் இருந்தார்.




பொதுமக்கள் பிரச்னை என்பதால் அவரது உண்ணாவிரதத்துக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பத்திரிகைகளும் செய்தி பிரசுரித்தன. மலையாள மனோரமா ஒரு படி மேலே போய் போராட்டம் ஊர்வலம் போன்றவற்றைத் தடைசெய்ய வேண்டுமா, வேண்டாமா என்று கேரளா முழுவதும் ஓட்டெடுப்பு நடத்தியது. அதில் 85.33 சதவிகித மக்கள் தடை செய்யப்பட வேண்டுமென்றே வாக்களித்தனர்.

கேரளாவிலுள்ள பல சமூக அமைப்புகளும் பெரும்பான்மை மக்களின் கருத்தையே வற்புறுத்தின. அரசு அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி விவாதித்தது. ஆயினும் ஒருமித்த கருத்து ஏதும் ஏற்படவில்லை. எனவே கேரள முதல்வர் அந்தோணி, இந்த விஷயத்தில் பொது மக்களின் கருத்தையே எடுத்துக் கொள்வதாகக் கூறி திருவனந்தபுரத்தின் முக்கிய சாலையான மகாத்மா காந்தி சாலையில் போராட்டங்கள், ஊர்வலங்கள் ஆகியவற்றுக்குத் தடைவிதித்து விட்டார்!

திருவனந்தபுரத்திலிருந்து : **ந. சுந்தர்**

# சுஜாதா பக்கம்



டீ.வி. மேல் உனக்கு ஏன் இத்தனை கோபம் என்று கேட்பவர்கள், அதன் பாதிப்பைப் பற்றித் தீவிரமாகச் சிந்திக்காதவர்கள். இந்த நாட்களில் இருபத்து நான்கு மணி நேரமும் ஏதாவது ஒரு சானல் இருக்க, அமெரிக்க சராசரியான தினசரி எட்டு மணி நேரம் டீவி பார்க்கும் பழக்கம் நமக்கும் வரப்போகிறது.

அதாவது நம் வாழ்நாளில் மூன்றில் ஒரு பகுதியை டீவிக்கு ஒதுக்கப் போகிறோம் என்பதை விட, அதற்கு அடிமையாகச் சம்மதிக்கப் போகிறோம் என்பதே பொருத்தம்.

டீவியில் நமக்கு ஒரு 'சாய்ஸ்' - தேர்ந்தெடுப்பு இருப்பதாக நினைப்பது மாயை. இல்லங்களில் பெட்டி இருப்பதால் போட்டுப் பார்க்கிறோம். ஆனால் சானலில் பலதும் இருக்கிறதே. விரும்பினால் சன் டீவி., ஜெ.ஜெ., டிடி எது வேண்டுமானாலும் போடலாமே என்கிறவர்களும் ஏமாறுகிறார்கள். அவை அனைத்தும் ஒன்றே என்பது யோசித்துப் பார்த்தால் புரியும். சீரியல் தொடர்களில் நல்லவன், கெட்டவன், பணக்காரன், ஏழை, காதல், குடும்பச் சண்டை போன்ற சம்பிரதாயமான மேம்போக்கு உணர்ச்சிகளைத்தான் வெவ்வேறு சானல்களில், தலைப்புகளில் வெவ்வேறு நடிகர்கள் உங்களுக்கு நடித்துக் காட்டுகிறார்கள். நீங்கள் அவற்றை விரும்பிப் பார்க்கக் காரணம், உங்கள் சுவாரஸ்யமற்ற வாழ்க்கையில், பொறுப்பில்லாத சுவாரஸ்யம் ஏற்படுத்த அவை உதவுகின்றன. ராதா கணவனை ஏமாற்றுகிறாள் என்றால் அதற்கு நீங்கள் பொறுப்பல்ல. கணவனை ஏமாற்றுவதில் உள்ள சங்கடங்கள் அனைத்தையும் உங்கள் கணவனை ஏமாற்றாமல், சப்பாத்தி மாவு பிசைந்து கொண்டே பெற முடிகிறது! இதுதான் டீவி பழக்கத்தின் அடிநாதமே!

அது சிகரெட், போதை மருந்து, அல்லது குடியைப் போல ஒரு கெட்ட பழக்கமா என்று பலர் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். கெட்ட பழக்கத்திற்கான அங்க அடையாளங்கள் இரண்டு : 1 சகிப்பு (டாலரன்ஸ்) 2 விட்டுத் தொலைப்பதில் சங்கடம். சகிப்பு என்பது முதலில் கொஞ்சமாக ஆரம்பித்து போகப் போக 'டோஸ்' அதிகமாவது. இது டீவியில் இருப்பதை உணர முடியும். முதலில் அரை மணி ஒரு மணி என்று பார்த்துக் கொண்டிருந்தோம். இப்போதெல்லாம் விடுமுறை தினங்களில் பல் தேய்ப்பது குளிப்பதைக் கூட மறந்து நாள் முழுவதும் டீவி பார்க்கிறோம்.

டீவி இல்லையென்றால் என்னாகும்? யோசித்துப் பாருங்கள். ஜெர்மனியில் ஒரு பரிசோதனை செய்தார்கள். 180 பேருக்குப் பணம் கொடுத்து, ஒரு வருஷம் டீவி பார்க்காமல் இருந்து விளைவுகளைச் சொல்லுங்கள் என்று பணித்தார்கள். முதலில் எல்லோருக்கும் குஷியாகத்தான் இருந்ததாம். படிக்க நிறைய நேரம், குழந்தைகளோடு நேரம், சுற்றம் நட்புடன் நேரம், விளையாட்டுக்கு நேரம், கடிதம் எழுத என்றெல்லாம்...

ஆனால் விரைவில் விட்டொழிக்கும் சங்கடங்கள் துவங்கி விட்டன. அதிக நேரம் கிடைத்ததால் வீட்டில் சண்டை. பெண்டாட்டியை அடிப்பது... ஏன் செக்ஸ் கூட பாதிக்கப்பட்டு 180 பேரில் எவரும் ஐந்து மாதத்திற்கு மேல் தாங்கவில்லை. 'உன் பணம் வேண்டாம். பெட்டியைத் திருப்பிக் கொடு' என்று எலக்ட்ரானிக் கிறுக்கல்களுக்கு மீண்டதும் தான் சரியானதாம்!

உங்களுக்கே என்ன ஆகிறது? கண்டுபிடிக்க, யாராவது முக்கியமான தலைவர்கள் செத்துப் போய் விட்டால் டீவியில் மூணு நாள் முழுவதும் சாரங்கி வாசிப்பார்களே, அப்போது பலருக்கு டீவி இல்லாமல் லேசாகக் கைநடுங்குகிறதே அது தான் அடையாளம்!

டி.எஸ்.எலியட் டீவி பற்றி சொல்லியிருக்கிறார் : "லட்சக்கணக்கான மக்களை ஒரே சமயத்தில் ஒரே ஜோக்கை கேட்க வைத்தும் அவர்கள் தனிமையைத் தீர்க்காத ஊடகம்."

நாம் விரும்புவதைக் கொடுப்பதாக பிரமையை உண்டாக்கி தான் கொடுப்பதை நாம் விரும்பச் செய்யும் சாகசம். ஒரு நாடகத்துக்கோ, வாலிபால் விளையாட்டுக்கோ நாம் செல்வது நம் தின வாழ்வில் இயல்பாகக் கிடைக்காத ஒரு அனுபவத்தைத் தேடி. ஆனால் அதை தினமும் எட்டு மணி நேரம் பெற, நாம் தயாராவது நம் நிஜவாழ்வில் உண்மை உணர்ச்சிகளின் வெறுமையைத்தான் காட்டுகிறது. ப்ளேட்டோவின் குகை மனிதர்களைப் போல நிழல்களை நிஜமாக்கிக் கொள்கிறோம்.

ஒரு குடும்பப் பெண் சொன்னபடி "டீவி இல்லாமல் வாழ்க்கையில் எனக்கு முழுமை இல்லை. எல்லோரும் என்னை மறந்து விடுகிறார்கள். அவர்கள் (டீவியில் தோன்றும் பாத்திரங்கள்) தான் என் நண்பர்கள். அவர்கள் என்னிடம் பேசுகிறார்கள்." பெண்மணி சொல்லாமல் விட்டது : 'அவர்கள் பிரச்னைகளைத் தீர்த்து வைக்க வேண்டிய பொறுப்பும் இல்லை; அவர்களே தீர்த்துக் கொள்கிறார்கள்!'

மார்ஷல் மக்லாஹன் "ஊடகம்தான் செய்தி". THE MEDIUM IS THE MESSAGE என்றார். இதற்கு அர்த்தம், டீவியில் என்ன பார்க்கிறோம் என்பது செய்தி அல்ல; டீவி பார்ப்பதுதான் செய்தி.

ஆனால் நான் டீவியின் பரம வைரி இல்லை. அதை அதனிடத்தில் வைக்க வேண்டும். அண்மையில் நான் பார்த்த நல்ல நிகழ்ச்சிகளை, நீங்கள் பார்த்தீர்களோ? குடியரசு தினம் இரவு காட்டிய 'இந்தியா 24 மணி நேரம்' என்ற டாக்குமெண்டரி; குழந்தைகள் பாடிய பாரதி பாடல்கள் ; காமராஜ் மாவட்ட அறிவொளி இயக்கத்தினர் நாடகம்; ராஜீவ் மெஹ்ரோத்ரா ராஜா ராமண்ணாவை பேட்டி கண்டது இவை விதிவிலக்குகள். மற்றதெல்லாம் மஸ்தானா!

(மீண்டும் அடுத்த வாரம்)

# எழுத்தாளர் என்ற கௌரவத்தோடு நான் சினிமாவுக்குள் போகவில்லை!

ஒரு நீண்ட இடைவெளிக்குப் பிறகு, பாலகுமாரனைச் சந்தித்து சாவகாசமாகப் பேசியபோது....

**“எப்படி இருக்கிறீர்கள், பாலகுமாரன்?”**

“இப்படியொரு கேள்வியை நண்பர்கள் கேட்கிற போது, பெரும்பாலானவர்கள் ‘ஏதோ இருக்கிறேன்; வழக்கம் போல்தான் வாழ்க்கை ஓடிக் கொண்டிருக்கிறது...’ என்பது போன்ற பதிலைத்தான் சொல்வார்கள். நான் அப்படிச் சொல்ல மாட்டேன். சௌக்யமாக இருக்கிறேன்; சந்தோஷமாக இருக்கிறேன்; - நிறைவோடு வாழ்கிறேன்.”

***“நிறைவு என்பது பணத்தளவிலா, மனத்தளவிலா?”***

“பணத்துக்கு நிறைவு ஏது? எல்லா ரூமையும் ஏ.சி. செய்தால் கூட நன்றாகத்தான் இருக்கும். பெட்ரூமில், ஏ.சி. இருக்கிறது; இது போதும் எனக்கு. ஒரு சாதாரண சோஃபாவிலிருந்து இப்போது மெத்தென்றிருக்கும் சோஃபா வாங்க முடிந்திருக்கிறது. இதுபோதும் எனக்கு. அப்படியொன்றும் புத்திசாலியாக இல்லாத நான், பிற்காலத்தில் ஒரு நல்ல சமையல்காரனாகத்தான் இருப்பேன் - நன்றாக ஜாங்கிரி பிழிவேன் என்றுதான் என் தந்தை நினைத்திருந்தார். அதையெல்லாம் மீறி நான் ஓர் எழுத்தாளனாக வளர்ந்திருக்கிறேன் - எனது 117 நாவல்களும் நன்கு விற்பனையாகிற அளவுக்கு எழுதியிருக்கிறேன் - இப்போதும் அதிகப் பணம் வாங்குகிற எழுத்தாளனாக இருக்கிறேன் என்பதில் சந்தோஷமாக இருக்கிறேன்.

“என் இரண்டு மனைவிகளும் ஒற்றுமையாக இருக்கிறார்கள். ஒருவேளை சண்டை என்றால் இருவரும் சேர்ந்து என்னிடம் தான் சண்டை பிடிப்பார்களே தவிர, அவர்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டதேயில்லை என்பது எவ்வளவு பெரிய சந்தோஷம்! என் முதல் மனைவிக்கு உடல் நலம் சரியில்லாத போது, என் இரண்டாவது மனைவி செய்த பணிவிடைகள் ஒரு தாய் மகளுக்குச் செய்கிற பணிவிடைகளை விட அதிகம் என்பது எத்தனை பெரிய சந்தோஷம்! என் மகளும் மகனும் தகப்பனுக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையைக் கொடுக்கத் தவறாத அதே நேரத்தில், என்னை அவர்களின் மிகச் சிறந்த நண்பனாகவும் கருதி, மனம் விட்டுப் பழகுகிற அளவுக்கு வளர்த்திருக்கிறேனே, இதுதான் எத்தனை சந்தோஷத்தைத் தருகிற ஒரு விஷயம்! இதுபோதும் நண்பா, இதுபோதும் எனக்கு. மனம் நிறைந்து வாழ்கிறேன்.”

***“இரண்டு மனைவியுடையவர்கள் பெரும்பாலும் ஒவ்வொரு மனைவியையும் தனித்தனி வீடுகளில்தான் வைத்திருப்பார்கள். ஆனால் நீங்களோ ஒரே குடும்பமாக வாழ்கிறீர்கள். இது எப்படி சாத்தியமானது?”***

“நான் எனது முதல் மனைவியிடம் எதையும் மறைக்கவில்லை. எனது அந்த நேர்மையை இருவருமே புரிந்து கொண்டதுதான் காரணம்.”

***“பொறுப்புள்ள ஒரு கணவனாகவும் பொறுப்புள்ள ஒரு தகப்பனாகவும் இருப்பதில் ஏற்படுகிற நிறைவு மாதிரியே, பொறுப்புள்ள ஓர் எழுத்தாளனாகவும் இருக்கிறேன் என்றும் மனநிறைவு கொள்ள முடிகிறதா?”***

“ஓர் எழுத்தாளனால் ஒரு சமூகத்தையே தலைகீழாகப் புரட்டிப் போட்டு விட முடியும் என்பதில் எனக்குத் துளியும் நம்பிக்கை யில்லை. இருந்தாலும் அது இருக்கிற இருப்பி

விருந்து அடுத்த நிலைக்குப் போவதற்கான ஓர் உந்துதலை ஓர் எழுத்தாளனால் ஏற்படுத்த முடியும். அப்படியோர் உந்துதலை என் நாவல்கள் ஏற்படுத்தியிருக்கின்றன என்பதில் எனக்கு நிறைவுதான்."

***"ரொம்பவும் பொதுப்படையான பதிலாக இருக்கிறது!"***

"நான் யாரைப் பற்றி எழுதினேன்? எதைப் பற்றி எழுதினேன்? நடுத்தர வர்க்கத்தைப் பற்றி எழுதினேன். அந்த நடுத்தர வர்க்கம் எதை எதிர்பார்த்து இந்த வாழ்க்கையில் போராடிக் கொண்டிருக்கிறது? ஓர் ஆனந்தமான குடும்ப வாழ்க்கையை. அப்படியொரு வாழ்க்கைக்குப் பணம் மாத்திரமே போதுமானதா? போதவே போதாது. அதற்குச் சிக்கலில்லாத மனித உறவுகள் அவசியம். கணவன் - மனைவி, பெற்றோர் - குழந்தைகள், காதலன் - காதலி, அண்ணன் - தங்கை, நண்பர்கள் என்று சகல உறவுகளிலும் சிக்கலில்லாத நிலை வேண்டும். அதற்கு ஒருவரையொருவர் மனித நேயத்தோடு புரிந்து கொள்ளுதல் மிகவும் அவசியம். முழுமையான புரிதல் வந்து விட்டால் எந்த உறவிலும் சிக்கலே எழாது. இப்படியொரு நிலையில்தான் குடும்பம் ஆனந்தமாக இருக்கும். எனவேதான் எனது நாவல்களில் மனித உறவுகள் பற்றியும் புரிதல் பற்றியும் நிறையச் சொல்லியிருக்கிறேன். பிறரைப் புரிந்து கொள்வது மாத்திரம் போதாது; சுய புரிதலும் வேண்டும். அதற்காகத்தான் ஆன்மீகம் பற்றியும் தியானம் பற்றியும் சொல்லியிருக்கிறேன்.



இவற்றில் எதையும் நான் ஒரு போதகரின் தொனியில் சொல்லவில்லை; ஒரு நல்ல நண்பன் என்கிற ஸ்தானத்திலிருந்தே சொல்லியிருக்கிறேன். இது நல்ல பலனைக் கொடுத்திருக்கிறது."

***"சிறுகதை, நாவல் போன்றவற்றையெல்லாம் பொழுதுபோக்குக்காகப் படிப்பவர்கள்தானே நிறைய...!"***

"பொழுதை வெறுமனே போக்குகிற ஒரு நிலையை நிச்சயம் என் நாவல்கள் ஏற்படுத்தவில்லை. நான் எந்த ஊருக்குச் சென்றாலும் என் பெட்டியைச் சுமக்க விடாமல் ஓர் இளைஞர் பட்டாளமே என்னை வந்து சூழ்ந்து கொள்கிறது. அவர்களில் யாரும் என்னிடம் நேருக்கு நேர் அறிமுகமாகிப் பழகியவர்களில்லை. என் நாவல்கள் மூலமே அறிந்தவர்கள். அந்த நிலையிலும் என்னிடம் நீண்ட நாள் பழகியவர்கள் போல் பேசுகிறார்கள். அண்மையில் நான் தியானம் செய்வதற்காகத் திருவாரூர் கோயிலுக்குச் சென்ற போது, என்



**"ஹலோ, கிரிக்கெட் ஸ்டேடியமா?"**

**"ஆமாம்."**

**"நான் என் கணவருடன் அவசரமாகப் பேச வேண்டும்."**

**"அடடா! இப்போதுதானே அவர் பேட் செய்வதற்காகப் போனார்."**

**"பரவாயில்லை. நான் லைனில் காத்திருக்கிறேன்!"**

**– ஆத்மா முரளி.**

---

னைச் சுற்றிப் பன்னிரண்டு இளைஞர்கள். என் தியானம் முடியும் வரை அமைதி காத்தார்கள். பிறகு அவர்களுக்கும் கற்றுத் தரச் சொன்னார்கள். ஓர் இளைஞர் தன் அக்காவின காதல் பற்றிச் சொன்னான். என்ன செய்வது என்று கேட்டான். 'ஏன், உன் அக்காள் காதலிக்கக் கூடாதா? சந்தோஷத்தை விட ஜாதிதான் முக்கியமா? உன் அக்காள் காதலிக்கும் நபர் நல்லவனாக இருக்கக் கூடாதா...? இப்படிப்பட்ட பாசிடிவ் கேள்விகளாகக் கேட்டுக் கேட்டு விடைகளைக் கண்டுபிடி. அதன் பிறகு உனக்கு என்ன தோன்றுகிறதோ அப்படியே செய்!' என்றேன். அந்த இளைஞனின் முகத்தில் ஒரு தெளிவு உண்டானதைப் பார்த்தேன். ஆக, தன்னுடைய குடும்ப விஷயங்களைக் கூட என்னிடம் பகிர்ந்து கொள்ளத் தோன்றுகிற அளவுக்கு ஒரு நட்பை என் நாவல்கள் ஏற்படுத்தியிருக்கின்றன என்பது பெருமைக்குரிய ஒரு விஷயம்தானே!"

***"பாலகுமாரன் நாவல்கள் என்றாலே பெரும்பாலும் அவை பெண்களுக்கு வக்காலத்து வாங்குகிற ஒரு வக்கீலைப் போல்தான் இருக்கின்றன. இது நிஜமாகவே பெண்களுக்கு வக்காலத்து வாங்குகிற ஒரு விஷயம்தானா அல்லது பெண் வாசகர்களைக் கவர்வதற்காக இப்படியொரு நிலையா?"***

"இந்த தேசத்தில் பெண்களுக்கு அநீதி இழைக்கப்பட்டதைப் போல் வேறு எந்த தேசத்திலும் இழைக்கப்படவில்லை. பட்டதெல்லாம் போதும். சமூகத்தின் சரிபாதியும் மறுபாதியும் பெண்கள்தான் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காகவே அப்படி எழுதுகிறேன்."

***"உபதேசம் பிறருக்கு மட்டுந்தானா?"***

"நான் உபதேசம் செய்யவில்லை. உண்மையைத்தான் சொல்கிறேன். நான் வேலை விஷயமாக வெளியில் சென்று விட்டு எப்போது வீட்டுக்குத் திரும்பினாலும், 'கடைக்குச் சென்று ஏதாவது வாங்கி வர வேண்டுமா?' என்று இன்றைக்கும் கேட்டு வாங்கித் தருகிறேன். ஷாப்பிங் செல்லுகிறபோது நானும் கூடவே செல்கிறேன். ஷாப்பிங் சென்டர்களில் அவர்கள் பொருள்கள் வாங்கும் போது, தள்ளு வண்டியை நான்தான் தள்ளிக் கொண்டு செல்கிறேன். வீடு துடைக்கும் போது நானும் கூடவே துடைக்கிறேன். ஆண் என்கிற நிலையிலிருந்து நான் எப்போதும் ஆதிக்கம் செலுத்துபவனாக இருப்பதில்லை."

***"பல சமயங்களில் மரபு மீறுதல்களை நியாயப்படுத்துவது சரிதானா? சமுதாயத்தில் விதிவிலக்காக நிகழும் மரபு மீறல்கள் பெருகி, அதுவே விதியாகிவிடக்கூடிய அபாயத்தை நீங்கள் ஏற்படுத்துகிறீர்களே?"***

"முன்பு கணவன் இறந்து விட்டால் சம்மதமில்லாவிட்டாலும் கூட உடன்கட்டை ஏறுவது மரபாக இருந்தது. விதவையாகி விட்டால் பொட்டழித்து, பூவொழித்து, வெள்ளைச் சேலை கட்டி விடுவது மரபாக இருந்தது. இப்போது அவையெல்லாம் இல்லை என்று சந்தோஷப்படுகிறோமே தவிர, மரபுகள் மீறப்பட்டு விட்டனவே என்று வருத்தமாபடுகிறோம்? இதெல்லாம் காலம் நமக்குக் கற்றுக் கொடுக்கும் பக்குவம்."

***"ஆரோக்கியமான முன்னேற்றங்களுக்கும் தனிநபர் மரபு மீறலுக்கும் வேறுபாடு இருக்கிறது... நான் சொல்வது தனிநபர் ஒழுக்கம் புறக்கணிக்கப்படுவது பற்றி..."***

"காலத்துக்குக் காலம் மரபுகளின் வரம்புகள் விஸ்தரிக்கப்படும் அல்லது மாற்றப்படும் என்பதுதான் நிஜம். நிஜம் இப்படியிருக்க, மரபுகள் மீறப்படுவதாகச் சொல்வது வெறும் பாசாங்காகத்தான் எனக்குப் படுகிறது."


***"எழுத்தாளர் பாலகுமாரன், ஆன்மீகவாதி பாலகுமாரனாகவும் காணப்படுவது இன்னொரு முகமா அல்லது நிஜமுகமா?"***

"ஆன்மீகம், தியானம் என்பதெல்லாம் சொந்த அனுபவங்களாலேயே முழுமையாக அறியப்படுவன. சிறுவன் பாலகுமாரனுக்குத் தாடி, மீசையெல்லாம் இல்லை; இளைஞன் பாலகுமாரனுக்கு தாடி மீசையெல்லாம் வளர்ந்தது. இப்போது அவை நரைக்கவும் ஆரம்பித்திருக்கிறது. இதனாலேயே பாலகுமாரன் என்பவன் அவ்வப்போது முகத்தை மாற்றிக் கொண்டிருக்கிறான் என்று விமர்சனம் செய்யலாமா? இந்த மாற்றங்கள் இயற்கையானவை; வளர்ச்சியின் அடையாளம். இப்படி மாறாமலிருப்பது தான் இயற்கைக்கு விரோதம்!"

# திரு.வி.க. நகர் பெனிஃபிட் ஃபண்டு லிமிடெட்

ஸ்தாபிதம் 1989

தலைமை அலுவலகம் : 10, 2வது தெரு, ஆண்டாள் அவின்யு, (திரு.வி.க. நகர் பஸ் நிலையம் அருகில்), சென்னை - 600 082. போன் : 5378690
பாரீஸ் கிளை : 8/2, ஸ்ட்ரிங்கர்ஸ் தெரு, சென்னை - 600 108. போன் : 565760
தி. நகர் கிளை : 20, ரங்கநாதன் தெரு, சென்னை - 600 017. போன் : 4344324



**பாதுகாப்பான முறையில் சேமித்து வளருங்கள்**

## திருமூர்த்தி பாண்டு

| முதலீடு | காலம் | முதிர்வு தொகை |
|---|---|---|
| ரூ. 20,000 | 5 ஆண்டு | ரூ. 60,000 |

## வசந்தம் பாண்டு

| முதலீடு | காலம் | முதிர்வு தொகை |
|---|---|---|
| ரூ. 7,000 | 40 மாதம் | ரூ. 14,000 |

## பென்ஷனர் வைப்பு நிதி

| முதலீடு | காலம் | வட்டி |
|---|---|---|
| ரூ. 10,000 | 1 ஆண்டு<br>2 ஆண்டு<br>3 ஆண்டு | 21% |

★ பென்ஷனர், ஓய்வு பெற்றோர், முதியோர் (50 வயதிற்கு மேல்), விதவைகள், ஊனமுற்றோர் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறலாம்.
★ பிரதி மாதம் 25ஆம் தேதி வட்டி வழங்கப்படும்.

## பென்ஷனர் மறுமுதலீட்டு திட்டம்

| முதலீடு | காலம் | முதிர்வு தொகை |
|---|---|---|
| ரூ. 5,000 | 1 ஆண்டு | 6,157 |
| | 2 ஆண்டு | 7,582 |
| | 3 ஆண்டு | 9,337 |
| | 40 மாதம் | 10,000 |

## எக்செல் பாண்டு - A திட்டம்

| முதலீடு | காலம் | வட்டி |
|---|---|---|
| ரூ. 9,000 | 2 ஆண்டு | 21% |

பிரதி மாதம் 25ஆம் தேதி வட்டி வழங்கப்படும்

## எக்செல் பாண்டு - B திட்டம்

| முதலீடு | காலம் | முதிர்வு தொகை |
|---|---|---|
| ரூ. 9,000 | 2 ஆண்டு | ரூ. 13,648 |

## வைப்பு நிதி

| முதலீடு | காலம் | வட்டி |
|---|---|---|
| ரூ. 5,000 | 1 ஆண்டு | 18% |
| | 2 ஆண்டு | 19% |
| | 3 ஆண்டு | 20% |
| | 4 ஆண்டு | 21% |

பிரதி மாதம் 25ஆம் தேதி வட்டி வழங்கப்படும்

## மறுமுதலீட்டு திட்டம்

| முதலீடு | காலம் | முதிர்வு தொகை |
|---|---|---|
| ரூ. 1,000 | 12 மாதம் | 1,195 |
| | 24 மாதம் | 1,455 |
| | 36 மாதம் | 1,810 |
| | 42 மாதம் | 2,000 |

★ சேமிப்பு திட்டம் 12% வட்டி நாள் கணக்கில் வட்டி கணக்கிடப்படும்.
★ தங்க நகைகள் பேரில் ஒரு சவரனுக்கு ரூ. 2400 வரை கடன் வழங்கப்படும். மாத வட்டி 2%.
★ சென்னை மாநகர வீடு/ஃப்ளாட் பேரில் கடன் வழங்கப்படும். மாத வட்டி 2% on Reducing Balances, R.D. கட்ட தேவையில்லை. கடன் மிக விரைவாக வழங்கப்படும்.
★ பங்குதாரர்களுக்கு மட்டும்
★ ரூ.10 செலுத்தி பங்குதாரர் ஆவீர்.

## வேலை நேரம்

தலைமை அலுவலகம் : 9 முதல் 5. ஞாயிறு 9 முதல் 1
கிளைகள் : 10 முதல் 5. ஞாயிறு 10 முதல் 1
உணவு இடைவேளை இல்லை. வார விடுமுறை இல்லை.

**மங்கையர் மலர்**

**மார்ச் '96**

- நமக்கெல்லாம் வானமே எல்லை!
- ஹோட்டலையும் நிர்வகிப்போம்!
  — கல்லூரி மாணவிகள்
- வீட்டிலேயே கைவைத்தியம் செய்து கொள்ளலாமே!
- இருகோடுகளில் எது பெரியது?
  — சௌகார் ஜானகி



- சிறந்த சமையல் குறிப்புகள்
- ராசிபலன்
- டிசைன் ரவிக்கைகள்

மங்கையர் மலர்,
சக்கரநாற்காலி, சென்னை - 600 097.


"இந்த ஆன்மீக நாட்டம் திடீரென்று எப்படி வந்தது?"

"திடீரென்று வந்ததாக யார் சொன்னது? நான் என்றைக்கேனும் என்னையொரு நாத்திகன் என்று பிரகடனப்படுத்திக் கொண்டு, இன்றைக்கு மாறியிருக்கிறேனா? இல்லையே! 'அவன் அருளாலே அவன்தாள் பணிந்து' என்று மாணிக்கவாசகர் சொல்வது போல், எனது குரு யோகிராம் சுரத்குமார் அவர்களின் அருள்தான் காரணம். என்னை முழுக்க முழுக்க அவர்தான் வழிநடத்திச் செல்கிறார். என் வீட்டு பூஜையறையில் இருப்பது அவர் படங்கள் மட்டும்தான். 'குருவே சகலமும்' என்று பரிபூரணமாக நம்பி பூஜிக்கிறேன்."

*"பாலகுமாரனுக்கும் யோகிராம்சுரத்குமார் அவர்களுக்கும் இடையிலான உறவு சரியில்லை; அதனால் முன்பு போல் அவரது ஆசிரமமிருக்கும் திருவண்ணாமலைக்குச் செல்வதில்லை என்றும் ஒரு பேச்சு..."*

"திருவண்ணாமலைக்குச் சென்றால்தான் குருவை தரிசிக்க முடியும் என்கிற நிலையில் அடிக்கடி சென்றேன் என்பது உண்மைதான். குருவின் அருள் பூரணமாகக் கிடைத்திருப்பதால், குரு எப்போதும் என் கூடவே இருக்கிறார் என்பதை அனுபவபூர்வமாக இப்போது உணர்கிறேன். அதனால், திருவண்ணாமலைக்குச் சென்றுதான் குருவை தரிசிக்க வேண்டும் என்கிற நிலையில் நான் இல்லை. உதாரணத்திற்கு ஓர் அனுபவம். நான் தினமும் பதினாறு பாக்கெட் சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தேன். ஒருநாள் காலை தொடர்ந்து ஒன்பது சிகரெட் பிடித்தேன். ஒன்பதாவது சிகரெட்டின் போது, என் குரு 'இதை விட்டு விடு' என்று சொல்வது போல் இருந்தது. அவ்வளவு நான், விட்டு விட்டேன். இது நடந்தது 94 டிசம்பரில். அதன் பிறகு சிகரெட்டைத் தொடவேயில்லை. இது குருவின் அருளால்தான் நடந்தது. வாழ்க்கை என்பது உண்மையைத் தேடிச் செல்கிற ஒரு பயணம். அதனால்தான் கேலி யையும் விமர்சனங்களையும் நான் ஒரு பொருட்டாகவே கருதுவதில்லை."

*"வாழ்க்கை என்பது உண்மையைத் தேடிச் செல்கிற ஒரு பயணம் என்கிற நிலையில், வெறும் கனவுருவ வியாபாரிகளான சினிமாக்காரர்களோடு எப்படி கூட்டுறவு வைத்துக் கொண்டு வசனம் எழுத முடிகிறது. முரண்பாடாக இல்லை?"*

"புராணங்களைப் பார்த்தால் கசாப்புக் கடைக்காரன் கூட ஞானியாக இருந்திருக்கிறான். அதற்கு என்ன அர்த்தம்? தொழில் வேறு; ஞானம் வேறு என்பதுதான். எனவே, என் வாழ்க்கையிலும் முரண்பாடு ஏதும் இல்லை."

*"டைரக்டராக முடியாததால்தான் வசன*

***கர்த்தா என்கிற நிலையா?"***

"என் சிறு வயது லட்சியம் ஓர் எழுத்தாளராக வேண்டும் என்பதுதானே தவிர, டைரக்டராக வேண்டும் என்பதல்ல. சினிமா என்பது எனக்கு இப்போதைய தொழிலே தவிர, லட்சியம் அல்ல. எனவே, அது முடியாததால்தான் இது என்கிற பிரச்னைக்கே இடமில்லை."

***"சினிமாவில் பொறுப்புணர்ச்சி என்பது அரிதான விஷயமாக இருக்கிறதே?"***

"சினிமா என்பது நாவல்கள் மாதிரியான ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் என்று நான் நினைக்கவில்லை. இன்றைக்குப் பேசப்படும் ஒரு படம் அடுத்த ஆண்டும் பேசப்படுமா என்றால், இல்லை! இதை வெறும் பொழுதுபோக்காகத்தான் பார்க்கிறார்கள். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கிற குதியல் உணர்ச்சியின் வடிகால்தான் சினிமா. பாத்ரூமில் குளிக்கும்போது பாடாதவர்கள் எத்தனை பேர்? ஷவரில் குளிக்கும் போது அண்ணாந்து பார்த்தபடி எச்சில் தண்ணீரை உமிழ்ந்து விளையாடாதவர்கள் எத்தனை பேர்? இதெல்லாம் அறிவுபூர்வமானதா என்ன? குதியல் உணர்ச்சியின் வெளிப்பாடுதான். இதேதான் சினிமாவிலும். தியேட்டரில் ஆயிரம் பேரோடு உட்கார்ந்து படம் பார்த்தாலும் பக்கத்தில் யாரும் உட்கார்ந்திருக்கிறார்கள் என்கிற பிரக்ஞை யாருக்கும் இருக்காது. தான் மட்டும் உட்கார்ந்து படம் பார்க்கிற உணர்வைத்தான் ரசிகர்கள் பெறுகிறார்கள். இதைத்தான் சினிமா பூர்த்தி செய்கிறது."

***"சினிமா, தியேட்டரில் மட்டுமே காட்டப்படுகிற நிலை போய், இப்போது டிராயிங் ரூமில் – 24 மணி நேர டெலிவிஷன் சானல்களில் – காட்டப்படுகிற நிலை வந்து விட்டதே? இங்கே பக்கத்தில் அண்ணன், தங்கை, தாய், தந்தை ஆகியோர் உட்கார்ந்திருப்பதையெல்லாம் மறந்து விட்டு யாரும் படம் பார்க்க முடியாதே?"***

"இது விஞ்ஞானத்தின் வளர்ச்சி. தவிர்க்க முடியாது. ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். டிராயிங் ரூமில் காட்ட முடியாது என்பதாலேயே ஒருவனுக்கு அல்லது ஒருத்திக்குக் குதியல் உணர்ச்சியே கிடையாது என்று முடிவு கட்டி விடக் கூடாது."

***"நாவலாசிரியர்கள் சினிமாவுக்குப் போய் நிலைத்து நிற்க முடியாத ஒரு சூழ்நிலையில் பாலகுமாரனால் மட்டும் எப்படி முடிகிறது?"***

"நான் ஒரு நாவலாசிரியன் என்கிற ஹோதாவோடு சினிமாவில் பழகுவதில்லை. என்னைப் பொறுத்தவரை சினிமா வசனம் எழுதுவதென்பது செருப்புத் தைக்கிற தொழில் மாதிரி. கமல் காலுக்கு எப்படித் தைக்க வேண்டும்; ரஜினி காலுக்கு எப்படித் தைக்க வேண்டும் என்பது புரிந்திருக்கிறேன். அப்படியே தைக்கிறேன். 'நான் ஒரு தடவை சொன்னா நூறு தடவை சொன்ன மாதிரி' என்று ரஜினிக்கு எழுதியதால்தான் அது இந்த அளவுக்கு எடுபட்டிருக்கிறது. அதோடு சினிமா என்பது ஒரு மிகப் பெரிய கூட்டு முயற்சி என்றும் உணர்ந்து செயல்படுகிறேன். இதுதான் நான் நிலைத்திருப்பதற்குக் காரணம்."

***"அரசியலில் ஈடுபாடு உண்டா?"***

"அரசியல் நெளிவு சுளிவுகள் தெரிந்து கொள்கிற அளவுக்கு நான் ஒன்றும் புத்திசாலி இல்லை."

***"ஒருவரை ஆதரிக்க வேண்டும் என்கிற சூழ்நிலையில் யாரை ஆதரிப்பீர்கள்?"***

"மூப்பனாரை."

***"ஏன்?"***

"ஏனென்று சொல்லத் தெரியவில்லை. அவர் என் நாவல்களைப் படித்து அவ்வப்போது பாராட்டுவார். ஆனாலும் அவரைப் பிடித்திருப்பதற்கு இது காரணமில்லை. காரணம் தெரியாமலேயே எனக்கு அவரைப் பிடித்திருக்கிறது."

***"வரப்போகும் தேர்தலில் அவரை ஆதரித்துப் பிரசாரம் செய்ய வேண்டியிருந்தால் செய்வீர்களா?"***

"பிரசாரம் செய்கிற அளவுக்கு எனக்குப் புத்திசாலித்தனம் போதாது. என்னால் என்ன முடியுமோ, எப்படி முடியுமோ அதை நிச்சயம் செய்வேன்."

சந்திப்பு : **இளங்கோவன்**



**"மன்னா?"**

**"என்ன அமைச்சரே?"**

**"அயல்நாட்டு அரசனுக்கு வரவர கொழுப்பு ரொம்ப அதிகமாகி விட்டது."**

**"என்ன விஷயம்?"**


**"ரொம்ப போரடிக்கிறதாம். அதிகம் செலவில்லாமல் வரும் ஞாயிற்றுக் கிழமை ஒரு "ஒன் டே" போருக்குக் கூப்பிடுகிறான்!"**

**– ஆத்மா முரளி**

# கைகுலுக்கல் கைகலப்பாய் மாறும் போது...!



***ஆர்த்தரைடிஸ் என்றால் ஏதோ வயதான கிழவர்களை மட்டுமே அவதிப்பட வைக்கும் நோய் என்று நினைத்து விட வேண்டாம்... சின்னக் குழந்தைகளுக்குக் கூட ஆர்த்தரைடிஸ் வரக்கூடும் என்கிறார் டாக்டர் கோபாலகிருஷ்ணன்!***




மூட்டுகளில் வரும் வீக்கம்தான் ஆர்த்தரைடிஸ். (Arth என்றால் மூட்டு; ritis என்றால் வீக்கம்.) இடுப்பு, முழங்கால், முழங்கை, கணுக்கால், முதுகெலும்பு இணைப்பு, கைவிரல் மூட்டு – என இரண்டு எலும்புகள் சேரும் எந்த மூட்டுப் பகுதியிலும் இந்த வீக்கத்துடன் கூடிய வலி வரலாம்.

மூட்டுப் பகுதியில், எலும்புகளை இணைக்கும் மெல்லிய திசு உண்டு. இந்தத் திசு ஒருவித திரவத்தை வெளிப்படுத்துகிறது. மூட்டு எலும்புகள் உராயாமல் இலகுவாகக் கைகுலுக்குவது போல் இயங்க இத் திரவம் உதவுகிறது. இந்த இணைப்புத் திசு பாதிக்கப்பட்டு திரவம் சுரப்பது தடைபடும் போது கைகுலுக்கல் கைகலப்பாய் மாறும்! மூட்டுகள் வீங்கிக் கொண்டு தாங்க முடியாமல் வலிக்கும். இந்த நிலையைத்தான் ஆர்த்தரைடிஸ் என்று சொல்கிறோம்.

## குளிரக் குளிர....!

பொதுவாக, குளிர் மிகுந்த நாடுகளில் உள்ளவர்கள் இந் நோயால் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். பிற நாடுகளிலும் குளிர்க்காலத்தில் தான் அதிகம் தாக்கும். இதற்குக் காரணம் : 1. அவர்களுடைய செயல்பாடுகள் குறைவாக இருக்கின்றன. ஆக்டிவிடீஸ் குறையும்போது, மூட்டுகளின் இயக்கமும் குறைவாகவே இருக்கும். 2. தங்களை அதிகம் போர்த்தி மூடிக் கொண்டு இருப்பதால் சூரிய வெளிச்சமே அவர்கள் மீது படாமல் போய், வைட்டமின் டி குறைவாகி 'ஆர்த்தரைடிஸ்' தாக்கம் அதிகமாகி விடுகிறது.

## சிவப்புக் கம்பள வரவேற்பு!

உடலின் எல்லா மூட்டுப் பகுதிகளுக்கும் வேலை கொடுத்துக் கொண்டேயிருந்தோமானால் ஆர்த்தரைடிஸ் தாக்கும் வாய்ப்பு குறைகிறது. கிராமப் பகுதி மக்களின் வாழ்க்கை முறையே உடலுழைப்பு சார்ந்ததாக இருப்பதால் அவர்களை இந் நோய் அதிகமாக அண்டுவதில்லை. நகரவாசிகள்தான் மேஜையில் சாப்பிடுவது, மேற்கத்திய பாணி கழிப்பறைகள், பக்கத்துத் தெருவுக்குப் போகக் கூட ஸ்கூட்டர் என்று இந்த நோய்க்குச் சிவப்புக் கம்பள வரவேற்பு அளிக்கிறார்கள். அதுவும் பெண்கள் பலர் உடலுழைப்புக்கே இடமளிக்காமல் இருப்பதால் அவர்களையே இது அதிகம் தாக்குகிறது. நின்றவாக்கில் சமைப்பதும், கிரைண்டரில் அரைப்பதும், இரண்டு பெட்ரூம் ஃபிளாட்டில் வாசலுக்கும் உள்ளுக்கும் நடப்பதும் உடற்பயிற்சியில் சேர்த்தி இல்லை, இல்லை, இல்லை!

உடற்பயிற்சியின் மூலம் ஆர்த்தரைடிஸைத் தவிர்க்கத் தவறினால் மருந்து உட்கொண்டும் பிஸியோதெரபி (மருத்துவரீதியான உடற்பயிற்சிகள்) செய்தும்தான் அந் நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும். வந்தபின் 'எக்சர்சைஸ்' செய்வதை விட வருமுன் செய்வதே மேலல்லவா!

## குழந்தைகளுக்கும்...

சில சிறந்த உடலுழைப்பாளர்களுக்குக் கூட ஆர்த்தரைடிஸ் வரக்கூடும். (விதிவிலக்காக). முதுமையினால் மூட்டுத் திசுக்கள் பழுதாவது; அத் திசுக்களில் காசநோய் போன்ற




கிருமித் தொற்று படிவது என இரு வேறு காரணங்களால் அப்படி நிகழலாம்.

நோய்க் கிருமிகள் மிகச் சிறிய குழந்தைகளின் மூட்டுகளில் கூட தொற்றக்கூடும். இடுப்பு மூட்டு, கை, கால் என்று எந்தப் பகுதியிலும் வரலாம். உடனடியாகக் கவனித்துச் சிகிச்சை அளிக்காவிட்டால் நோய்த் தொற்றினால் மூட்டுத் திசு நிரந்தரமாக பாதிக்கப்படும்; சக்கர நாற்காலியில் முடக்கிவிடும்.

காசநோயினால் வரும் ஆர்த்தரைடிஸை டி.பி. ஆர்த்தரைடிஸ் என்போம். முதியவர்களுக்குத் திசுக்கள் தேய்வினால் உண்டாவது போல் குழந்தைகளுக்கும் ஏற்படுவதுண்டு. இந்த நிலையை ஜுவனைல் ருமடாய்ட் ஆர்த்தரைடிஸ் என்போம்.

## ஆபரேஷன்; மீண்டும் ஆபரேஷன்!

மூட்டுத் திசுவில் பாதிப்பு குறைவாக இருந்தால் சிகிச்சை, உடற்பயிற்சி மூலம் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வரலாம். மிதமிஞ்சிய பாதிப்பினால் திசு பழுதாகிப் போனால் ஆபரேஷன் செய்து அதை நீக்க வேண்டும். Minimal invasive surgery என்ற உடலைப் பெரிய அளவில் 'கிழிக்காத' அறுவைச் சிகிச்சை செய்தாலே போதுமானது.

இந்த அறுவைச் சிகிச்சையின் போது நீக்கப்படும் திசுவின் இடத்தில் சில நாட்கள் கழித்துப் புதிய திசு இயல்பாக வளரும். இந்த அறுவைச் சிகிச்சையையும் காலாகாலத்தில் செய்யாவிட்டால் மூட்டையே மாற்றி அமைக்கும் total replacement surgery என்கிற பெரிய அறுவைச் சிகிச்சையைத்தான் செய்தாக வேண்டும். இந்த முறையில் இயற்கை மூட்டுக்குப் பதிலாகச் செயற்கை மூட்டுப் பொருத்துவோம். இதை சுமார் இருபது வருடங்கள் கழித்துத் திரும்பவும் வெளியே எடுத்து, வேறு செயற்கை மூட்டு பொருத்த வேண்டும்!

## புனைபெயர்!

வயதானவர்களுக்கு (முதுமை காரணமாக) வரும் ஆர்த்தரைடிஸை ஆஸ்டியோ ஆர்த்தரைடிஸ் என்போம்.

மேல் முதுகுத் தண்டில் வலியுள்ளவர்களுக்கு 'செர்வைகல் ஸ்பான்டிலோஸிஸ்' என்று டாக்டர்கள் சொல்வார்கள். அந்தப் பகுதி மூட்டில் வரும் ஆஸ்டியோ ஆர்த்தரைடிஸின் புனைபெயர்தான் செர்வைகல் ஸ்பான்டிலோஸிஸ்.

சில சமயங்களில், நாற்பது வயது வரை மிக சுறுசுறுப்பாக இருப்பவர்கள் திடீரென்று அலுவலக வேலைப் பளு போன்ற காரணங்களால் உடலுழைப்பைக் குறைத்து விடுவார்கள். அப்புறம் ரிடையரான பிறகு திரும்பவும் எக்சர்சைஸ் செய்கிறேன் பேர்வழி என்று ஒரேயடியாக உடலை வருத்துவார்கள். ஆரம்பித்து விடும் மூட்டுவலி!

## இதயத்தைத் தொட்டுவிடும்!

ருமாடிக் ஆர்த்தரைடிஸ் என்றும் ஒரு வகையுண்டு. 'ஸ்ட்ரெப்டோகாகஸ்' என்ற கிருமி தொண்டைப்புண் அறிகுறியுடன் உடம்பினுள் நுழைந்து, மூட்டுகளில் குடியேறுவதால் ஏற்படுவது. இதனால் இதயம் கூட பாதிக்கப்பட்டு அதிலுள்ள வால்வுகள் பழுதாகும். சின்ன வயதிலேயே இது வரக்கூடும். சீக்கிரம் கண்டுபிடித்து சிகிச்சையை ஆரம்பித்தால் ஆறு - ஏழு வருடங்களில் கட்டுப்படுத்தலாம்.

எல்லா மூட்டுகளுக்கும் வேலை தரும்படியான உடற்பயிற்சிகளைச் செய்வதன் மூலம் ஆர்த்தரைடிஸ் வருவதற்கான வாய்ப்புக்களைக் குறைக்கலாம். ஆனால் ருமாடிக், ருமடாய்ட் என்ற இரு வகை ஆர்த்தரைடிஸும் பரம்பரையாக வரக்கூடும். குடும்பத்தில் யாருக்காவது அந்தத் தொல்லை இருந்தால் அடுத்தடுத்த தலைமுறையினர் முன்னெச்சரிக்கையுடன் இருப்பது நல்லது.

தொகுப்பு : **சாருகேசி**

# மைமாஞ்ஜா

நெற்றி நிறைய விபூதியும் நடுவில் குங்குமமுமாக, மஞ்சள் டெர்லின் சட்டையில் ஒரு சீனாக்காரப் பையன். ஏழெட்டு வயது இருக்கும். அவன் கையைப் பிடித்தபடி, மடித்துக் கட்டிய வேட்டியும், மஞ்சள் டெர்லின் சட்டையும், கக்கத்தில் குடையுமாக ஒரு நரை மீசைக்காரர். கொஞ்சம் பின்னால், அவசரமாகப் புடைவையைச் சுற்றிக் கொண்டது போல, இடுங்கிய கண்ணும் ஒல்லியான உருவமுமாகப் பையனின் ஜாடையில் ஒருத்தி. அம்மாவாக இருக்கும். கடைசியாக, தகர டப்பாவைச் செல்லமாக அணைத்துப் பிடித்தபடி, ஒட்டமும் நடையுமாக ஒரு மத்திய வயசுப் பெண்.

ஏழு 'ஆ' பிரிவுக்கு பூகோளப் பாடம் எடுக்க உலக உருண்டையோடு புறப்பட்ட வேதையா வாத்தியார் ஆபீஸ் அறை வாசலில் நின்றார்.

"கண்ணாடியை மாத்தித் தொலைக்கணும்... கண்ணு ஏதோ கொறக்களி காட்டுது!"

"இங்கே எட்மாஸ்டர் சாரு..."

நெருங்கி வந்த மீசைக்காரர் அவரைத்தான் கேட்டார்.

"நான்தான்... என்ன விஷயம்?"

சகல கம்பீரத்தோடும் பூமிப்பந்தை இடவலமாகச் சுழற்றியபடி கனிவாகப் புன்னகை பூக்க வேதையா வாத்தியார் முற்பட்டபோது, இடைஞ்சலாக 'ஏழு - ஆ'விலிருந்து உயர்கிற சத்தம்.

"எங்கேயிருந்து வர்றீங்க?"

வேதையா வாத்தியார் சீனாக்காரியைப் பார்த்துக் கேட்டார்.

"பர்மா... மாண்டலேயிலிருந்து வராங்க..." கூட வந்தவள் சொன்னாள்.

சீனா இல்லை... என்றாலும் அன்னிய தேசம்...

"பர்மாக்காரப் புள்ளையைப் பள்ளிக்கூடத்துலே போடச் சட்டம் எடம் தராதேம்மா..."

வேதையா வாத்தியார் அவர்களைத் தவிர்த்துவிட்டு நடக்க முற்பட்டார். இன்னும் தாமதமானால், 'ஏழு - ஆ'வின் குட்டிப் பிசாசுகள் பள்ளிக்கூடத்தையே இரண்டுபடுத்தி விடுவார்கள்.

"பையனுக்கு அப்பன் தமிழுதான் சார்... என் தம்பி..."

நரை மீசை வேட்டியைத் தழையவிட்டபடி மரியாதையோடு சொன்னார்.

தமிழ்ப் பிள்ளையா ...மூக்குச் சப்பையும் இடுங்கிய கண்ணுமாக...?

"யாவாரத்துக்குப் போன எடத்துலே இந்தப் பொம்பளையைக் கல்யாணம் கட்டிக்கிட்டான்."

மீசைக்காரர், வேதையா வாத்தியார் காதருகில் சொன்னபோது இராம்பு வாசனை.

எல்லோர் கண்ணும் தன்னையே பார்ப்பதை உணர்ந்து, அந்தப் பெண் சங்கடப்பட்டபடி இரண்டு கைகளையும் குவித்து வேதையா வாத்தியாருக்கு வணக்கம் சொன்னாள். கையில் பளபளத்த தங்க வளையல்கள், செழிப்புக்குச் சாட்சி சொல்லிக் குலுங்கின.

"தமிள்க்காரங்க எல்லாரையும் பர்மாவை விட்டுப் போகச் சொல்லி, அங்கித்து கவர்மெண்ட் உத்தரவு... அங்கே நம்ம ஆளுங்களை மதிக்கவே மாட்டாங்க சார்... நான் கூடக் கொஞ்ச நாள் இருந்துட்டு சரிப்படாதுன்னு திரும்பிட்டேன்... தம்பிக்கு இப்ப திரும்பிவர வேண்டிய கட்டாயம்... மர யாவாரம்... லட்சலட்சமாய்ப் பணம் புரளறதை எல்லாம் வித்துட்டு வரான்... குடும்பத்தை முன்கூட்டியே கப்பல்லே அனுப்பிச்சுட்டான்... போன வாரம் தான் பட்டணத்துலே போய்க் கூட்டியாந்தேன்..."

மீசைக்காரர் தம்பி சம்சாரத்திடம் அன்னிய பாஷையில் ஏதோ சொல்ல, அவள் பிடித்திருந்த பையிலிருந்து, நாலாக மடித்த காகிதத்தை எடுத்து நீட்டினாள்.

"சர்ட்டிபிகேட்டுங்க... மாண்டலேயிலே செட்டியார் ஸ்கூல்னு தமிள்ப் பள்ளிக்கூடம் தான்..."

மீசைக்காரர் சொல்லிக் கொண்டே இருக்க, வேதையா வாத்தியார் வாங்கிப் பார்த்தார்.

நாலு வகுப்பு முடிச்சிருக்கும் பையன்.

"தமிழ் படிப்பியாடா தம்பி?"

பையன் கூச்சப்பட்டு நெளிந்தான்.

"உள்ளே ரைட்டர் இருப்பாரு... பீஸ் கட்டிச் சேர்த்துட்டு, நாலாங்கிளாஸ்லே உக்காரச் சொல்லுங்க... ஒரு பத்து நாள் பார்த்துட்டு, எல்லாம் சரியாப்பட்டா மேலே அனுப்ப...

இரா. முருகன்

றேன்..."

வேதையா வாத்தியார் நடக்க, மத்திய வயதுப் பெண் தகர டப்பாவை அவசரமாகத் திறந்து ஒரு கை இனிப்புகளை அவருக்கு முன் நீட்டினாள்.

"கொளுந்தியா கொண்டாந்தா... இங்கே பிள்ளைங்க எல்லாருக்கும் கொடுக்கணுமாம்... பர்மா மிட்டாயி..."

ஒன்றைப் பிரித்து வாயில் போட்டபடி வேதையா வாத்தியார் கேட்டார் -

"பெயர் என்னடா தம்பி?"

"மாமாந்தா."

நாலு பையன்கள். தலையெல்லாம் கலைந்து கண் சிவந்து வழிந்து, சட்டை கிழிந்து— ஒருத்தன் விசும்பி அழுது கொண்டிருந்தான்.


'நாலு - ஈ' அம்சவள்ளி டீச்சர் மாமாந்தாவின் கழுத்தைப் பிடித்துத் தள்ளிக் கொண்டு பின்னாலேயே வந்தார்.

"கொரங்குப்பய... எல்லாப் பிள்ளைங்களையும் போட்டு அடிக்கறான். இன்னிக்கே டி.சி.யைக் கிழிச்சு வீட்டுக்கு அனுப்பினாத்தான் சரிப்படும்... நேத்து பெஞ்சு மேலே ஏறிக் குதிச்சு உடைச்சு வச்சிருக்கான்... நீங்களே விசாரியுங்க சார்..."

டிரஷரிக்கு அனுப்ப சம்பளப் பட்டுவாடா பட்டியலைச் சரிபார்த்துக் கொண்டிருந்த வேதையா வாத்தியார், கூட்டுத் தொகையின் இரண்டாம் ஸ்தானத்துக்குக் கீழே பென்சிலால் புள்ளி வைத்துவிட்டு மாமாந்தாவை நிமிர்ந்து பார்த்தார்.

இவனுடைய மீசைக்காரப் பெரியப்பா,





நிருபர் : உங்க தொகுதியிலே நடந்த வன்முறைக்கு நீங்கதான் காரணமுன்னு சொல்றாங்களே...?

தலைவர் : என்னை ரொம்பப் புகழா தீங்க. என் கடமையைத்தான் நான் செஞ் சேன்!

- எஸ். எஸ். பூங்கதிர்

---

இரண்டு மாதம் முன்னால் படபடவென்று மோட்டார் சைக்கிளில் வந்து இறங்கி, பையனை ஐந்தாம் கிளாசுக்கு அனுப்பச் சொல்லிக் கேட்டது நினைவுக்கு வந்தது.

"தமிழ்லே மார்க் போதாதே... கணக்கும் சுமார்தான்... ஒரு வருஷம் இருந்தே வரட்டும்... கால் வருசப் பரீட்சை வேறு முடிஞ் சாச்சு..."

அப்படித் தீர்மானமாகச் சொல்லி அனுப் பாமலிருந்தால் சும்மா இருந்திருப்பானோ... நாலாவதோ... ஐந்தாவதோ.. குறும்பு குறைந் திருக்குமா என்ன...?

"பசங்களை ஏன்டா அடிக்கறே...? பெரிய ரவுடின்னு நெனைப்பா...? இல்லே பணம் இருக்கிற கொழுப்பா...?"

மாமாந்தா தரையைப் பார்த்துக் கொண்டு மௌனமாக நின்றான்.

"வாயைத் தொறந்து சொல்றானா பாரு... வீட்டுலே கண்டிச்சு வளர்த்தா இல்லே உருப் பட...?"

அம்சவள்ளி டீச்சர் கையை ஓங்க, மாமாந்தா விலகி விறைப்பாக நின்றான்,

"எல்லாப் பசங்களும் சீனாக்காரா... சீனாக் காரான்னு கிண்டல் பண்றாங்க சார்... இந்த டீச்சரம்மாவே வீட்டுலே பாம்பு திம்பியாடா... பல்லி திம்பியாடான்னு கிளாஸ்லே கேக்க றாங்க..."

"பொய் சார்... நான் அப்படியெல்லாம் கேக்கலை..."

அம்சவள்ளி டீச்சர் மேல் முறையீடு செய் தார்.

"நீங்க சும்மா இருங்க டீச்சர்... நான் பேசிக் கறேன்... ஏம்ப்பா... நாளைக்கு உங்க அப்பாவை வந்து என்னைப் பார்க்கச் சொல்லு."

மாமாந்தா ஒரு வினாடி பேசாமல் நின் றான்.

"சார்... எங்க அப்பா இன்னும் பர்மா லேருந்து வரலே... அம்மாவைக் கூட்டி வரட்டா?"

வேதையா வாத்தியாருக்கு அந்தப் பைய னைப் பார்க்க ஏனோ பரிதாபமாக இருந்தது.

"உங்க பெரியப்பா எங்கேடா?"

"கடையிலே சார்."

பர்மா ஸ்டோர் என்று ஜவுளிக்கடை. சமீபத்தில்தான் திறந்தது. ஒருநாள் முழுக்க ஒலிபெருக்கி அலறி வகுப்பில் பாடம் எடுக் கத் தொந்தரவாய்ப் போனது நினைவுக்கு வந்தது.

"ஒழுங்காப் படிக்கறதுன்னா இங்கே இரு.. இல்லே நீயும் கடையிலே துணி கிழிக்கப் போய் உக்காந்துடு... தெரியுதா...? இன்னொரு வாட்டி இப்படி ஏதாவது செய்தியோ... வெளியே அனுப்பிடுவேன்... போடா கிளாசுக்கு..."

அவன் மெல்ல நடந்து போவதையே பார்த்தபடி நின்றார்.

"சார்... இவன் அப்பா பர்மாவிலே ஜெயில்லே இருக்கிறதா ஊர்லே பேசிக்கறாங்க தெரியுமா...? அகப்பட்டதை எல்லாம் சுருட்டிப் பொண்டாட்டி பிள்ளையோட அனுப்பிட்டு அவரும் கிளம்பறபோது மாட்டிக்கிட்டாராம்... பண ரெட்டிப்போ எதுவோ பண்ணி..."

"டீச்சர்... நீங்க கிளாஸ் எடுக்கப் போங்க. பிள்ளைங்க போடுற கூச்சல் ஊர்க் கோடிக்குக் கேக்கும் போல இருக்கு."

"சார்.. உள்ளே வரலாமா...?"

முன்னால் நின்ற இளைஞனை எங்கேயோ பார்த்ததுபோல இருந்தது வேதையா வாத்தி யாருக்கு.

மீசை அரும்பிய முகம் சீனக்களையில்.. மாமாந்தா...

"என்னப்பா... படிக்கிறியா... எந்தக் காலேஜ்லே..."

மாமாந்தா சுமார் அழுக்கான சாய வேட்டி யில் இருந்தான். மேலே சாயம் போன சட்டை.

"படிக்கலே சார்... இங்கே எட்டு கிளாஸ் முடிச்சுட்டுப் போனேனா...? அப்புறம் தொடர்ந்து படிக்க வீட்டு நிலைமை சரிப் படலே..."

வீட்டு நிலைமை? வேதையா வாத்தி யாருக்குப் புரியவில்லை. கைநிறையத் தங்க வளையல் குலுங்க வந்த இவனுடைய அம்மா...

# நடராஜ் எஸ்டேட்ஸ்

## வழங்கும், வாரம் தோறும்



## காய்கறி - திட்டம்

"சாந்திகாம்ப்ளெக்ஸ்", 3 வது மாடி, 26, ரங்கநாதன் தெரு, தி.நகர், சென்னை 600 017.
கிளைகள் : 51, தெற்கு வீதி, திருவாரூர் - 610 002. 2-B, செல்வம் நகர், தஞ்சாவூர் - 613 007.
1-B, காமராஜ் சாலை, காஞ்சிபுரம் - 613 501

**சென்னை நகர வாசிகளுக்கு மட்டும்**

- ★ ரூ. 5,000 செலுத்தி 3 ஆண்டு காலத்துக்கு உறுப்பினர் ஆக வேண்டும்.
- ★ 3 ஆண்டு காலத்துக்கு பிறகு உறுப்பினர் கட்டணத்தை திரும்ப பெற்றுக் கொள்ளலாம்.
- ★ அல்லது மீண்டும் 3 ஆண்டுகளுக்கு புதுப்பித்துக் கொள்ளலாம். (ரினிவல்).
- ★ உறுப்பினர் கட்டணத்துக்கு அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள் அளிக்கும் 12% P.A. வட்டியும் கிடைக்கும்.

உறுப்பினர் கட்டணத்தை நேரிலோ, டி.டி. மூலமாகவோ, காசோலை மூலமாகவோ அளிக்கலாம்.

**இலவசம்**
அழகிய கவர்ச்சிகரமான உறுப்பினர் கார்டையும் அத்துடன் காய்கறி நறுக்கும் S.S. கட்டரையும் முற்றிலும் இலவசமாக பெற்று செல்லுங்கள்



**ஞாயிறு தோறும் சப்ளை**
ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் காலை சூரியன் உதிக்கும் நேரத்தில் எங்கள் விவசாய வளர்ச்சி பிரதிநிதி பசுமையான சத்துமிகுந்த காய்கறிகள் நிறைந்த, அழகிய பாலிதின் மற்றும் சணல் பைகளுடன் உங்கள் வீட்டின் கதவை இன்முகத்துடன் தட்டுவார்.

பூச்சிக் கொல்லி மருந்து, மற்றும் ரசாயன உரங்களை 99% தவிர்க்க முயற்சி செய்கிறோம்.
இயற்கை உரம் இடுவதால் உங்கள் உடல் நலம் முற்றிலும் பாதுகாக்கப்படுகிறது.

## சப்ளை விபரம்

உறுப்பினர்களுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் வாழைக்காய், வெண்டைக்காய், முருங்கைக்காய், பாகற்காய், பீர்க்கங்காய், அவரைக்காய், கோவைக்காய், கொத்தவரங்காய், வெள்ளரிக்காய், பூசணிக்காய், பரங்கிக்காய், சுரைக்காய், புடலங்காய், சுண்டைக்காய், மிளகாய், முள்ளங்கி, பிடிகரணை, முருங்கைக்கீரை, அகத்திக்கீரை, மணத்தக்காளிகீரை, முளைக்கீரை, அரைக்கீரை, வெந்தயக்கீரை, பசலைக்கீரை, புதினாக்கீரை, புளிச்சக்கீரை, பொன்னாங்கன்னிக்கீரை, மாவடு, நெல்லிக்காய், மாங்காய், தேங்காய், வாழைப்பழம், காராமணி, (சில காய்கறிகள் சீசனில் மட்டும் வழங்கப்படும்). வாழையிலை போன்றவை மாற்றி மாற்றி சப்ளை செய்யப்படும்.

**Phone : 4342098, 4840150**

திட்டமிட்ட குடும்பத்துக்கு முடிந்தவரை தேவையான காய்கறிகள் வழங்கப்படும். இயற்கை சீற்றங்களால் ஏதேனும் சேதாரம் ஏற்பட்டாலொழிய எங்கள் சப்ளை ஒருபோதும் நிற்காது. உறுப்பினராக சேர்வதற்கு குறிப்பிட்ட இடங்களே மீதி இருக்கின்றன.

NATARAJ GROUP OF COMPANIES :
NATARAJ FINANCE, NATARAJ CHITS (TAMIL NADU) PVT. LTD., NATARAJ EXPORTS OVERSEAS, NATARAJ OIL MILLS, NATARAJ PUBLICATIONS.

**24 % P.A.**

## 'சுருக் - நறுக்' என்றொரு சொல்லோவியம் - 21

### மகிழ்ச்சி என்பது....

'பட்டாம்பூச்சியைப் போன்றது! துரத்தினால் பிடிபடாது; எதிர்பாராத நேரத்தில் நம் தோளிலேயே வந்து உட்காரும்'. இப்படி ஆங்கிலத்தில் ஒரு விளக்கம் உண்டு. மகிழ்ச்சிக்கு உங்கள் விளக்கம் என்ன...?

'சுருக்-நறுக்' என்று ஒரு சொல் லோவியம் தீட்டுங்கள்; அனுப்பி வையுங்கள்.

பிரசுரமாகும் ஒவ்வொரு சொல்லோவியத்துக்கும் ரூ. 50 பரிசு. இன்னும் ஐந்தே வாரங் களில் முடியப் போகும் இந்தப் போட்டியில் உங்களில் யார் அதிக முறை பரிசுகள் வெல்கிறீர்களோ, அவருக்கு மெகா பரிசாக ஒரு ஜோடி டைடன் கைக்கடிகாரங்கள்!

**முடிவு தேதி : 11.3.96**

ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

- ஆர்

மகிழ்ச்சி என்பது ..............................

..............................

..............................

..............................

..............................

பெயர் : ..............................

முகவரி : ..............................

..............................

..............................

..............................

பர்மாவில் அப்பா... பர்மா ஜுவுலி ஸ்டோர் பெரியப்பா...

"அப்பா ஜெயில்லே இருந்து வந்து ரெண்டாம் கல்யாணம் பண்ணிக்கிட்டு அங்கேயே தங்கிட்டாரு'சார்... கொண்டு வந்த பணத்தை வண்டி வாங்க... நெலம் வாங்க... கடை வைக்கன்னு பெரியப்பா அப்பப்ப வாங்கிக்கிட்டாரு..."

"கடைதான் நல்லா நடக்குது போல இருக்கே...?"

"நடக்குது சார்... ஆனா கைமாறிடுச்சு... பெரியப்பா சினிமா எடுக்கறேன்னு போய் எல்லாம் வித்து அழிஞ்சுது... வீடும் போயி கையிலே காசு இல்லாமே நானும் அம்மாவும் தெப்பக்குளப் பக்கம் குடிசை போட்டுட்டுப் போனோம். படிப்பு நின்னு போய் நான் தச்சாசாரி லச்சுமணன்கிட்டே எடுபிடியாச் சேர்ந்தேன். அம்மா தெருவிலே இட்லிக்கடை போட்டு... போன வாரம் அவங்களும் போய்ச் சேர்ந்தாச்சு..."

தெருவில் இட்லி அவித்து விற்ற பர்மாக் காரி...

"கடைசி வரைக்கும் அப்பா வரப் போறார்னு ரொம்ப நம்பிக்கையா இருந்தாங்க..."

மாமாந்தா கண்கலங்க நின்றிருந்தான்.

"ஓர் உதவி செய்யணும் சார். அரபு நாட்டுலே கார்ப்பெண்டர் வேலைக்கு ஆள் எடுக்கறாங்களாம்... பொறுப்பான ஆளுங்கிட்டே இருந்து நடத்தை சர்ட்டிபிகேட் கேக்கறாங்க... எனக்கு சாரைத் தவிர யாரைத் தெரியும்...?"

"என்னன்னு தர? கிளாஸ்லே பெஞ்சியை எல்லாம் போட்டு உடைச்ச பயன்னு தரட்டா?"

சிரித்தபடி லெட்டர்பேடை எடுத்தார்.

**வே**தையா வாத்தியார் ரிடையராக நாலு நாள் இருக்கும்போது, சின்னப் பையனைக் கையைப் பிடித்துக் கூட்டிக் கொண்டு அந்தப் பெண் படியேறி வந்தாள். கூடவே நாலைந்து பேர்.

"பையனோட அப்பா என் மச்சான் தானுங்க... கல்ப்லே இருக்காரு... ஒண்ணாங் கிளாஸ்லே பையனைப் போடணும்..."

ஃபாரின் சென்டு மணக்க நின்றவள் பேசியபடி முன்னால் நிறுத்திய குழந்தை சினாக்கார சாயலில் இருந்தது.

"இது பிள்ளைக்கு அம்மாங்க..."

அவள் கையில் தங்க வளையல்கள் குலுங்க வணக்கம் சொன்னாள்.

# தனபிரியா

வழங்கும்

## சேமிப்பு திட்டங்கள்

◆ தனயோக ஃபிக்செட் டெபாசிட் திட்டம் ◆

டெபாசிட்களுக்கு 1 கிராம் தங்க காசு வழங்கப்படும்

### க்யூமுலேடிவ் டெபாசிட்

| வருடம் | டெபாசிட் தொகை | முதிர்வு தொகை | வருடாந்திர வட்டி | ஊக்கத் தொகை |
|---|---|---|---|---|
| 12 மாதங்கள் | 10,000 | 13,000 | 30.00% | 2% |
| 24 மாதங்கள் | 10,000 | 16,000 | 30.00% | 2% |
| 36 மாதங்கள் | 15,000 | 30,000 | 33.33% | 3% |

### ஃபிக்செட் டெபாசிட்

| வருடம் | வட்டி | குறைந்தபட்ச டெபாசிட் தொகை | ஊக்கத் தொகை |
|---|---|---|---|
| 12 மாதங்கள் | 25% | ரூ. 5,000/- | 5% |

### பென்ஷனர் மற்றும் முதியோர்

| வருடம் | வட்டி | குறைந்தபட்ச டெபாசிட் தொகை | ஊக்கத் தொகை |
|---|---|---|---|
| 12 மாதங்கள் | 30% | ரூ. 5,000/- | 2% |

### தனபிரியா பாண்ட்

குறைந்தபட்ச முதலீடு ரூ. 25,000/- இரு மடங்காகிறது. 36 மாதங்களில் ரூ. 50,000/-
ஊக்கப் பரிசு : 5 கிராம் தங்க காசு

### தனயோக பாண்ட்

குறைந்தபட்ச முதலீடு ரூ. 50,000/- மும் மடங்காகிறது. 57 மாதங்களில் ரூ.1,50,000/-
ஊக்கப் பரிசு : 10 கிராம் தங்க காசு

### திருமகள் திருமண திட்டம் ரிக்கரிங் டெபாசிட் திட்டம்

ரூ.1000 x 25 மாதங்கள் அல்லது
ரூ. 500 x 25 மாதங்கள்

26ம் மாத துவக்கத்தில் ரூ. 50,000/- அல்லது ரூ. 25,000/- பெற்று 27ம் மாதம் முதல் மாதம் ரூ.1000/- அல்லது ரூ.500/- வீதம் 25 மாதத்திற்கு எந்தவிதமான வட்டி இல்லாமல் திரும்ப செலுத்தலாம் அல்லது ரூ. 25,000/-ஐ மறுமுதலீடு 10 வருட காலத்திற்கு செய்து ரூ.2,32,835 பெறுங்கள்

### ஓய்வுதாரர் நலத் திட்டம்

| | |
|---|---|
| குறைந்தபட்ச முதலீடு | ரூ. 1 லட்சம் அல்லது அதற்கு மேல் |
| காலம் | 6 வருடங்கள் அல்லது அதற்கு மேல் |
| வட்டி விகிதம் | 26 சதவிகிதம் வருடத்திற்கு மற்றும் 1800 சதுர அடியில் வீட்டு மனை திருமுல்லை வாயில் நகரில் இலவசமாக பத்திர பதிவு செய்து வழங்கப்படும் அல்லது ரூ. 15,000/- ரொக்கம் |

DHANAPRIYA INVESTMENTS (INDIA) LIMITED

வட்டி தொகைக்கு முன் கூட்டின காசோலைகள் பின் தேதியிட்டு வழங்கப்படும்

● ஞாயிற்றுக் கிழமையும் அலுவலகம் இயங்கும் ●

**தனபிரியா இன்வெஸ்ட்மென்ட்ஸ் (இந்தியா) லிமிடெட்**

காம்தார் பில்டிங் (2வது மாடி) 143/3. பிராட்வே, சென்னை - 600 108 போன் : 565668

**கார்பரேட் அலுவலகம் :** எண்.34 துரைசாமி சாலை, தி. நகர், சென்னை -17. போன் : 8281116.

"விரைந்து சேருங்கள் மகிழ்ச்சியாக வாழுங்கள்"

# KALKI SHOPPING PAGE


ஸ்ரீரங்கம் பெரியாஸ்ரமம்
ஸ்ரீமத் ஆண்டவன்
ஸ்ரீரங்க ராமானுஜ மகாதேசிகன்
ஸ்வாமிகளின்
பம்பாய் விஜய யாத்திரை பற்றிய
சிறப்புக் கட்டுரைகளுடன்
வெளிவருகிறது...

**கோபுர தரிசனம்**

மார்ச் '96

விலை ரூ.8 ஆன்மிக மாத இதழ்

*உங்கள் பிரதிக்கு இன்றே சொல்லி வையுங்கள்*



ADYAR

**STUDENTS XEROX**

*Quality that is close to perfection*

**XEROX**
**LASER PRINTING**
**WORD PROCESSING**
**DTP**
**ELECTRONIC &**
**MANUAL TYPING**
**BINDING &**
**LAMINATION**



**உங்கள் மூளை ஆற்றலைப் பயன்படுத்துவது எப்படி?**

- படிப்பது எப்படி?
- ஞாபக சக்தியைப் பெருக்குவது எப்படி?
- தேர்வில் அதிகமதிப்பெண்கள் பெறுவது எப்படி?

LEARNING AND MEMORY POWER TECHNIQUES பற்றிய கோர்ஸ் (தமிழில்)

- மூளையின் செயலாற்றல், ஞாபகசக்தியைப் பெருக்கும் விடமின்கள்/தாது உப்புக்கள்/ அமினோ அமிலங்கள்.
- புத்திக் கூர்மையையும் ஞாபக சக்தியையும் பெருக்க ஏராளமான பயிற்சிகள்.
- நினைவாற்றலைப் பெருக்கும் அதிசய உணவுகள்/இயற்கை மூலிகைகள்/ மருந்துகள்
- ஒரு திருக்குறள் மூலம் 1000 ஆங்கில வார்த்தைகள்.
- தேர்வில் அதிக மதிப்பெண்களைப் பெற இரகசியங்கள்.

கல்வியில் சாதனை படைக்க உதவும் ஒப்பற்ற பாடம்!


பள்ளி/கல்லூரி மாணவர்கள் மட்டுமல்ல, தமிழ் படிக்கத் தெரிந்த அனைவரும் இதைப் படித்துப் பயன் பெறலாம்.

♦ கடைகளில் விற்பனை இல்லை.

பதிவுத் தபால் மூலம் தனிப்பிரதி விரும்புவோர் (ரூ.15 தபால் செலவு உட்பட) ரூ. 135 M.O அல்லது D.D (Payable at Ahmedabad)

'INDIAN INSTITUTE OF LEARNING MANAGEMENT' என்ற பெயருக்கு கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

**INDIAN INSTITUTE OF LEARNING MANAGEMENT,**
Post bag No-14, Memnagar (po),
Ahmedabad - 380052.






1996 மார்ச் 3
யுவ மாசி 20
மலர் : 54
இதழ் : 31

# கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



## ஏழைகள் வயிற்றிலடிக்கும் 'ஜெ' அரசு!


**கி**ணறு வெட்ட பூதம் புறப்பட்டது என்பார்கள். தமிழ்நாட்டிலோ கிணறு வெட்ட, ஒரு பூதமல்ல... அடுத்தடுத்து ஊழல் பெரும் பூதப்படையே வெளிப்பட்டு நம்மைத் திணறடிக்கிறது.

லேட்டஸ்டாகக் கிளம்பியுள்ளன இரு விகார பூதங்கள்.

சென்னை, உஸ்மான் ரோடில் குடிசை மாற்று வாரியத்துக்குச் சொந்தமான ஜெ. ஜெயலலிதா மாளிகையின் இரு தளங்கள், அடிமாட்டு விலைக்கு, குமரன் சில்க்ஸ் நிறுவனத்துக்கு விற்கப்பட்டுள்ளன.

இந்த ஊழல் குறித்து, பொதுநல நோக்கில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. எனவே, வழக்குத் தொடுத்துள்ள ரூஸோவைப் பாராட்டுவதற்கு மேலாக நாம் இது விஷயத்தில் வேறு கருத்துக் கூற முடியாது. எவ்வகை எதிர்ப்புக்கும் அடி, உதை, வன்முறையே பதிலாகிவிட்ட ஒரு காலகட்டத்திலும் துணிந்து செயல்பட்டிருக்கும் ரூஸோ சுத்த வீரர்தான்.

இரண்டாவது விகார பூதம், அமைச்சர் இந்திரகுமாரி தொடர்பானது. இலவச வேட்டி சேலை விநியோகத்தில் தில்லுமுல்லு நடந்திருப்பதாகவும்; தமிழ்நாடு




பஞ்சாலைக் கழகத்தின் கணக்குகளை வருமான வரித்துறை ஆராய்ந்து, அநியாயக் கையாடல்கள் நடந்திருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளதாகவும் சட்டசபையில் பிரச்னை எழுப்பப்பட்டது. கைத்தறி மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் என்கிற முறையில் இந்தக் குற்றச்சாட்டுகளை அடியோடு மறுத்தார் இந்திரகுமாரி.

ஆனால், சட்டசபையில் கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் அவ்வளவும் உண்மை என்பதை மறுநாளே வந்த செய்திகள் உறுதிப்படுத்திவிட்டன.*


கலால் வரித் துறையினர் சில சோதனைகளை மேற்கொண்டபோதுதான் பஞ்சாலைக் கழகத்தின் பிரும்மாண்ட ஊழல்கள் வெளிப்பட்டிருக்கின்றன. வருமான வரித்துறை அதிகாரிகளும் வந்து சோதனைகள் நடத்த, அவற்றில் வெளிப்பட்டிருக்கும் உண்மைகள் அளவற்ற அதிர்ச்சியூட்டுகின்றன!

பஞ்சாலைக் கழகம், மாநில கூட்டுறவு சங்கங்களிடமிருந்துதான் நூல் வாங்க வேண்டும் என்பதும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில்தான் கணக்கு வைத்துக் கொள்ள வேண்டும் என்பதும் விதிகள். இந்த விதிகள் பட்டவர்த்தனமாக மீறப்பட்டுள்ளன. தனியாரிடமிருந்து நூல் வாங்கப்பட்டிருக்கிறது - அதுவும் மிக அநியாயமான விலைக்கு. நூல் 'சப்ளை' செய்த தனியார்கள், வங்கிகளின் 'ஆசி'யுடன் கொள்ளை லாபம் கண்டிருக்கிறார்கள். நூலே வாங்காமலும் வாங்கியதாகப் பொய்க் கணக்கு எழுதி, பணம் கையாடப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட ஐம்பது கோடி ரூபாய்க்கு இத்தகைய ஊழல்கள் நடைபெற்றிருப்பதாக அனுமானிக்கப் பட்டுள்ளது.

இவ்வாறு ஊழல் நடந்துள்ளதற்கான ஆதாரத்தையே பத்திரிகைகளுக்குச் சமர்ப்



* இந்தச் செய்திகள் ஆதாரமற்றவை என்று இந்திரகுமாரி சட்டசபையில் மறுத்துப் பேசியதாக, தலையங்கம் அச்சேறும் தினத்தில் செய்தி வெளியாகியிருக்கிறது.




பித்திருக்கிறார் தி.மு.க. தலைவர் கருணாநிதி. பருத்தி நூலுடன் துளியும் தொடர்பில்லாத வேறு துறை தொழிலதிபர் ஒருவருடைய நிறுவனப் பெயரைப் பயன்படுத்தி அவரிடமிருந்து நூல் வாங்கப்பட்டதாகப் பொய்க் கணக்கு எழுதப்பட்டிருக்கிறது. அந்த நபர் ஒரு தி.மு.க. பிரமுகர் என்பதைக் கூட கவனத்தில் கொள்ளாமல் கொள்ளையில் குறியாக இருந்திருக்கின்றனர் அ.தி.மு.க.வினர்.

இவையெல்லாம் ஆளும் கட்சியின் அகம்பாவத்துடன் கூடிய அராஜகப் போக்குக்கு வலுவான சாட்சியங்கள்.

ஏழைகளுக்கு இலவச வேட்டி, சேலை தருவதென்பதே கண்துடைப்புதான். அவர்களிடம் சுரண்டிப் பெறப்படும் வரிப்பணத்திலிருந்துதான் அந்த 'இலவசங்கள்' வாங்கப்படுகின்றன. அவற்றை வாங்குவதிலும் ஏமாற்றும் பித்தலாட்டமும் நடக்கிறது என்பது அந்த ஏழை மக்களுக்கு ஜெயலலிதா அரசு செய்யும் மாபெரும் துரோகம். சட்டமன்றத்தில் ஊழல் குற்றச்சாட்டுகளை மறுத்துப் பொய் பேசுவதோ ஜனநாயகத்துக்கே இழைக்கும் துரோகம்.

இப்படிப்பட்ட ஓர் அரசை இன்னமும் ஆட்சியில் நீடிக்க அனுமதிக்கலாமா?

'தேர்தலுக்குச் சில மாதங்களே உள்ள நிலையில் ஒரு 'டிஸ்மிஸ் டிராமா' தேவையா?' என்று வாதிடலாம். ஆனால், கட்சி மாநாட்டின்போதே அதிகார துஷ்பிரயோகம் அமோகமாக நடைபெற்றிருப்பதைப் பார்க்க, 'தேர்தல் சமயத்தில் எத்தகைய அநியாயத்துக்குத்தான் துணிய மாட்டார்கள்?' என்று கேட்கச் செய்கிறது. எனவே இந்த அரசு, தேர்தலின்போது ஆட்சியிலிருப்பது, எல்லா அபாயங்களிலும் மேலான அபாயம்!

**என்.டி.ஆரின் மறைவுக்குப் பிறகு, மக்கள் செல்வாக்கு யாருக்கு? லட்சுமி பார்வதிக்கா அல்லது சந்திரபாபு நாயுடுவுக்கா? அண்மையில் விஜயவாடாவில் நடந்த 'சிம்ம கர்ஜனா'வுக்குச் சென்று பல்வேறு தலைவர்களுடனும் தொண்டர்களுடனும் பேசிப் பார்த்தபோது.... (அன்று சிவபார்வதி, ஆங்கிலப் பத்திரிகையாளர்கள் உள்பட யாருக்கும் சிறப்புப் பேட்டியளிக்கவில்லை!)**

# ஆவேச அம்மகாரு!

"மேடம் (லட்சுமி பார்வதி) தலையில் 'முக்கு' (முக்காடு) போட்டுக் கொண்டு ஆந்திரா முழுவதும் சுற்றி வந்தாலே போதும்; மகத்தான மக்கள் எழுச்சி உண்டாகும். அந்த எழுச்சி அலையில் சந்திரபாபு நாயுடு காணாமல் போய் விடுவார்!" என்று சொன்னார் கிழக்கு கோதாவரி மாவட்டம் மும்முடிவாரப் பகுதியைச் சேர்ந்த தெலுங்கு தேச பிரமுகரான ஆனந்த சாகர்.

பதினேழு பஸ்கள், எட்டு கார்களில் தமது பகுதியிலிருந்து தொண்டர்களை விஜயவாடாவில் (15.2.96–ல்) நடந்த சிவபார்வதியின் 'சிம்ம கர்ஜனை'க்கு அழைத்து வந்திருந்தார் அவர்.

"எல்லாச் செலவும் கட்சி தானா?"



• நாய்க்குலத்தின் ஆதரவு...

"நோ... நோ... எனக்கு வசதியிருக்கிறது. என் சொந்தச் செலவில்தான் தொண்டர்களை அழைத்து கொண்டு வந்திருக்கிறேன்" என்று அவசரமாக மறுத்தார் ஆனந்த சாகர்.

இவரைப் போன்று நூற்றுக்கணக்கான தெலுங்கு தேச பிரமுகர்கள் ஆயிரக்கணக்கான தொண்டர்களுடன் லட்சுமி(சிவ) பார்வதிக்கு ஆதரவாக விஜயவாடாவுக்குத் திரண்டு வந்ததால், அந்த நகரம் கொஞ்சம் 'மிரண்டு' போய் விட்டது என்று தான் சொல்ல வேண்டும்.

"என்.டி.ஆரின் தெலுங்கு தேசக் கட்சிக்குச் சொந்தம் கொண்டாட சந்திரபாபு நாயுடுவுக்குக் கொஞ்சம் கூட உரிமை கிடையாது. அம்மகாருவும், டகுபதி வெங்கடேஸ்வர ராவும் (மருமகன்) தான் உண்மையான வாரிசுகள்!" என்று சொன்னார் சித்தூர் மாவட்ட பிரமுகரான சந்திரசேகர ரெட்டி.

இத்தனை ஆதரவிருந்தும் என்.டி.ஆரைக் கவிழ்த்துவிட்டு சந்திரபாபு நாயுடுவால் எப்படி ஆட்சியைக் கைப்பற்ற முடிந்தது?

"என்.டி.ஆர்.(1994ல்) ஆட்சிக்கு வந்தவுடன் மதுவையும், சாராயத்தையும் அறவே ஒழித்தது சாராய ஆலை அதிபர்களின் பிழைப்பை மிகவும் பாதித்து விட்டது. அதனால் அவர்கள் ஒன்று சேர்ந்துகொண்டு, சமயம் பார்த்து பணத்தைத் தண்ணீராகச் செலவழித்து என்.டி.ஆரிடம் இருந்து ஆட்சியைப் பறித்து விட்டார்கள். என்.டி.ஆர். முதல்வராக இருந்த போது

சம்பாதிக்க முடியாத நிலையில் இருந்த தெலுங்கு தேச சட்டமன்ற உறுப்பினர்களும் 'டக்'கென்று மாறி விட்டார்கள். இப்போது காண்ட்ராக்ட், கமிஷன் என்று அவர்கள் பாடு கொண்டாட்டமாகவே இருக்கிறது" என்று கூறினார் விஜயவாடாவில் நாம் சந்தித்த மூத்த பத்திரிகையாளர் ஒருவர்.

என்.டி.ஆர். முதல்வராக இருந்த போது லட்சுமி பார்வதியின் அதிகப் பிரசங்கித்தனமான குறுக்கீடுகளினால் பெரும்பாலான தெலுங்கு தேச சட்டமன்ற உறுப்பினர்கள் அதிருப்தி அடைந்திருந்தார்கள் என்பதும் உண்மைதான். புத்திசாலியும் தந்திரவாதியுமான நாயுடு, அந்த அதிருப்தியைப் பயன்படுத்திக் கொண்டார்.

1982ல் கட்சியைத் துவங்கிய என்.டி.ஆர். 83ல் முதல் தேர்தலைச் சந்தித்தார். அந்தத் தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்டு தெ.தே. கட்சியிடம் தோற்றவர்தான் சந்திரபாபு நாயுடு. சென்னா ரெட்டியின் சிஷ்ய கோடிகளில் ஒருவர். தேர்தலில் தோற்றவுடன் மாமனார் (என்.டி.ஆர்) கட்சியில் இணைந்து விட்டார். அவரும், மற்றொரு மருமகன் டகுபதியும் சேர்ந்து கொண்டு, மாமனாருக்குப் பக்க பலமாக நின்று கட்சியை வளர்த்தனர். தேர்தலில் கட்சி தோற்றபோது, கட்சிக்குள் என்.டி. ஆருக்கு அடுத்தபடியாகச் செல்வாக்குடன் இருந்த உபேந்திராவை, கட்சியை விட்டு ஓட வைத்தார்கள்.

ஆட்சியை ஸ்திரப் படுத்திக் கொள்ளவும் செல்வாக்கை வளர்த்துக் கொள்ளவும் புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளார் நாயுடு. ப்ரஜா வடக்கு பாலன் (அரசு மக்களிடம் செல்லுதல்) 'ஷ்ரம்தான்' (வளர்ச்சிப் பணியில் அவரவர் பங்கைச் செலுத்துதல்) ஆகிய திட்டங்கள் மக்களிடம் எடுபடவும் துவங்கியிருக்கின்றன. ஆந்திராவில் செல்வாக்கு மிக்க பத்திரிகை முதலாளியான ராமோஜிராவ், நாயுடுவை ஆதரிக்கிறார். தவிர, நில உடமையாளர்களான 'கம்மா' வகுப்பினரும் நாயுடுவுக்குப் பக்க பலமாக இருக்கிறார்கள். போதாததற்கு நடிகை ஜெயப்பிரதாவும், நடிகர் மோகன் பாபுவும், 'நாயுடு ஜிந்தாபாத்' என்றே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லாவற்றையும் விட, ஆட்சியாளர்கள் தயவுடன் கள்ளச்சாராயமும், மதுவும் தட்டுப்பாடின்றிக் கிடைத்துக் கொண்டிருப்பதால் குடிமகன்கள் மிகவும் சந்தோஷத்தில் இருக்கிறார்கள். எழுபது சதவீத மக்களின் ஆதரவு நாயுடுவுக்கே இருக்கிறது என்று சமீபத்தில் எடுக்கப்பட்ட ஒரு கருத்துக் கணிப்புக்கூட சொல்கிறது. நிர்வாகத் திறமைக்காகவும் புகழப்படுகிறார்!

"இருந்தும் கடந்த மாதத்தில் வாரங்கல், குண்டூர் ஆகிய நகரங்களில் அவர் நடத்திய மாநாட்டுக்கு மிகக் குறைவான கூட்டம் தானே வந்தது!" என்று சுட்டிக் காட்டுகிறார்கள் பார்வதியின் ஆதரவாளர்கள். அதனால் மக்கள் ஆதரவு தங்களுக்குத் தான் என்பது அவர்கள் வாதம்.

சிவபார்வதி கட்சிக்குக் கிடைத்துள்ள இன்னொரு டானிக் 'டகுபதி'. மூத்த மருமகனான இவர், முதலில் நாயுடுவோடு சேர்ந்து கொண்டு ஆட்சியைக் கவிழ்த்தாலும் பிறகு, மனம் திருந்தி மாமனார் பக்கமே வந்து சேர்ந்து விட்டவர்.

கடந்த(94) தேர்தலின் போது ஆந்திரா முழுவதும் போய் என்.டி.ஆருடன் பிரசாரம் செய்ததால் தெலுங்கு தேசத் தொண்டர்களுடன் நல்ல பரிச்சயம் இருக்கிறது டகுபதிக்கு.

இவர் தவிர தேவனேரி ராஜசேகர், முத்து கிருஷ்ணா நாயுடு போன்ற நல்ல ஆர்கனைசர்கள் பார்வதியின் பக்கமே இருக்கிறார்கள். லட்சக்கணக்கான தொண்டர்களோடு 'சிம்ம கர்ஜனை' வெற்றி பெற்றதற்கு முக்கிய காரணம் தேவனேரி ராஜசேகர்தான் என்கிறார்கள்.

என்.டி.ஆரைக் கவிழ்த்தபோது, 'எல்லா முடிவுகளையும் கலந்து விவாதித்தே எடுப்பேன்' என்று சொல்லிய நாயுடு, பிறகு, தன்னிச்சையாகவே செயல்பட ஆரம்பித்து விட்டார் என்பது டகுபதியின் குற்றச்சாட்டு. தாம் நாயுடு பிரிவிலிருந்து வெளியில் வந்ததற்கான காரணமாக அவர் சொல்லுவதும் இதைத்தான். இப்போது இதே போல மேலும் சிலர் நாயுடு பிரிவில் புழுங்கிக் கொண்டிருப்பதும் பார்வதி பக்கத்திற்கு வலு



• 'டகுபதி'



• பாஸ்வான்



• ஷரத் யாதவ்



• ஜெய்பால் ரெட்டி

சேர்க்கக் கூடிய விஷயம்.

இந்த பயத்தில்தானோ என்னவோ, ராஜ்ய சபை தேர்தலுக்கு முந்தைய தினம் தமது பிரிவு எம்.எல். ஏக்களையெல்லாம் 'காவலில்' வைத்து விட்டார் நாயுடு! அப்படியும் அவர் நோக்கம் நிறைவேறவில்லை. என்.டி..ஆர். பிரிவைச் சேர்ந்த வெங்கடேஸ்வர ராவ் ஜெயித்து விட்டார்.

**மா**லையில் நடந்த சிம்ம கர்ஜனைக்கு காலையிலேயே வந்து ஹோட்டலில் தங்கி யிருந்த பார்வதியைச் சாரி சாரியாகத் தொண் டர்களும் பிரமுகர்களும் வந்து சந்தித்துக் கொண்டே இருந்தார்கள். வந்திருந்தவர்களின் நோக்கம், தேர்தலில் சீட் வாங்க வேண்டு மென்பதுதான். இது பளிச்சென்று தெரிந்தது. அவர்கள் சொல்வதையெல்லாம் 'அவுனு,



• பிரம்மாண்ட கூட்டம்...

அவுனு' என்று கேட்டுக் கொண்டிருந்தார் பார்வதி.

என்.டி..ஆர். பற்றிக் குறிப்பிடும் போதெல் லாம் ஸ்விட்ச் போட்டு லைட் எரிவது போன்று கண்களில் நீர் கோர்த்துக் கொண் டது. கர்ஜனை கூட்டத்தின் போதும் அப்படித் தான். மாபெரும் கூட்டத்தைப் பார்த்ததும் கண்களில் கண்ணீர். "குங்குமத்தோடு வந்திருக்க வேண்டிய நான் இன்று விதவையாக உங்கள் முன் நிற்கிறேன்" என்று கூறி விட்டு புடைவைத் தலைப்பில் கண்களைத் துடைத் துக் கொண்டார் பார்வதி! அப்புறம் ஆவேச மான பேச்சு. பிறகு கூட்டத்தினரைப் பற்றிக் கேட்பானேன்!

**சி**வபார்வதிக்கான கூட்டம் பிரம்மாண் டமாக இருந்தாலும் அனைத்திந்திய அளவி லான தலைவர்களின் ஆதரவு என்பது என்.டி.ஆருக்கு இருந்தது போலவே இப்போதும் இருக்கிறதா?

'சிம்ம கர்ஜனா' கூட்டத்துக்கு வந்திருந்த பாஸ்வானும் சரத்யாதவும் ஜெய்பால் ரெட்டியும் "பார்வதி தலைமையிலான கட்சி தான் உண்மையான தெலுங்கு தேசக் கட்சி" என்று கூறினாலும் வி.பி. சிங் வரவில்லை. முதலில் வருவதாகச் சொன்ன லல்லுபிரசாத் கடைசி நேரத்தில் வராமல் போய்விட்டார்!

இருப்பினும், "ஜனதா தளத்திற்கு பார் வதியை ஆதரிப்பதைத் தவிர வேறு வழி கிடையாது. நாங்கள் கை குலுக்காவிடில், காங்கிரஸும், பா.ஜ.க.வும் வந்து ஒட்டிக் கொண்டு விடும்!" என்று நம்மிடம் சொன்னார் பாஸ்வான்.

"வரும் பாராளுமன்றத் தேர்தலுக்குள் பார்வதி அணியும் நாயுடு அணியும் ஒன்று பட்டால் பிரச்னையே இல்லை. காங்கிரஸுக்கு சம்மட்டி அடி கொடுப்போம்!" என்றார் சரத் யாதவ்.

ஆயினும் 89ம் ஆண்டு அ.தி.மு.க. பிளவுற்ற போது தமிழகத்தில் நடந்த நான்கு முனைப் போட்டியில் தி.மு.க. வென்ற மாதிரி, தெலுங்கு தேச பிளவு காரணமாக, வரும் தேர்தலில் நாங்கள் வெற்றி பெற்று விடலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் காங்கிரஸ் காரர்கள். சந்திரபாபு நாயுடுவும் பழைய பாசத்தில் தங்களுடன் கூட்டுச் சேருவார் என்றும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பிரதமரின் மகன் ராஜேஸ்வரராவ் கூட நாயுடுவுடன் மிக நெருக்கமாகவே இருக் கிறாரம்!

**எ**ன்.டி.ஆர். உயிருடன் இருந்த போது பாபுவை மன்னிக்க அவர் தயாராக இல்லை. சொல்லப் போனால், தேர்தல் கமிஷனிடம் தாக்கல் செய்திருக்கும் மனுவில் தாம் ஆரம்பித்த தெலுங்கு தேசக் கட்சியின் மீது உரிமை கொண்டாட சந்திரபாபு நாயுடுவுக்கு முகாந்திரமே கிடையாது என்று சொல்லி யிருக்கிறார்; முதுகில் குத்தியவர்; துரோகி என்றெல்லாம் சாடியிருக்கிறார். இதன் காரண மாகவே தெலுங்கு தேசத் தொண்டர்கள், இயல்பாகவே பார்வதியின் பக்கம் அணி வகுத்து நிற்கிறார்கள். "ஜெயலலிதா மாதிரியே 'அம்மகாரு'வும் வெற்றி வாகை சூடுவார்" என் றும் சொல்கிறார்கள்.

1988ல் இதே விஜயவாடாவில் தெலுங்கு தேச மாநாடு ஒன்று நடந்தது. அப்போது என்.டி. ஆர். 'தெலுங்கு தேசத்தைத் துவக்கியவன் நான். ஆதலால் என் மரணத்தோடு கட்சியும் மறைந்து விடும். எனக்கு வாரிசு என்ற பேச்சுக்கே இட மில்லை' என்று சொல்லியிருந்தாலும் கூட "அப் போது 'அம்மகாரு'வை அவர் மணந்து கொள்ள வில்லை; மணந்து கொண்டிருந்தால் தமது வாரிசாக லட்சுமி பார்வதியை நிச்சயம் சொல்லியிருப்பார்" என்றே தொண்டர்கள் கருதுகிறார்கள். இதுவே லட்சுமி பார்வதிக்கு இருக்கும் மிகப் பெரிய செல்வாக்கு!

**- ப்ரியன்**

அட்டை வண்ணப்படங்களும்
படங்களும் : **கிருஷ்ணமூர்த்தி**

# ஸ்ரீ கந்தசுவாமி

## பர்மனென்ட் பண்டு லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம் துவக்கம் 1990

பதிவு அலுவலகம்: 60, சாமி பண்டாரம் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2. ph: 848917

கிளை அலுவலகம்: 36, ஜீனிஸ் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை-600 015. போன்: 459569



கந்தகோட்டம் ஸ்ரீமுத்துக்குமாரசுவாமி

### பிக்சட் டிபாசிட்

| 46நாள் | 3மாதம் | 6மாதம் | ஆண்டு | 2ஆண்டு | 3ஆண்டு | 4ஆண்டு | 5ஆண்டு |
|---|---|---|---|---|---|---|---|
| 13% | 14% | 15% | 17% | 18% | 18.5% | 19% | 20% |

**21%**

5 வருடங்கள் ரூ.50,000/- அதற்கு மேலும்

**PB பாண்டு**

| முதலீடு | காலம் | திரும்பப் பெறும் தொகை |
|---|---|---|
| ரூ. 25,000 | 60 மாதம் | ரூ. 70,000 |

### சொத்துக்கள் மீது கடன்

- ❑ வீடு / ஃப்ளாட் பேரில் கடன் வழங்கப்படும்.
- ❑ மாத வட்டி ரூ. 1.85 மட்டுமே
- ❑ விரைந்த சேவை.
- ❑ சென்னை மாநகராட்சி எல்லைக்குள் இருக்க வேண்டும்.



### நகைக்கடன்


- ❑ குறைந்த வட்டிக்கு கிடைக்கும்
- ❑ 10 கிராமுக்கு ரூ.3000 வழங்கப்படும்.
- ❑ R.D. கட்டத் தேவையில்லை
- ❑ எந்த சார்ஜும் வசூலிப்பதில்லை



**பாதுகாப்புப் பெட்டக வசதியும் உண்டு.**

## பென்ஷனர் நலத்திட்டம்

**20% P.a** ரூபாய் 10 ஆயிரமும் அதற்கு மேலும் காலம் 1 ஆண்டு வயோதிகர், விதவைகள், ஊனமுற்றோர், கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.



சேர்மன்:

**P. பாலசுப்பிரமணியம்,** B.Sc.,
முதன்மை அறங்காவலர்
கந்தகோட்டம்,
சென்னை-600 003.
நிர்வாக இயக்குனர் :
பார்க் டவுன் பெனிபிட்
பண்டு லிட்.


இயக்குநர்கள் குழு

R.விவேகானந்தன் B.Com.,
(Chairman : Park Town Benefit Fund Ltd.)
A.சுப்பிரமணியன்
V.சண்முகவடிவு B.A.,
V.விஜயகோபால் B.Com., D.C.P.
M.ராஜேந்திரன்
P.ஏகாம்பரம்

பங்குதாரர்களுக்கு மட்டும்

H.O. Friday Holiday (It is a P.B. Group Concern) B.O. Tuesday Holiday

# KALKI SHOPPING PAGE

## தமிழ் மூலம் தபாலில் கம்ப்யூட்டர் பயிற்சி

கம்ப்யூட்டர் பயில அரிய வாய்ப்பு?

வீட்டிலிருந்து கொண்டே தபாலில் கம்ப்யூட்டர் பயிற்சி பெறலாம். மிகக் குறைந்த கட்டணத்தில் ஒரு புதிய முயற்சி உங்களுக்காக! கிராமத்தில் இருக்கிறீர்கள், நகரத்திற்கு சென்று படிக்க வேண்டும் என யோசிக்கிறீர்களா ? பள்ளியில் கம்ப்யூட்டர் பயிற்று விக்கிறார்கள், ஆனால் புரியவில்லை என வருந்து கிறீர்களா? அலுவலகத்தில் கம்ப்யூட்டர் இருக்கிறது. ஆனால் பயன்படுத்த முடியவில்லை என வருந்துகிறீர்களா? உங்கள் தொழிலில் கம்ப்யூட்டரை பயன் படுத்த ஆசை? ஆனால் கம்ப்யூட்டரை பற்றி தெரியாது. நேரில் போய்ப் படிக்க நேரமில்லை என வருந்து கிறீர்களா? உடனே ரூ. 2/- தபால் தலையுடன் தொடர்பு கொள்க.

N. ரவிசாகர் AMIE, MSc, B.Ed, PGDCA,
DIRECTOR

சன்ஸி கம்ப்யூட்டர் செண்டர்

29, ஜீனிஸ் ரோடு சைதை சென்னை-15.
☎ : 459576

Silverline

## மணமக்கள் தேவை
## கம்ப்யூட்டர் ஜாதகம்

அனைத்துசமூகத்திலும், ஆயிரக்கணக் கான வரன்கள் பெற உடன் பதிவு செய்ய தொடர்பு கொள்ளவும்.

கம்ப்யூட்டர் ஜாதகங்கள் நொடிப் பொழுதில்

| | |
|---|---|
| ஆங்கிலம், தமிழ் | ரூ. 50/- |
| எதிர்கால கணிப்புடன் | ரூ.150/- |
| ஆண்டு பலன் : | ரூ. 50/- |
| கல்யாண பொருத்தம் : | ரூ. 50/- |
| NUMEROLOGY PREDICTIONS : | Rs. 50/- |

CONSULT DIVINE ASTROLOGER
BRAHMASRI THETHIYUR S.V. SASTRY
WITH PRIOR APPOINTMENT.

ASTROLOGY SOFTWARE FOR SALE

## ஸ்வயம்வராலயா

(GOVT. REGD)

18, ஸ்டேஷன் ரோடு, மேற்கு மாம்பலம்,
சென்னை – 33. போன் : 425822, 4846427
7–ஏ, சாந்தி விஹார் காம்ப்ளக்ஸ், லஸ்,
சென்னை – 4. போன்:846278,
88, 1, 16th Cross, 6th Main, Malleswaram,
Bangalore - 560 055. Ph.:3340146

NELLAI BENEFIT FUND LIMITED MADRAS

## நெல்லை பெனிபிட் பண்ட் லிமிடெட்

26, ரங்கநாதன் தெரு, முதல் மாடி, தி.நகர், சென்னை-17.
4345178

***பரிசு! பரிசு! பரிசு!***
***14 கிராம் தங்க செயின்***

1. பிக்சட் டெபாசிட் 21% + 3% போனஸ்
2. பென்ஷனர் டெபாசிட் 22% + 3% போனஸ்
3. கல்வி உதவி டெபாசிட் 24% + 3% போனஸ்

4. கரேகா டெபாசிட் :


| செலுத்தும் தொகை ஒரு தரம் மட்டும் | காலம் | முதிர்வு தொகை |
|---|---|---|
| ரூ. 1000 | 23 வருடம் | ரூ. 1,00,000 |

5. பிறந்த நாள் டெபாசிட் :

| செலுத்தும் தொகை ஒரு முறை மட்டும் | வருடம் தோறும் பிறந்த நாள் அன்று | திருமணத்தின் போது கிடைக்கும் தொகை |
|---|---|---|
| ரூ. 4250 | ரூ. 1000 | ரூ. 5000 |

6. வாரிசுதாரர் டெபாசிட் :

| ஒருமுறை செலுத்தும் டெபாசிட் | காலம் | மாதாமாதம் பெறும் தொகை |
|---|---|---|
| ரூ. 10,000 | 180 மாதம் | ரூ. 7,500 |
| | 300 மாதம் | ரூ. 15,000 |



*வீடு நிலம் தங்க நகைபேரில் கடன் வழங்கப்படும்*

# மெய்சிலிர்த்த அனுபவங்கள் :



## திருவடி தரிசனம்!

கடந்த ஐந்தாண்டுகளாக, புரட்டாசி மாதத்தின் கடைசி வாரத்திலோ அல்லது ஐப்பசி மாத முதல் வாரத்திலோ திருப்பதி போய், அடிவாரத்திலிருந்து திருமலை வரை பாத யாத்திரையாகவே சென்று வேங்கடேசப் பெருமாளைத் தரிசித்துத் திரும்புவது வழக்கம். கடந்த முறை அலுவலகத்தில் விடுமுறை கிடைக்காததால் செல்ல முடியவில்லை. நாட்கள் செல்லச் செல்ல திருமலை செல்லாத ஏக்கம் அதிகமானது. உறக்கத்திலிருந்து விடுபடும் மறுகணமே வேங்கடேசப் பெருமாளின் திருவடிகள் நினைவுக்கு வந்து விடும்.

ஒருவழியாக ஒரு மாதம் கழித்து விடுமுறை கிடைக்கவே திருப்பதி சென்றேன். பெருமாளின் நாமத்தை உச்சரித்துக் கொண்டே மலையேறித் திருமலையை அடைந்த போது இரவு ஏழு மணி. போய்ச் சேர்ந்தவுடனேயே மறுநாள் அதிகாலை சுப்ரபாத சேவைக்கான டிக்கெட் வாங்கி விடுவது வழக்கம். அன்று போய்க் கேட்ட போது டிக்கெட் தீர்ந்து விட்டதாகச் சொன்னார்கள். ஆயினும் காலை 5:30 மணி சேவைக்கு வேண்டுமானால் டிக்கெட் தருவதாகச் 'சொன்னார்கள். சரியென்று வாங்கிக் கொண்டேன். இரவு தூங்கி மறுநாள் வெள்ளிக் கிழமை அதிகாலையில் விழித்த போதும் பெருமாளின் திருவடிகளே நினைவுக்கு வந்தன!

மொட்டை போட்டுக் குளித்து விட்டுத் தரிசனத்துக்குச் சென்ற போது என்னே ஆச்சரியம்! என் கனவிலும் நினைவிலும் தெரிந்த அதே மாதிரியான திருவடிகளே பெருமாள் திருவடிகளாக இருக்கக் கண்டு மெய்சிலிர்த்துப் போனேன். விசாரித்த போதுதான் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் காலை 5:30 மணிக்கு நடைபெறும் சேவையின் போதுதான் பெருமாளின் நிஜபாதங்களைக் காண்பிப்பார்கள் என்றும் மற்ற சேவைகளின் போது அலங்காரமான திருவடிகளை மட்டும்தான் தரிசிக்க முடியுமென்றும் தெரிந்த போது, பெருமாளின் கருணையை எண்ணி மேலும் நெகிழ்ந்து போனேன்.

*– மலை. பழ.' மணிகண்டன், கோட்டூர்.*

## பச்சைக் கல் மோதிரம்!

ஒருநாள் மாலை ஏழு மணியளவில் எழும்பூரிலுள்ள 'மோத்திபாபா' தர்காவின் ஒரு மூலையில் அமர்ந்து மனதுக்குள் திருக்குர்-ஆனை ஓதிக் கொண்டிருந்தேன். திடீரென்று என் கைகளில் ஐஸ் வைப்பது போன்ற உணர்வு. கண் விழித்த போது, "அஸ்ஸலாமுன் அலைக்கும்" என்றார் ஒரு முதியவர். நானும் பதில் வணக்கம் சொல்லியபடியே எழுந்து நின்றேன்.

வெள்ளை நிறக் குல்லாயும் தாடியுமாக இருந்த அப் பெரியவர் தம் கையில் போட்டிருந்த பச்சைக் கல் மோதிரம் ஒன்றைக் கழற்றி என் விரலில் போட்டு விட்டார். எனது அதிர்ச்சியை மறைத்துக் கொண்டு, "தாங்கள் வேறு யாரையோ நினைத்து..." என்றேன் தயங்கியபடியே.

"இல்லை தம்பி.. உனக்குத்தான் இது.."

"நான் சமீப காலமாக மோதிரம் போடுவதில்லை..."

"பயப்படாதே. இது தங்கமல்ல. கல் மட்டும் மக்கா வரை சென்று வந்தது. உனக்கு நன்மை கிடைக்கும்."

"பணம் ஏதாவது கொடுத்து விடுகிறேனே இதற்கு..."

"அல்லாவே, வேண்டாம்..." என்றவர், பிறகு "ஒன்றே கால் ரூபாய் கொடு!" என்று வாங்கி உண்டியலில் போட்டு விட்டுச் சென்று விட்டார்.

சில மாதங்களுக்கு முன்பு, பச்சைக் கல் மோதிரம் போட்டால் என் எழுத்துக்கு நல்ல அங்கீகாரம் கிடைக்கும் என்று பெரியவர் ஒருவர் சொல்லியதை அப்போது நினைத்துக் கொண்டே வீடு திரும்பினேன். பிறகு 'பஃடா' என்ற அமைப்பின் மாநில அளவிலான கவிதைப் போட்டியில் எனக்கு முதல் பரிசு கிடைத்த போது, அந்தப் பெரியவர் எனக்கு மோதிரம் அணிவித்ததை நினைத்துச் சிலிர்த்துப் போனேன்.

*- சே. அப்துல் லத்தீப், விழுப்புரம் – 2.*

இந்தத் தொடரின் கடைசிப் பகுதிக்கு இப்பொழுது வந்து விட்டோம். சுதந்திர இந்தியா வின் முதல் பேட்ச் ஐ.பி.எஸ். ஆபீசர்களுள் ஒருவனாகப் பணியில் நுழைந்து, காகிநாடா வில் கான்ஸ்டபிள் பயிற்சி பெற்றதில் தொடங்கி, சி.பி.ஐ.யின் இயக்குநராக இருந்து சந்தித்த அனுபவங்கள் வரை பல விஷயங் களை வாசகர்களுடன் பகிர்ந்து கொண்டு விட்டேன்.

மற்ற துறையினருக்குக் கிடைக்காத பல பிரத்தியேக அனுபவங்கள், காவல் துறையில் இருப்பவர்களுக்கு மட்டும் கிடைக்கும். காரணம், சமூகத்தின் உயர் மட்டத்தில் இருப்பவர்களிலிருந்து, அடிமட்டத்தவர் வரையிலும், தலை வர்களிலிருந்து, தொண்டர்கள் வரை யிலும், நீதிபதிகளிலிருந்து குற்றவாளி கள் வரையிலும் நேரடித் தொடர்பு காவல் துறையினருக்கு மட்டுமே சாத்தியம்! மேலும், வழக்கு விசா ரணைகள், விவகாரங்கள் என்று பல வற்றில் ஆழமாக ஈடுபடும் போது பல மனிதர்களின் வெளித் தோற்றம்



# நெகிழச் செய்த நேருவின் குணம்!

மட்டுமல்லாமல் உள் கிடக்கையும் தெரிய வருகிறது. சமூகத்தின் 'புற நானூறு, அக நானூறு' இரண்டுமே காவல் துறையினருக்குப் பாடம்!

என் முப்பத்தைந்து வருடப் பணிக்காலத் தில் எத்தனையோ பேரிடமிருந்து நான் கற்றுக் கொண்டவை அநேகம். காமராஜரிடமிருந்து, ராஜாஜியிடமிருந்து, சரண் சிங்கிடமிருந்து, கோலியிடமிருந்து நான் பெற்ற பாடங்கள் எனக்கு இன்னமும் உதவுகின்றன.

அர்ப்பணிப்பு உணர்வு, நேர்மை, கண்ணி யம் போன்ற நல்ல அம்சங்கள், அந்தக் காலத் தலைவர்களின் கண்களாக விளங்கின.

ஒரு தரம்- நான் சி.பி.ஐ-ல் டி.ஐ.ஜி.யாக இருந்த சமயம்- உத்தரப்பிரதேசத்தில் ஒரு அரசு ஆவணக் காப்பகத்திலிருந்து சில ஆவணங்கள் களவு போய்விட்டன. மாநில போலீஸாரால் துப்புத் துலக்க இயலாமல் போய்விட்ட நிலை யில், வழக்கு சி.பி.ஐ.வசம் வந்தது. வழக்கின் மேற்பார்வை என்னிடம் ஒப்படைக்கப்பட்டது.

நான் ஒரு சிறந்த இன்வெஸ்டிகேட்டிங் ஆபீசரை அனுப்பி, புலனாய்வு செய்யச் சொல்லியிருந்தேன்.

சில நாட்களிலேயே திருடு போனவற்றை மீட்டுக் கொண்டு வந்தார் அந்த ஆபீசர்.

அந்த ஆவணக் காப்பகத்திலேயே பணி யாற்றிய ஒரு பியூன், யாரோ கேட்டுக் கொண் டதற்கிணங்க ஒரு சில ஃபைல்களை மட்டும் திருடப் போய், கண்டு பிடிக்க முடியாமல் பல ஃபைல்களடங்கிய ஒரு கட்டையே மொத்த மாய் எடுத்துப் போய் விட்டிருந்தது பின்னால் விசாரணையில் தெரியவந்தது.

மீட்கப்பட்ட அந்த ஆவணங்களை என் அலுவலகத்தில் நான் சும்மா புரட்டிக் கொண்டிருந்தேன்.

1920களில் அலகாபாத் முனிசிபாலிட்டி நடவடிக்கைகள் பற்றிய சில ஃபைல்கள் அவற்றில் இருந்தன.

அந்தக் காலகட்டத்தில் பண்டித நேரு அவர்கள், அலகாபாத் முனிசிபல் சேர்மனாக இருந்தார் என்பது என் நினைவுக்கு வர, ஆவல் மேலிட்டு, அந்த ஃபைல்களைப் புரட்டினேன். நேரு ஏதாவது குறிப்பு எழுதியிருக்கிறாரா என்று பார்க்க, இயல்பாக எழுந்த ஆவலினால்.

நான் எதிர்பார்த்தது போலவே அவரது கையெழுத்தை ஒரு கோப்பில் கண்டவுடன் எடுத்துப் படிக்கத் தொடங்கினேன்; பிரமித்துப் போனேன்!

அலகாபாத்தில், கும்பமேளா மிகப் பிரமாதமான ஒரு திருவிழா. அந்தக் குறிப்பிட்ட வருடக் கும்பமேளா நடந்த சமயம், நேரு அங்கே முனிசிபல் சேர்மனாக இருந்திருக்கிறார்.

மிக அதிகமான மக்கள் கூடிய அந்தத் திருவிழா சமயம், நிர்வாக ரீதியில் சரிவர ஏற்பாடுகள் செய்யப் படாததால் மக்களில் பலர் அவதிக்கு உள்ளாக நேரிட்டிருந்தது.

அந்த சம்பவங்களைப் பற்றி விரிவான விவாதம் தேவை என சில கவுன்சிலர்கள் கேட்டுக் கொண்டதால் முனிசிபல் கவுன்சிலின் சிறப்புக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அக்கூட்டத்தின் நடவடிக்கைகளைப் பற்றிய குறிப்பில்–

நேரு எழுதியிருந்தார்:

"... கும்பமேளா சமயம் பொது மக்கள் பலர் அவதிப்படும்படியாக– நிர்வாக ஏற்பாடுகள் சீராக இல்லாதது உண்மை. ஏற்பாடுகள் ஒழுங்காகச் செய்யப்படாமைக்கு, முனிசிபல் சேர்மன் என்ற முறையில் நானும் பொறுப்பாவேன். ஆகவே, இந்த குறைபாடுகளைப் பற்றி விவாதம் நடக்கையில் இக்கூட்டத்திற்கு நான் தலைமை தாங்குவது சரியல்ல. கவுன்சிலர்கள் யாவரும் சுதந்திரமாகப் பேசி முடிவெடுப்பதற்கு ஏதுவாக நான் இக்கூட்டத்திலிருந்து ஒதுங்கிக் கொள்கிறேன். முறைப்படி மற்றொரு தலைவர் இக் கூட்டத்தை நடத்தி, அதில் எடுக்கப்படும் முடிவுக்கு நான் கட்டுப்படுகிறேன்."

எவ்வளவு உயர்ந்த ஜனநாயக பண்பையும் உணர்வையும் இது காட்டுகிறது. யோசித்துப் பாருங்கள். நேருவுக்கு அப்பொழுது வயது 34தான்! இப்படிப்பட்ட தலைவர்கள் இருந்த நாடு நம்முடையது! அந்த குறிப்பைப் படித்துக் கொண்டிருந்த போதே நான் நெகிழ்ந்து விட்டேன்.

தலைவர்கள் மட்டுமல்ல, சீனிவாசவரதன் போல, கோலி போல மிகச் சிறந்த அதிகாரிகளும் இங்கே இருந்திருக்கிறார்கள்.

பின்னால் இந்த நிலையெல்லாம் மாறி விட்டதுதான் வருத்தமான விஷயம்.

தேச நிர்வாகம் முழுவதும் கட்சி அரசியலின் கைகளில் போய் விட்டது தான் இன்றைய சோகங்களுக்குக் காரணம்.

**கா**வல் துறையையே எடுத்துக் கொள்வோம். உலகின் தலைசிறந்த காவல் துறைகளில் ஒன்று நம்முடைய காவல் துறை. அவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியும் தரப்படும் வசதிகளும் மிக உயர்தரமானவை. திறமையானவர்களைத் தேடித் தேடித் தன்னுள் போட்டுக் கொள்கிறது, காவல் துறை. அத்தகைய திறமைசாலிகளால் என்ன வேண்டுமானாலும் சாதிக்க முடியும். மக்களுக்கு எவ்வளவோ நன்மைகள் செய்ய முடியும்.

மறைந்த புரொபசர் கே. சுவாமிநாதன் எனக்கு மிகவும் தெரிந்த பெரியவர். நான் தில்லியில் இருக்கும்போது பரிச்சயம் ஏற்பட்டு பல நாட்கள், மணிக்கணக்காக நாட்டு நடப்புகள் பற்றிப் பேசியிருக்கிறோம். அவர் அடிக்கடி சொல்வார்: "ஒரு நல்ல போலீஸ்காரரால் மக்களுக்குச் செய்யக் கூடிய நன்மைகளுக்கு எல்லையே கிடையாது."

நான் விளையாட்டாகச் சொல்வேன்:

## சி.வி. நரசிம்மன்

"வாஸ்தவம். அதே போல் ஒரு மோசமான போலீஸ்காரரால் நேரக் கூடிய தொந்தரவுகளுக்கும் எல்லை இல்லை தான்!"

அவர் சிரிப்பார்; "ஒப்புக் கொள்கிறேன். நீங்கள் சொல்வதும் சரிதான்" என்பார்.

எதற்குச் சொல்கிறேன் என்றால், காவல் துறையில் இருப்பவர்களுக்கு, அரசியல்வாதிகளை விடவும் மக்களுடன் நெருங்கிப் பழகி, சேவை செய்ய வாய்ப்புகள் அதிகம். ஆனால், அரசியல்வாதிகளுக்குப் பாதுகாப்புத் தருவதிலேயே அவர்களது பெரும்பாலான நேரம் சரியாகப் போய்விடுகிறது.

காவல் துறை என்பது மக்களுக்காக, அவர்கள் வசதிக்காக, அவர்கள் நன்மைக்காக, அவர்கள் பாதுகாப்புக்காக உருவாக்கப்பட்ட ஒன்று. ஆனால் நடைமுறையில் இது எவ்வளவு மாறாகப் போய்க் கொண்டிருக்கிறது என்பதைக் காண, வருத்தமாகத்தான் இருக்கிறது.

**இ**ந்தக் கட்டுரைத் தொடரில் பல இடங்களில், சரண்சிங் நிறுவிய, இந்திரா கிடப்பில் போட்ட தேசிய போலீஸ் கமிஷன் பற்றிச் சொல்லி இருக்கிறேன்.

அந்த போலீஸ் கமிஷனின் பரிந்துரைகள், காவல் துறையினரின் மேன்மைக்காக மட்டுமல்ல, பொது மக்களின் நலனுக்காகவும் அவசியம் கருத்தில் கொண்டு, செயல்படுத்தப் பட வேண்டியவை.




போலீஸ் துறை, முற்றிலும் அரசியல்வாதிகளின் (அதாவது ஆட்சியாளர்களின்) கட்டுப்பாட்டில் இயங்குவது கூடாது என்பது அந்தக் கமிஷனின் கருத்து.

முற்றிலும் அரசைப் புறக்கணிக்காத, அதே சமயம் தனித்து, சுதந்திரமாக இயங்கக் கூடிய சட்டபூர்வமான அதிகாரம் பெற்ற ஒரு வல்லுனர்கள் குழுவின் கீழ் இயங்க வேண்டும். நீதிபதிகள், உயர் அதிகாரிகள், பொதுச் சேவகர்கள், சமூகவியலாளர்கள் கொண்ட குழுக்களை மாநிலங்கள் அனைத்திலும் நிறுவி, காவல் துறையை அவர்கள் மேற்பார்வையில் சுதந்திரமாக இயங்கவிட்டு, அரசு ஒதுங்கிக் கொள்ள வேண்டும். அக்குழுவுக்கு, மாநில முதல்வர் தலைமை தாங்கலாம். அதே சமயம் எதிர்க் கட்சித் தலைவரும் குழுவில் இடம் பெற்றிருக்க வேண்டும்.

குழு எடுக்கும் முடிவுகளில் அரசு தலையிடக் கூடாது. மாறாக முழு ஒத்துழைப்புத் தர முதல்வர் முன் வர வேண்டும்.

இப்படியோர் அமைப்பு உருவாகுமானால் இன்றைக்குக் காவல்துறையில் மலிந்து கிடக்கும் சீர்கேடுகள் யாவும் களையெடுக்கப்பட்டு சீராகிவிடும்.

நாடெங்கும் கொலை, கொள்ளை, கலவரங்கள், காவல் நிலைய அட்டூழியங்கள், போலீஸ் மீது மக்களுக்கு நம்பிக்கையின்மை, லஞ்சம், சுரண்டல், தேசிய அளவில் ஊழல் இவையெல்லாம் மக்கள் பயந்து போகும் அளவுக்கு ஏன் அதிகரிக்கின்றன?

கட்சி, கட்சி என்று எப்போதும் கட்சியின் வளர்ச்சியையே முன் வைக்காமல் பொது மக்கள் நலனில் உண்மையிலேயே முழு அக்கறை கொண்டு செயல்படுபவர்களானால் நமது ஆட்சியாளர்களால் நிச்சயம் இவற்றைத் தடுக்க, தவிர்க்க முடியும். மக்களிடையே விழிப்புணர்வு மிக அவசியம். அது குறைவாக இருப்பதுதான் இது போன்ற சீர்கேடுகளுக்குக் காரணம்.

ஜனநாயக தேசத்தில், மக்கள் தான் மன்னர்கள். ஆனால் நம் உரிமைகளை நாம் மறந்திருப்பதால்தான் இவற்றை வளர விட்டுச் சகித்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

விவேகானந்தர் சொன்னதுதான். இப்பொழுது நினைவுக்கு வருகிறது: எழுமின்! விழிமின்!

முப்பது வாரங்கள் ஓடியது தெரியாமல் ஓடிவிட்டன. ஒரு தனிமனிதனின் அனுபவங்கள் தான் என்றாலும், அனுபவங்கள் ஒவ்வொன்றும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ மக்களுடன் சம்பந்தப்பட்டவை.

காவல் துறை பற்றி, அது எப்படி இயங்குகிறது என்பது பற்றி, போலீஸ்காரர்களுக்கு நேர்கிற பிரச்னைகள், அவர்கள் அதை எதிர்கொள்கிற விதம் பற்றியெல்லாம் விரிவாகவே சொல்லியிருப்பதாகக் கருதுகிறேன்.

நமது சட்டங்கள், சில சட்டங்களைப் பிரயோகிக்கும் போது நேர்கிற சிக்கல்கள், நீதிமன்ற நடைமுறை, வக்கீல்களின் சாமர்த்தியம், வழக்குகளின் விசித்திரம் என்று மிகப் பெரிய மைதானத்தில் குறுக்கும் நெடுக்கும் ஓடி ஆடி விளையாடியது போல இருக்கிறது.

வாசிப்பு சுவாரஸ்யம் என்பதைத் தாண்டி, இந்தத் தொடர் இன்றைய காவல் துறையினருக்கும் அவர்தம் பணியில் உதவக் கூடும் என்று நான் நம்புகிறேன்.

நான் மிகுந்த தயக்கத்துடன் ஆரம்பித்த இந்த கட்டுரைகள் வாரங்கள் செல்லச் செல்ல வாசகர்களோடு பேசிக் கொண்டே போகும் புதிய அனுபவத்தையும் எனக்குக் கொடுத்தன. வாசக நண்பர்கள் அவ்வப்போது எனக்கு தெரிவித்த ரசிப்பும் என்னை ஊக்குவித்தது.

நல்ல சந்திப்புகள், அனுபவங்கள், படிப்பினைகள் எனக்குச் சாத்தியமாகக் காரணமாக இருந்த பல பெரியவர்களை இந்தக் கணம் நினைத்துக் கொள்கிறேன். எனக்கு வழி காட்டிய பெரியவர்கள்.


அவர்கள் அனைவருக்கும் மானசீக நன்றி சொல்வதுடன் இதை முடித்துக் கொள்கிறேன்.

(முற்றும்)

உ

இப்போது விற்பனை ஆகிறது அகில உலக அனுஷ்டானத்தில் உள்ளது

அசல் 28-நெ. தாது ௵ 1996-97 பாம்பு பஞ்சாங்கம்




கிடைக்குமிடம் : M.S. பச்சையப்ப முதலியார்

மனோன்மணி விலாச அச்சகம்

26, பாஷ்யகாரலு நாயுடு தெரு, கொண்டித்தோப்பு, சென்னை - 600 079

தொலைபேசி எண் : 518887



ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி

பர்மனென்ட் பண்டு லிமிடெட்

பதிவு எண் : 18-23759/92

H.O. No. 288, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை - 7 Ph : 6421801/6415549

B.O. No. 23, வடக்கு மாட வீதி, மயிலாப்பூர், சென்னை - 4. Ph : 4934009

டெபாசிட்டுகள் ரூ 5 கோடியை தாண்டியுள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.


பிக்சட் டிபாசிட்டுகளுக்கு கவர்ச்சிகரமான வட்டிகள் வழங்கப்படும்

வட்டிக்கான காசோலைகள் முன்கூட்டியே வழங்கப்படும்

மேலும் பயனுள்ள திட்டங்களுக்கு நேரில் அணுகவும்

சென்னை மாநகர சொத்துக்கள் மீது கடன் கிடைக்கும்





நகைக்கடன் கிராம் 1க்கு ரூ. 300 மாதவட்டி ரூ. 1.95 மட்டும் வேறு கட்டணம் இல்லை


H.O. வெள்ளி விடுமுறை

B.O. செவ்வாய் விடுமுறை

உச்சவரம்பு கிடையாது

உறுப்பினராகி பயன் பெறுவீர்

வேலை நேரம் : காலை : 8.30 - 12.30 மாலை : 2.00 - 6.00




சேர்மன் : P. பாலசுப்பிரமணியம், B.Sc.,

முதன்மை அறங்காவலர்,

கந்தக்கோட்டம், சென்னை - 600 003.

PB குரூப் கம்பெனி

அருளுக்கு ஸ்ரீ முத்துக்குமரன்! பொருளுக்கு PB குரூப் நிறுவனம்!



'That's not Cricket'. நேர்மை, நியாயமற்ற எந்தவொரு செயலையும் விமர்சிக்கும் ஆங்கிலப் பதம் இது. கிரிக்கெட் கனவான்களின் ஆட்டம். அல்ப புத்தி, அநியாயம் போன்றவற்றுக்கு அதில் இடம் கிடையாது என்பதும் பாரம்பரியமாகப் பேசப்பட்டு வரும் பெருமை. ஆனால் இன்றோ கிரிக்கெட் என்பது பணவான்களின் ஆட்டமாகி விட்டது!

முதல் முறையாக 1975-ல் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. அதில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணிக்குக் கிடைத்த பரிசுத் தொகை எவ்வளவு தெரியுமா? வெறும் ஒரு லட்சத்து இருபதாயிரம் ரூபாய்தான். ஆனால் இன்று? நடைபெற்றுக் கொண்டிருக்கும் வில்ஸ் உலகக் கோப்பையைத் தட்டிச் செல்லப் போகும் அணிக்குக்

**உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள் ஒரு நாள் ஆட்டங்களாக மாற்றப்பட்ட பிறகு, கோடிக் கணக்கான மக்கள் நேரிலும் டெலிவிஷன் மூலமாகவும் பார்க்க ஆரம்பித்திருக்கிறார்கள். அப்படிப் பார்த்து ரசிக்கும் மக்களுக்கு வெறும் விளையாட்டை மட்டும்தானா காண்பிக்கிறார்கள்? அவர்களின் மன, உடல் ஆரோக்கியத்தைக் கெடுக்கும் விஷயங்களையுமல்லவா காண்பிக்கிறார்கள்! விளக்குகிறது கட்டுரை......**

# ஆரோ
# தொ
# விளை


கிடைக்கப் போகும் பரிசுத் தொகை எவ்வளவு என்கிறீர்கள்? 10,50,000 ரூபாய்! இது தவிர, இந்தப் போட்டியைக் கூட்டாகச் சேர்ந்து நடத்தும் பில்காம் (Pilcom) அதாவது பாகிஸ்தான் – இந்திய - லங்கா ஆர்கனைசிங் கமிட்டி, பல்வேறு கட்டங்களிலும் வெற்றி பெறும் அணிகளுக்காக மொத்தம் 72 லட்ச ரூபாயையும் ஒதுக்கி வைத்திருக்கிறது.

இத்தனை போதாதென்று, அரபு நாடுகள் (UAE) அணி உலகக் கோப்பையை வென்றால் அதற்கு ஒரு கோடி ரூபாய் தரப் போவதாக அறிவித்திருக்கிறார் அங்கே வாழும் ஷியாம் சுந்தர் என்னும் இந்தியர்! (அதற்கான வாய்ப்பே இல்லை என்கிற தைரியமோ!) மேலும் ஐம்பது ரன் அடிக்கும் ஆட்டக்காரருக்கு, ஹாட்ரிக் அடிக்கும் பௌலருக்கு என்று உபரி பரிசுகள் வேறு!

பாகிஸ்தான் அணி கோப்பையை வென்று விட்டால், ஒவ்வோர் ஆட்டக்காரருக்கும் 50 லட்ச ரூபாய் ரொக்கப் பரிசு. தவிர, ஒரு கார், வீட்டுமனையும் தரப்படும் என்று அறிவித்திருக்கிறார், பாகிஸ்தானின் வில்ஸ் உலகக் கோப்பை கமிட்டியின் தலைவரான அஸிப் அலி ஸர்தாரி; பேநசீரின் கணவர்!



# க்கியம் லைத்த யாட்டு!



“ஆட்டக்காரர்கள் நாட்டின் பெருமைக்காக ஆட வேண்டுமேயொழிய பணத்துக்காகவும், பரிசுகளுக்காகவும் ஆடக் கூடாது!” என்று இம்ரான்கான் கண்டித்திருந்தாலும் அறிவிப்பு அறிவிப்புத்தானே!

‘புகழ் காரணமாகக் கிரிக்கெட்டில் கோடி கோடியாய்ப் பணம் புரளுகிறதா அல்லது கோடி கோடியாய்க் கொட்டி மாட்சுகள் நடத்தப்படுவதால்தான் கிரிக்கெட்டின் புகழ் ஏறிக் கொண்டே போகிறதா?’ என்று ஒரு பட்டி மன்றம் நடத்தினால், அதை ஸ்பான்சர் செய்யவும் டெலிவிஷனில் ஒளிபரப்பவும் கூட பல நிறுவனங்கள் போட்டி போட்டுக் கொண்டு முன்வரும்! அந்த அளவுக்குக் கிரிக்கெட் பித்து நம் சித்தத்தில் ஏறியிருக்கிறது!

இல்லையென்றால், 1987-ல் உலகக் கோப்பைக்கு ரிலையன்ஸ் கோப்பை என்று பெயரிடும் உரிமை பெற அந்த நிறுவனம் இரண்டரைக் கோடி ரூபாய்தான் கொடுத்தது என்கிற நிலையில், அடுத்த போட்டியை நடத்திய பென்சன் அண்ட் ஹெட்ஜஸ் (Benson & Hedges) நிறுவனம் ஏழு கோடி கொடுக்குமா? இப்போது நடத்தும் போட்டியில் 'வில்ஸ் உலகக் கோப்பை' என்று பெயரிடும் உரிமைக்காக ஐ.டி.சி. நிறுவனம் 38 கோடிகளைத்தான் கொட்டிக் கொடுக்க வேண்டியிருந்திருக்குமா?

இதற்குக் காரணம், உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள் நடத்துவதென்பதைப் பெரிய பெரிய தொழில் நிறுவனங்களெல்லாம் தங்களின் கௌரவப் பிரச்னையாக மட்டுமின்றி ஒரு மாபெரும் விளம்பர யுக்தியாகவும் கருதுவதுதான். பலன்? 92-ல் நடந்த உலகக் கோப்பைப் போட்டியில் பதினேழரைக் கோடி ரூபாயாக இருந்த பணப் புழக்கம் இன்று 210 கோடியாக எகிறி விட்டது!

இந்த உலகக் கோப்பை சம்பந்தமாக நிலவிய இன்னொரு கடும் போட்டி டெலிவிஷன் நேரடி ஒளிபரப்பு. இந்தப் போட்டியில் வென்றது அமெரிக்காவின் வோர்ல்டுடெல் கம்பெனி. மாட்சுகளின் நேரடி ஒளிபரப்பு உரிமையை 35 கோடி ரூபாய்க்கு மொத்தமாக வாங்கி, இலங்கையின் ரூபவாகினி, நமது தூர்தர்ஷன், ஆஸ்திரேலியாவின் சானல் நைன், ஹாங்காங்கின் பிரைம் ஸ்போர்ட்ஸ் என்று சில்லறை வியாபாரம் செய்தது. விளைவு? “எங்களின் முதலீட்டைப் போல் பல மடங்கு லாபம் கிடைத்து விட்டது!'' என்று பெருமையாய்க் காலரைத் தூக்கி விட்டுக் கொள்கிறது வோர்ல்டுடெல்!

சில்லறை வியாபாரத்தில் பல மடங்கு தொகை கொடுத்து வாங்க வேண்டியிருந்தாலும் மற்ற டெலிவிஷன்காரர்களுக்கெல்லாம் சந்தோஷம் கொப்புளிக்கவே செய்கிறது!

காரணம்? நேரடி ஒளிபரப்புக்குத் தேவை

யான விளம்பரங்கள் எக்கச்சக்கமாக வந்து குவிந்து விட்டன என்பதுதான்!

டெலிவிஷன் விளம்பரங்கள் தவிர, உலகக் கோப்பையின் 'அதிகார பூர்வ' அந்தஸ்து பெற்று ஏராளமான நிறுவனங்கள் விளம்பரப் படுத்தி வருகின்றன. ஆட்டம் நடைபெறும் மைதானத்தில் விளம்பரப் பலகைகளை, மொத்தமாகக் குத்தகையெடுத்து, 'வாடகை'க்கு விடும் வியாபாரமும் நடைபெறுகிறது. மைதானத் தரையை ஒட்டி எல்லைக் கோடுகளிலுள்ள பலகைகள் (runners) ஒவ்வொன்றும் ஒரு கோடி ரூபாய்க்கு விலை போயிருக்கின்றன.

இந்த விளம்பரச் செலவையெல்லாம் சம்பந்தப்பட்ட கம்பெனிகள் எப்படி ஈடு கட்டப் போகின்றன? தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விலையில்தான் ஈடுசெய்யும். இந்த நிலையில் உலகக் கோப்பை மாட்சுகளை வீட்டில் உட்கார்ந்தபடியே ஓசியில் பார்த்து மகிழ்வதாக எண்ணி சந்தோஷத்தில் மிதந்து கொண்டிருக்கும் நமது தலையில்தான் அந்த விளம்பரச் செலவுகளெல்லாம் விடியப் போகின்றன! (உலகம் முழுவதும் இப்படி டீவி மூலம் பார்க்கும் மக்களின் எண்ணிக்கை 1400 கோடி என்பதாய் ஒரு புள்ளி விவரம்!)

நேரடி ஒளிபரப்பைக் கண்டுகளிக்க கலர் டீவி வேண்டாமா? கலர் டீவி விற்பனையாளர்கள் வயிற்றிலும் அபரிமிதமாகவே பால் வார்த்திருக்கிறது இந்த உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி.

உலகக் கோப்பைக் கால்பந்தாட்டத்தின் போது, கேரளாவிலும் மேற்கு வங்கத்திலும் தான் டீவி விற்பனை அதிகரிக்கும் என்கிற நிலையில், இப்போது இந்தியா முழுவதிலுமே விற்பனை அதிகரித்திருக்கிறதாம்.

சந்தடி சாக்கில் முன்பு நடந்த உ. கோப்பைக் கிரிக்கெட் போட்டிகள் குறித்த பல்வேறு புள்ளி விவரங்களைத் தொகுத்துப் புத்தகங்களை வெளியிட்டிருப்பவர்களுக்கும் அமோக விற்பனை!

இத்தனை ஏன்? கல்கத்தாவில் நடந்த துவக்க விழாவின் போது, பன்னாட்டு ஆட்டக்காரர்களையும் ரசிகர்களையும் வரவேற்கும் விதத்தில் புன்னகையை அள்ளி வீசினாரே முன்னாள் உலக அழகி சுஷ்மிதா சென்! அவரது புன்னகைக்காகக் கோககோலா கொடுத்த சன்மானம் எவ்வளவு தெரியுமா? ஒரு லட்சம் ரூபாய்!

கிரிக்கெட்டுடன் தொடர்பில்லாத இத்தகைய ஆடம்பரங்கள் ஒருபுறம் என்றால், மற்றொரு புறத்தில் ஆட்டக்காரர்களின் தொப்பி முதல் பாட், ஸ்டம்புவரை அனைத்திலும் பல்வேறு நிறுவனங்களின் விளம்பரம் இடம் பெறுகிறது. இவ்வாறு அணிந்து விளம்பரப் படுத்த அவர்களுக்குத் தனி சன்மானம். அதைத் தவிர பத்திரிகை, டீவிக்கெனத் தயாராகும் பிரத்யேக விளம்பரங்களில் பங்கேற்றும் ஆட்டக்காரர்கள் ஏராளமாகச் சம்பாதிக்கிறார்கள்.

எந்த ஊருக்குப் போனாலும் ஐந்து நட்சத்திர வசதி, கலபமாக அள்ளிக் கொட்டும் பணம் என்கிற நிலையில் அவர்களுக்கு ஆட்டத்தில் நாட்டமும் ஆர்வமும் குறையாதா? என்ற கேள்வி எழுகிறது.

'அப்படியெல்லாம் குறைந்து விடாது. தொடர்ந்து அணியில் இடத்தைத் தக்கவைத்துக் கொண்டால்தானே இந்த பல்வேறு சலுகைகள் கிடைக்கும். எனவே தொடர்ந்து சிறப்பாக ஆடுவார்கள்' என்பது கிரிக்கெட் வட்டாரத்தினரின் வாதம்.

'மேலும் போட்டிகளில் என்னதான் விளம்பரதாரர்களின் பங்கு இருந்தாலும், இறுதியில் மக்கள் மனத்தில் நிலைத்து நிற்கப் போவது மிகச் சிறந்த ஆட்டக்காரர்களின் அற்புதமான ஆட்டமும், உலகக் கோப்பையும்தானே தவிர கோககோலாவோ, ஐ.டி.சி.யோ அல்ல...' என்றும் இவர்கள் சொல்கிறார்கள்.

'நிலையாமை'க்காக நிறுவனங்கள் கோடி கோடியாகக் கொட்டிக் கொடுக்குமா...?' என்று யோசித்துப் பார்ப்பது நல்லது!

இப்போது நடைபெறும் உலகக் கோப்பை போட்டி மூலமாகப் 'பில்காம்' கமிட்டிக்குக் கிடைக்கப் போகும் மொத்த வருமானம் 200 கோடி ரூபாய் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இதில் வரும் லாபத்தைப் பில்காம் அங்கத்தினர்களான இந்தியா, பாகிஸ்தான், ஸ்ரீலங்கா ஆகிய மூன்று நாடுகளும் பிரித்துக் கொள்ளும். அப்படிப் பிரிக்கப்படும் போது இந்தியாவின் லாபத் தொகையாக, இந்திய கிரிக்கெட் கண்ட்ரோல் போர்டுக்குப் பன்னிரண்டு கோடி ரூபாய் கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கிறார்கள்!

## 'சுருக்-நறுக்' போட்டி முடிவு - 17

### காதல் என்பது....

- ஒருவரை ஒருவர் பூரணமாக்குவதற்காக இரு உள்ளங்களில் ஏற்படும் விந்தையான இனிய தவிப்பு.
  - டி. ரவிச்சந்திரன், கோவை - 30.
- 'பரஸ்பர' இதயக் கொள்ளை!
  - எல். சண்முக சுந்தரி, இராமநாதபுரம் - 1.
- கோழையை வீரனாக்கும் கிரியா ஊக்கி!
  - இரா. செந்தில், சென்னை - 61.
- நான்கு கண்கள் இரண்டு உயிர்களுக்குத்

தருகின்ற 'ஆயுள் தண்டனை'.

- நர. சீனிவாசன், கும்பகோணம்.

● ஆதி ஜெனரேஷனிலிருந்து அல்ட்ரா ஜெனரேஷன் வரை ஒரே மாதிரி புலம்ப வைக்கும் அதிசயம்.

- கி. இராம்குமார், திருவாரூர்.

● முதற் புள்ளியும், முற்றுப் புள்ளியும் தெரியாத ஓர் அழகிய கோலம்.

- ராஜகுமாரன், நெய்வேலி - 1.

● வயது, அந்தஸ்து, ஜாதி, மதம், மொழி, இனம் - இவை எதையும் பொருட்படுத்தாமல் வரக் கூடிய 'காமன்' நோய்.

- வி. அரவிந்த், சென்னை - 18.

● இதயச் சுவரில் உணர்வுத் தூரிகை தீட்டும் அழியாத ஓவியம்.

- வசந்தா சாரி, சென்னை - 40.

● ஒரு பாரசூட் குதியல்; ஒரு பகீரத நம்பிக்கை; துணிச்சலுடன் திகில் கலந்த பரவசம்.

- எஸ். கணேசன், திருச்சி - 14.

● அமர காவியம் படைக்க, கவிஞனுக்குக் கைத்தடி; கோரப் பசிகொண்ட பத்திரிகைகளுக்கு அல்வா; மன் ஏஜ் பிரசாதம்! இது சமாதியும் கட்டும்; சரித்திரமும் படைக்கும்.

- எல். வெங்கடேசன், கும்பகோணம் - 1.

(ஒவ்வொன்றும் ரூ. 50 பரிசு பெறுகிறது)

எந்த விளையாட்டாக இருந்தாலும் சரி, மக்களின் உடல் மற்றும் மன ஆரோக்கியமே அதன் இலக்காக இருக்க வேண்டும்! விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் வளர வேண்டும்.

ஆனால், இன்றைய உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகளை நடத்துவது யார்? வில்ஸ் முதலான பல பிராண்ட் சிகரெட்களைத் தயாரிக்கும் ஐ.டி.சி. நிறுவனம். இந்தப் போட்டிக்காக பெயர் உரிமைத் தொகையான 38 கோடி தவிர மேலும் 53 கோடி ரூபாய் செலவழிக்கிறது அந் நிறுவனம்.

எந்த ஒரு நிறுவனமும் அதன் லாபத்திலிருந்துதான் செலவழிக்கும் என்கிற நிலையில், ஐ.டி.சியும் விதிவிலக்கல்ல. 53 கோடி ரூபாய் லாபம் சம்பாதிக்க வேண்டுமானால் ஐ.டி.சி. என்ன செய்யும்?

உலகம் பூராவிலுமுள்ள பல்வேறு சுகாதார அமைப்புகளும் எந்தப் புகைப்பழக்கத்தை அடியோடு ஒழிக்க வேண்டும் என்று குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்றனவோ, அந்தப் புகைப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்கான சிகரெட்டுகளைத்தான் ஐ.டி.சி. உற்பத்தி செய்யும். 53 கோடி ரூபாய் லாபம் சம்பாதிக்க வேண்டுமானால் குறைந்தபட்சம் 530 கோடி ரூபாய்க்கு சிகரெட் விற்றாக வேண்டும்.

சிகரெட்டினால் விளையும் கேடுகள் என்னென்ன? புற்றுநோய், காசநோய், ஆஸ்த்துமா போன்ற பயங்கர நோய்களுக்கு அஸ்திவாரமிடுவதில் சிகரெட் முக்கியப் பங்காற்றுகிறது. ஒரு நாளைக்கு ஒரு பாக்கெட் (10) சிகரெட் புகைப்பவர்கள் கடுமையான புகைப் பழக்கமுடையவர்களாகக் கருதப்படுகிறார்கள். ஒரு நாளைக்கு பத்து சிகரெட் வீதம் ஒரு லட்சம் சிகரெட்டுகளைப் புகைத்து முடித்தவர்களுள் பாதிப் பேர் இறந்து போகிறார்கள் என்கிறது ஒரு புள்ளி விவரம்! அதாவது விற்கப்படும் இரண்டு லட்சம் சிகரெட்டுகளுக்கு ஒருவராவது இறந்து போக வாய்ப்பு உண்டு!

இந்த நிலையில், ஐ.டி.சி. நிறுவனம் 530 கோடி ரூபாய்க்கு சிகரெட் விற்று (ஒரு சிகரெட் ஒரு ரூபாய் என்கிற சராசரி விலையில்) 53 கோடி ரூபாய் லாபம் சம்பாதிக்க வேண்டுமானால் குறைந்தபட்சம் 26,500 பேராவது மண்டையைப் போட்டாக வேண்டும்!

வில்ஸ் சிகரெட் தயாரிக்கும் ஐ.டி.சி. நிறுவனம்தான் சன்டிராப் சூரியகாந்தி எண்ணெயையும் தயாரிக்கிறது. 'The healthy oil for healthy people' என்று அதை விளம்பரப்படுத்தவும் செய்கிறது! ஆனால் மக்களின் ஆரோக்கியம் குறித்த சிந்தனை அந்த குறுகிய வட்டத்தோடு நின்று போகிறது!

'வில்ஸ்' என்ற சிகரெட்டின் பெயரை கோடிக்கணக்கான மனங்களில் ஊன்றவைக்கும் ஓர் உலகக் கோப்பைப போட்டி நமக்கு அவசியம்தானா? வில்ஸ் உலகக் கோப்பை போட்டி நடைபெறும் மைதானங்களில் எல்லாம் 'சிகரெட் உடல்நலத்துக்குக் கேடு விளைவிக்கும்' என்று எழுதி வைப்பது அவசியமில்லையா...? கோடி கோடியாய்ப் பணம் புரளுவதாலும் எக்கச்சக்கப் பரிசுகளாலும் ஆட்டக்காரர்களின் மனோநிலையும் 'விளையாட்டு' என்கிற ஆரோக்கியமான எல்லையைத் தாண்டி, 'வியாபாரம்' என்கிற அவல நிலைக்கல்லவா தள்ளப்படும்!

ஆட்டக்காரர்களின் மனோ நிலை ஒருபுறம் இருக்கட்டும், ரசிகர்களின் மனோ நிலை எப்படி? எந்தக் குதிரை ஜெயிக்கும் என்று ரேஸில் 'பெட்' கட்டுகிற மாதிரி, எந்த அணி ஜெயிக்கும் என்று 'பெட்' கட்டுகிற அளவுக்கு, கிரிக்கெட் மைதானத்தை ரேஸ்கோர்ஸாகவும் ஆடும் அணிகளைக் குதிரைகளாகவும் பார்க்க ஆரம்பித்து விட்டார்கள் ரசிகர்கள். இதுவா ஆரோக்கியம்?

எல்லாத் தரப்பினரும் யோசித்தாக வேண்டிய விஷயம் இது.

- எஸ். சந்திரமௌலி,
கே. எம். ஜக்கரியா,
கிருஷ்ணவேணி ரங்கநாதன்

# என்கார்

## FIXED DEPOSIT SCHEME

**100% சொத்து உத்திரவாதம்**

பல நிதி நிறுவனங்களுக்கு நடுவில் முதலீட்டிற்கு முதன்முதலாக அசையா சொத்துக்களை உத்திரவாதமாக அளித்து பல்லாயிரக்கணக்கான முதலீட்டாளர்களின் நம்பிக்கை பெற்ற உங்கள் என்கார் நிறுவனம் வழங்கும்

**24%** வருட வட்டி **+** ஊக்கத்தொகை **8%** வரையிலும்

★ **+** தங்க நாணயம்



4 கிராம் வரையிலும்

★ **+** வெள்ளி நாணயம்

இந்த விசேஷ சலுகை **29.02.1996** வரை

ஞாயிற்றுக்கிழமை அலுவலகம் உண்டு

★ இச்சலுகை எங்களது அனைத்து அலுவலகங்களுக்கும் பொருந்தும்.

| ராயல் டெபாசிட் | | மெகா பாண்ட் | | எவரெஸ்ட் பாண்ட் | |
|---|---|---|---|---|---|
| குறைந்த பட்ச டெபாசிட் | வட்டி விகிதம் | குறைந்த பட்ச டெபாசிட் | முதிர்வு தொகை | குறைந்த பட்ச டெபாசிட் | முதிர்வு தொகை |
| ரூ. 10,000/- | மாதாந்திர வட்டி பின் தேதியிட்ட காசோலைகள் மூலம் முன்னதாகவே வழங்கப்படும். | ரூ. 5,000/- | ரூ. 10,000/- | ரூ. 5,000/- | ரூ. 15,000/- |
| 24% + 4% | | 33 மாதங்கள் | | 60 மாதங்கள் | |

We accept deposits strictly under RBI Regulations section 45S Chapter IIIC RBI Act 1934

Investments made by Depositors in ENCAR Hi-Grow Investment are reinvested by us, in our following profit making Companies

★ **ENCAR Animal Farms & Exports (P) Ltd.,** ★ **ENCAR Cashew Gardens (P) Ltd.,**
★ **ENCAR Dairy Foods Ltd., ENCAR Builders (P) Ltd.,** ★ **ENCAR Estates (P) Ltd.,**

# ENCAR Hi - Grow Investments

**A Division of ENCAR Cashew Gardens (P) Ltd.,**
**Registered under Companies Act 1956 - IC. No. 18-30423 / 95**

**Head Office** – 134/2, Royapettah High Road, Near Vivek & Co, Luz Corner, Mylapore, MADRAS - 4. Ph : 044 - 8526887. Fax : 91-44-840638

**Regd. Office** – 10 & 11 Varadharaju Complex, (Easwari Complex), Near Chatram Bus Stand, TRICHY - 2. Ph : 0431 - 25963 Fax : 0431 - 462750 Telex : 0455-316 ACES IN

**Regl. Office** – 1/23, Hanumanthappa Layout, Near Manipal Center, 1/A, Ulsoor Road, BANGALORE - 42. Ph : 080 - 5598092

**Branches** – 512-B, N.S.R. Road, Gowri Complex, Annamalai Stores Upstairs, Saibaba Colony, COIMBATORE - 11. Ph : 0422 - 445062, 445065

– No. 267, Advaida Aarama Road, A.V.K. Nagar, Opp. to New Bus Stand, SALEM - 4. Ph : 0427 - 448873

– No. 7, west Vadampokki street, Near Perumal Koil, MADURAI - 1. Ph : 0452 - 35667

**For Safe and Secured Investments - ENCAR**

# அகடிதகடனா சாமர்த்தியம்!

''அகடிதகடனா'' என்ற சொல்லை ஒரு கட்டுரையில் ராஜாஜி பயன் படுத்தியிருந்தார். கல்கி உதவி ஆசிரியர் என்ற முறையில் தைரியத்தைத் திரட்டிக் கொண்டு கையில் "புரூஃப்" ஏந்தி அவரைப் பார்க்கச் சென்ற நான், "இது எனக்கே புரியலையே; சராசரி வாசகர்களுக்கு எப்படி விளங்கும்!" என்றேன்.

"புரியலேன்னா அகராதியைப் பார்க்கணும்" என்றார்.

"வாசகர் ஒவ்வொருவர் வீட்டிலும் அகராதி இராதே?" என்று வாதாடினேன்.

"உன்னிடம் இருக்கணுமே, நீ பார்த்தாயா?" என்று மடக்கினார்.

பார்க்கத் தவறி விட்டிருந்த நான் தலைகுனிந்தேன்.

''அதோ இருக்கு எடுத்துப் பார்'' என்று புத்தக அலமாரியைக் காட்டினார்.

அவருடைய அகராதியை சர்வ ஜாக்கிரதையாகக் கையாண்டு பார்த்தேன். "மாயா ஜாலம் செய்பவன்" என்று அர்த்தம் போட்டிருந்தது.

"மாற்றி விடவா?" என்றேன்.

"வேண்டாம். புதிய சொற்களையும் வாசகர்களுக்குப் பழக்கப் படுத்துவது நல்லது. வேண்டுமானால் அடிக்குறிப்பு போடு" என்றார். அவ்வாறே செய்தேன்.

அந்த 'அகடிதகடனா' என்ற சொல் இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் என்னைத் தாக்கும் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை! முக்கூர் ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மாச்சாரியாரின் பிரவசனம் கேட்கப் போன போது அவர் அந்தச் சொல்லைப் பயன்படுத்தினார்!

''நெய்க்கு தொன்னை ஆதாரமா? தொன்னைக்கு நெய் ஆதாரமா?'' என்று கேட்ட முக்கூர், தாமே விளக்கினார். "தொன்னைதான் நெய்யைத் தாங்குகிறது என்பதால் கண்ணுக்கு மெய்யாக நெய்க்கு தொன்னைதான் ஆதாரம். ஆனால் நெய்தான் யக்ஞத்தில் ஆஹுதியாகப் பயன்படுகிறது. நெய்தான் முக்கியம். நெய்யே அவசியமில்லை என்று ஏற்பட்டு விட்டால் தொன்னையே தேவையில்லையே! அதனால் தொன்னைக்கு நெய்தான் ஆதாரம்!

"எதற்குச் சொல்ல வருகிறேன் என்றால், ஆலிலை மேலே சின்னஞ் சிறு குழந்தையாக பாலகிருஷ்ணன் படுத்திருக்கிறான். கால் கட்டை விரலை வாயில் வைத்து சிரித்துக் கொண்டிருக்கிறான். ஆலிலையோ பிரளயத்தில் மிதக்கிறது! குழந்தையின் எடையை ஆலிலை எப்படி தாங்கும்? அதுவும் சர்வலோகத்தையும் தனக்குள் அடக்கியவனான கிருஷ்ண பரமாத்மா ஆலிலை மேல் படுத்திருக்கும் போது அது எப்படி மூழ்காமலிருக்கிறது? அதுதான் அவனுடைய அகடிதகடனா சாமர்த்தியம்!" என்று முக்கூர் கூறவும் எனக்கு உடனே ராஜாஜி நினைவு வந்தது. உபந்நியாசம் தொடர்ந்தது: ''இலையா கண்ணனுக்கு ஆதாரம்? பகவான் அல்லவா அந்த இலைக்கு ஆதாரம்? சர்வலோகத்துக்கும் ஆதாரம்



அவனே அல்லவா?" என்று முக்கூர் கேட்டு நெய்- தொன்னை உவமையையும் அழகாகப் பூர்த்தி செய்தார்.

இப்படி ஒன்றா இரண்டா? பதினாலு நாள் கதையில் பதினாலாயிரம் உவமைகள் இருக்கும்! பதினாலு நூறு உபகதைகளாவது இருக்கும்! வேதங்கள், உபநிஷதங்கள், திவ்யப் பிரபந்தங்கள், கம்பன், வால்மீகி, ஆண்டாள் பாசுரங்கள், தேவாரப் பதிகங்கள், தெலுங்கு இலக்கியங்கள் என்று அடுக்கடுக்காக மேற்கோள்களைக் காட்டிக் கொண்டே போகிறார். எங்கிருந்துதான் வருகிறதோ, எப்படித்தான் சொல்கிறாரோ என்று பிரமிக்கும்படி, கிட்ட நெருங்கவே முடியாத நயாகரா அருவியாகக் கொட்டுகிறார். ஆனால் அதே சமயம் குற்றால அருவியாக அதில் சுகித்துக் குளிக்கவும் முடிகிறது என்பதுதான் முக்கூராரின் அகடிதகடனா சாமர்த்தியம்! அவ்வளவு எளிமைப் படுத்தித் தருகிறார்!

'விஷ்ணு சகஸ்ரநாமம் சொல்கிறேன்' என்று ஆரம்பித்து, முதல் நாமாவான "விச்வம்" என்பதிலேயே சகலமும் அடக்கம் என்று வியாக்கியானம் செய்து, பத்து அவதாரங்களையும் பதினாலு நாட்களில் கண் முன் நிறுத்திய ஆற்றலைச் சொல்வதா?

ஞான சூரியனாக ஜொலித்த போதிலும் அடக்கமும் சாந்தமும் போட்டியிட, குளிர் நிலவாகப் புன்சிரிப்பையும் பளிச்சிடும் சிறு கண்களால் அருளையும் பொழிந்த திருமுகத்தைச் சொல்வதா?

முதல் நாள் கதை கேட்கப் போனதுமே அவர் என்னை "சபை" என்ற ஒரே சொல்லால் கவர்ந்து விட்டார்: "தர்மத்தை எடுத்துச் சொல்லுமிடம்தான்- நிலை நாட்டும் அவை தான் சபா அல்லது சபை" என்றார் முக்கூர். திரௌபதி சட்டப்படி கௌரவர்களுக்கு உரியவளாகி விட்டிருக்கலாம். ஆனால் அதுவும் சரி, அவள் நடத்தப்பட்ட விதமும் சரி தர்மம் ஆகாது. துரியோதனன் அவையில் தர்மம் நிலவவில்லை. அதனால் "இது சபை இல்லை" என்று ரத்தினச் சுருக்கமாகக் கூறி விட்டாள் திரௌபதி.


இப்படி சட்டத்துக்கும் தர்மத்துக்கும் இடையே உள்ள நுணுக்கமான வேறுபாட்டை முக்கூர் உணர்த்தவும் எனக்கு, 'நமது சட்ட சபையும் மத்தியில் லோக சபையும் ராஜ்ய சபையும் துரியோதனன் சபைகளாகத்தானே மாறி விட்டன' என்று தோன்றியது. ஆனால் முக்கூர் என்னவோ தமது இரண்டு வார சொற்பொழிவுகளில் மறந்து போய்க் கூட ஒரு சுவாரஸ்யம் கூட்டுவதற்காக நிகழ்கால அரசியலை இழுக்கவில்லை. வார்த்தைக்கு வார்த்தை ஆன்மிகம்தான்; இலக்கிய இன்பம் தான். ஒரு கணம் கவனம் திசை திரும்பினால் எங்கே ஓர் அழகான சங்கதியை கேட்கத் தவறி விடுவோமோ என்ற அச்சமே தேவையில்லை! அவர் நம் கவனம் திசை திரும்ப விட்டால் தானே!

எல்லாவற்றுக்கும் மேலாக பரதனின் சிறப்பைக் கூறுமிடத்து, முக்கூரின் கண்களில் அவரையும் மீறி நீர் தளும்புவதையும் அது கன்னங்களில் இரு வரிகளாக இறங்குவதையும் பார்த்தபோது அவர் உள்ளத்தையும் நன்றாகப் புரிந்து கொள்ள முடிந்தது. இந்த உத்தமர் பற்றி கல்கி வாசகர்களுக்குச் சொல்லியே ஆக வேண்டும் என்ற உந்துதலும் ஏற்பட்டது. இதோ எழுதிவிட்டேன்.

அடுத்த தடவை அவர் சென்னை ஆஸ்திக சமாஜத்துக்கு வந்து உபந்நியாசம் செய்யும் போது வானொலியும் தொலைக்காட்சியும் மனம் வைத்தால் தமிழர்கள் இல்லங்களில் எல்லாம் தெய்வ மணம் கமழும்.

**- கி. ராஜேந்திரன்**

---



உச்சி வெய்யில். தஞ்சாவூர் ஜங்ஷனுக்குள் நாகூர் பாஸ்ட் பாசஞ்சர் வந்து நின்றது. சீருடை அணிந்து, தள்ளு வண்டியில் சுத்தமான தண்ணீரை அனைவருக்கும் பிளாஸ்டிக் தம்ளர்களில் கொடுத்துக் கொண்டே வந்த பெண்மணி, "அம்மா, ஐயா சுத்தமான குடி தண்ணீர், உங்களுடைய கூஜா, வாட்டர் பேக், கேன்களைக் கொண்டு வாங்க..." என்று கேட்டு வாங்கி ஊற்றிக் கொடுத்தது ஆச்சர்யம்.

"நாகூர், நாகப்பட்டினம் போன்ற ஊர்களில் தண்ணீர் கொஞ்சம் கரித்தாற் போல இருக்குங்க" என்று காரணமும் சொல்லி, கடமையுடன் அன்பும் கலந்து அனைவருக்கும் தண்ணீர் வழங்கிய வயதான அப்பெண்மணியை அனைவரும் பாராட்டினார்.

**- ஜி. பாலமுருகன்**

# ஜோக்ஸ்!




"கட்சில இவ்வளவு கோஷ்டிப் பூசல் இருக்கக் கூடாது!"

"என்ன சொல்றீங்க?"

"ரெய்டு நடத்த வரும் அதிகாரிகளே வருக வருக''ன்னு எதிர்கோஷ்டி தலைவர் வீட்டு வாசல்ல வரவேற்பு வளைவு வச்சிருக்கு!"

- அம்பை தேவா

"நேற்று பீச்சில் என் காதலர் வரம்பு மீறி நடந்து கொண்டார்!"

"அடடா, என்ன செய்தார்?"

"வழக்கமாகச் சுண்டல் வாங்கித் தருவார். நேற்று ஐஸ்கிரீம் வாங்கித் தந்தார்."

- எஸ். மோகன்

"அதோ போறாரே, அவர் பெரிய ஜோக் எழுத்தாளர்."

"அப்படியா?"

"ஆமாம். அவர் அரைப் பக்கத்துக்குக் கம்மியா ஒரு ஜோக்கையும் எழுதினதில்லைன்னா பாரேன்!"

- வி. ரெங்கநாதன்

"இதுக்குத்தான் சட்டுமேனிக்கு நிலத்தை வளைச்சுப் போடக் கூடாதுங்கறது!"

"ஏன், என்னாச்சு?"

"தலைவர் நேத்து ஒரு நிலத்தைப் பார்த்துட்டு, 'இதை எப்படியாவது வளைச்சுப் போட்டுடணும்'னு சொல்றாரு."

"இதிலே என்ன தப்பு?"

"அந்த நிலம் இரண்டு வருஷத்துக்கு முன்னாலே அவரே வளைச்சுப் போட்டதுதான். அவருக்கே ஞாபகமில்லே!"

- டி. என். பாலகிருஷ்ணன்

"அந்த எறும்போடு, பிரண்டு எறும்பும் அந்த யானை மேலே ஏறிப் பார்க்க ஆசைப்பட்டுச்சு. உடனே பிரண்டுகிட்ட சொல்லிச்சாம். 'நீ தும்பிக்கை வழியா ஏறு. நான் வால்வழியா ஏறுறேன்னு.'"

"ஏன் அப்படி சொல்லிச்சு?"

"தும்பிக்கை வழியா மட்டும் ஏறினா யானை பேலன்ஸ் தவறி விழுந்துடுமே அதனாலதான்!"

- கொடியாலம் கிரி

"என்ன சார் இது, பிச்சைக்காரன் ஏதோ பாட்டுப் பாடி டான்ஸ் ஆடிக்கிட்டே வரான்?"

"அவன் 'Rap' பிச்சைக்காரங்க!"

"?!...?!...?!"

- வெ. ராஜாராமன்

"தலைவர் மீன் பிடிக்கும்போது அவரோட கட்சிக்காரர்களே குட்டையைப் போட்டுக் குழப்பறாங்களே?"

"குழம்பிய குட்டையில்தான் அவருக்கு மீன் பிடிக்கத் தெரியுமாம்!"

- சீர்காழி வி. ரேவதி

"எனக்கு டயரி எழுதும் வழக்கமே கிடையாது என்று நான் உறுதியாகச் சொன்ன பிறகும் உங்களுக்கு என்ன தயக்கம், தலைவரே? நான் கொடுக்கும் இந்தப் பத்து லட்சத்தை வாங்கி உள்ளே வையுங்க."

- என். நாராயணன்

# மாலை மயங்குகின்ற நேரம்

## 21

**அ**ப்போதுதான் மொட்டவிழ்ந்து அலர்ந்து கொண்டிருந்த புதுமலர் வசுமதி. ஆய்ந்து, ஓய்ந்து, எல்லாம் அனுபவித்து முடித்து விட்டவன் போலத் தன் முப்பத்தி யொரு பிராயத்துக்கும் நாலைந்து ஆண்டு அதிகம் போன்ற தோற்றம் மணிவாசகத்துக்கு. வெகு சுமாரான தோற்றம். எப்படிப் பொருந்தும்?

தோற்றத்தை ஒதுக்கினாலும், பத்தொன் பதும் முப்பத்தொண்ணுமா? என்ன பைத்தியக் காரத்தனம்?

இதில் பைத்தியக்காரத்தனத்துக்கு என்ன இருக்கிறது என்று கேட்டான் கிருஷ்ண சந்திரன். "என்னமோ உன் சித்தியின் உறவில் ஒரு பெண், இருபது வயது மூத்தவரை மணந்து, தொங்கத் தொங்கத் தாலியோடு எழுபது வயது வரை வாழ்ந்ததாக நீதானே அன்று அளந்தாய்?" என்று அவள் பேச்சைக் கொண்டே அவளை மடக்கினான்.

"அதுவும் இதுவும் ஒன்றா? அவர்கள் வீட்டில் மிகவும் வறுமை. ஏதோ, எப்படியாவது மகள் வசதியோடு வாழட்டுமே என்று கொடுத்தார்கள். அந்தப் பாட்டியின் அதிருஷ்டம், நெடுங்கால சௌபாக்கியம்! இங்கே அப்படி என்ன அவசியமாம்?"

"அது... உதயா, மறந்து விட்டாயா? என் பெற்றோர், தங்கை விஷயம் நீ தலையிடக் கூடாது என்று சொல்லியிருக்கிறேன் அல்லவா? இந்தப் பேச்சை இத்தோடு விட்டு விடு."

கணவனை ஏறிட்டுப் பார்த்தாள் உதய ரேகா.

சில நிபந்தனைகளுக்கு உட்பட்டதுதான் அவர்களின் இன்றைய உறவு. ஆனால் அதற்கும் அளவென்று ஒன்று இருக்கிறது அல்லவா? சொல்லப் போனால், யார் யார் மனநிம்மதி பெற வேண்டும் என்று இவனை மணக்க முடிவு செய்தாளோ, அவர்களே எக்கேடும் கெட்டும் என்று விட்டு விட முடியுமா?

"நீங்கள் சொல்வது மெய்யே. ஆனால் நிபந்தனை நிபந்தனை என்று ஒரு வாழ்க்கையையே அழிய விட்டு விட முடியுமா?" என்று உதய ரேகா வாதாடினாள்.

"அழிவானேன்? மணி மிகவும் நல்லவன்."

"நீங்கள் சொல்வது ஒருவேளை நிஜமாகவே இருந்தாலும், வாழுகிற காலம் முழுவதும் இருவரும் சேர்ந்து வாழ வேண்டாமா?"

"உண்மை" என்று சுருக்கமாக இயம்பியவனின் குரலைக் கவனியாமல் உதயரேகா மேலே மேலே பேசிக் கொண்டே போனாள். "நீங்களே அன்றைக்கு என்ன சொன்னீர்கள்? நாலு வயது வேறுபாட்டிற்கே 'அறுகிற' அப்படி இப்படி என்று கன்றாவியாகப் பேசினீர்களே; இவர்கள் இருவருக்கும் வயது வித்தியாசம் பன்னிரண்டு ஆண்டுகள்! அதை யோசித்தீர்களா? அப்படி இரண்டாம்தாரமாகவாவது வசுவைக் கொடுத்தாக வேண்டும் என்று என்ன கட்டாயம்?"

"இரண்டாம்தாரம் ஒன்றும் இல்லை. மணிக்குத் திருமணமே ஆகவில்லை; உனக்கும் தெரியும்."

"தாலி கட்டினால்தான் திருமணமா? சிறு வயதில் ஏற்பட்ட காதல் தோல்வியால் அவர் பிரம்மச்சரிய விரதம் பூண்டு விட்டதாக நீங்களே சொல்லியிருக்கிறீர்களே! அப்படி இன்னொருத்தியை மனத்தில் வைத்தவர் என்றால் என்ன அர்த்தம்?"

"உன் சித்தியும் ஓர் இரண்டாம் மனைவிதான், அதை மறந்து பேசாதே."

"அவர்கள் கதையே வேறு. சித்தி குடும்பம் எல்லாம் கொஞ்சம் சிரம தசையில் இருந்தவர்கள்தான். அப்பா ஏதேதோ வழிகாட்டித்தான் மாமாக்கள், தாத்தா எல்லோரும் இப்போது

**ரமணிசந்திரன்**

பரவாயில்லாமல் இருப்பதே. நம் வசுவுக்குத் தான் அந்தக் கஷ்டம் இல்லையே. நான், நீ என்று அவள் கைக்காகப் போட்டியல்லவா போடுகிறார்கள்! ஓகோகோ, உங்கள் நண்பருக்கும் அதே நப்பாசைதானா?" என உதயரேகா எகத்தாளமாக வினவினாள்.

"சும்மா வாய்க்கு வந்ததை உளறாதே. மணிக்கு இதில் விருப்பமே கிடையாது."

"கரும்பு தின்னக் கசக்கிறதாக்கும்! என்ன வேஷமடா அப்பா!" என்று தன் நம்பாமையை வெளிப்படையாகக் காட்டினாள் உதயரேகா.

"அதெல்லாம் ஒன்றும் இல்லை..."

"எது இல்லை என்கிறீர்கள்? உங்கள் தங்கை கரும்பு இல்லை என்கிறீர்களா? அல்லது அவன் குணம் கசப்பு என்கிறீர்களா?" என்று மீண்டும் அவனை நன்றாக மடக்கினாள் மனைவி.

"இதற்குப் பெயர்தான் விதண்டாவாதம் என்பது."

"நீங்கள் செய்வது என்னவாம்? பன்னிரண்டு வயது அதிகம்; பார்வைக்கு வெகு சுமார்; வருமானமும்... வக்கீல் தொழிலில் ஓரளவு வசதி அவ்வளவே! இப்படிப்பட்ட ஓர் ஆளுக்கு உடன் பிறந்த தங்கையை மண முடிக்க விரும்புகிறீர்கள் என்றால் அதற்கு ஒரே ஒரு காரணம்தான் இருக்க முடியும்" என்று அறிவித்தாள் உதயரேகா.

"என்ன காரணம்? தங்கை நல்லபடியாக வாழ வேண்டும் என்பதுதான், வேறென்ன?" என்று புருவம் சுருக்கி சிறு வியப்புடன் மனைவியை நோக்கினான் கிருஷ்ணசந்திரன்.

"சற்றும் பொருந்தாத திருமணத்தில் சந்தோஷம் எங்கிருந்து வரும்?"

எல்லா வகைப் பொருத்தங்களும் கூடி அமைந்திருந்த அவர்களது திருமணத்தில் மட்டும் குதூகலம் கொப்பளித்துக் கொண்டா இருந்தது என்ற எண்ணம் தானாக எழுந்து அவளிடம் பெருமூச்சை வரவழைத்தது.

அவனுக்கும் அதுவே தோன்றியதோ? ஏதோ சொல்ல வாயெடுத்தவன். தலையசைத்து அதை மாற்றி, "பொருத்தம் பற்றி நம் இருவர் கருத்தும் ஒத்துப்போகப் போவது இல்லை. ஆனால், மணிவாசகத்தை மாப்பிள்ளையாகத் தேர்ந்தெடுக்க ஒரே ஒரு காரணம் தான் இருக்க முடியும் என்றாயே, என்ன அது?" என்று வினவினான்.

"முதலிலேயே சொல்லி விடுகிறேன், உங்கள் மணிவாசகத்தைக் குற்றம் கூறுவதாக என் மேல் கோபப்படக் கூடாது; என்ன?" என்ற பீடிகையோடு உதயரேகா சொன்னாள். "ஏதோ ஒரு வகையில் உங்கள் நண்பரிடம்





சந்தை கூடும் இடத்தில் ஓர் உயர்ந்த இடத்தில் நின்ற முல்லா அங்கிருந்த மக்களைப் பார்த்து, "நீங்கள் கஷ்டமில்லாமல் சிறந்த அறிவுபெற ஆசைப்படுகிறீர்களா? முயற்சி சிறிதும் இல்லாமல் முன்னேற ஆசைப்படுகிறீர்களா?" என்று கேட்டார்.

அங்குள்ள எல்லோரும் கைகளைத் தூக்கி, "ஆமாம்... ஆமாம், அதற்கு என்ன வழி?" என்று மிகுந்த ஆவலுடன் கேட்டனர்.

"உங்களில் சோம்பேறிகள் எத்தனை பேர் என்பதை அறிந்து கொள்வதற்காகத்தான் அவ்வாறு கேட்டேன்" என்று அமைதியாகப் பதில் சொன்னார்.

ஆதாரம் : "முல்லாவின் வேடிக்கைக் கதைகள்"

தகவல் : என். ஜெயராமச்சந்திரன்

நீங்கள் சிக்கிக் கொண்டு இருக்கிறீர்கள். அதை வைத்து அவர் உங்களை பிளாக்மெயில் செய்வதால் வேறு வழியின்றி வசுவை அவருக்கு மணமுடிக்க ஒத்துக் கொண்டு வந்து விட்டு, எல்லோரும் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக அது உங்கள் திட்டம் போலக் காட்டுகிறீர்கள் என்பது என் ஊகம்" என்று முடித்தாள்.

"மைகாட்!" என்று கையை விரித்தான் கிருஷ்ணசந்திரன். "உனக்கு இவ்வளவு கற்பனை வளம் உண்டு என்று எனக்குத் தெரியவே தெரியாதே!" என்று வியந்தவன், தொடர்ந்து, "ஒன்று சொல், உதயா. அப்படி என் குடுமி மணியிடம் மாட்டிக் கொண்டு இருப்பதாகவே வை. அந்த நிலையில் என்னைக் காப்பதற்காக நீயும் என் முடிவைத் தானே ஆதரிக்க வேண்டும்? அதை விட்டு எதிர்க்கிறாயே?" என்று விளக்கம் கேட்டான்.

"நீங்கள் மெய்யாகவே ஆபத்தில் சிக்கியிருந்தால் உங்களைக் காப்பாற்ற என் உயிரைத் தரவும் நான் தயங்க மாட்டேன். ஆனால் வசுவின் வாழ்வு என்பது வேறு விஷயம். எந்தக் காரணத்துக்காகவும் அதைப் பலியிட நான் ஒத்துக் கொள்ளவே மாட்டேன்." கணவன் பேசியவிதத்தால், பிரச்னை பெரிதல்ல என்று உணர்ந்தபோதும், உறுதியுடனேயே உதயரேகா பதிலுரைத்தாள்.

பார்வை கனிய, "நீ என் வீட்டாருக்காகவே என்னை மணந்தாய் என்பதை முழு மனத்தோடு ஒத்துக் கொள்கிறேன், உதி. அத்தோடு, இப்படி ஒரு பாசமிருந்த அண்ணி இருக்கும் போது வசுமதியின் எதிர்காலம் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை என்றும் அறிகிறேன். எனவே என் தங்கை – மணிவாசகத்தின் திருமணப் பேச்சை இத்தோடு விட்டு விடுகிறேன். போதுமா?" என்று புன்னகையோடு அவன் கேட்கவும் உதயரேகாவும் முகம் மலர்ந்தாள்.

சில வினாடி கால இதமான அமைதியின் பின், "மணியைப் பற்றி நீ மிகவும் தவறான அபிப்பிராயம் கொண்டிருக்கிறாய், உதி. எந்த ஒரு நிலையிலும், சற்றும் தயக்கமின்றி உதவி கோரிச் செல்லக்கூடிய ஒரே ஆள், அவன்தான் உதி. இதை எப்போதும் நினைவில் கொள். என்ன, ஏது என்று கேட்கக் கூட இல்லாமல் உதவுகிற உத்தமன் அவன்.. உத்தமன் என்கிற ஒரு தகுதி பலவற்றை அழகு, பணம், அந்தஸ்து என்ற எல்லாவற்றையும் ஈடுகட்டி விடக் கூடியது என்று நினைத்தேன்..." என்று யோசனையாக இழுத்தான்.

"இன்னுமொன்று, வயதை விட்டு விட்டீர்கள். அத்தோடு, மிஸ்டர் மணிவாசகம் மிகவும் உத்தமர் என்று உங்களுக்குத் தோன்றுகிறது. அதே போல, அத்தை, மாமா, முக்கியமாக வசுவும், எண்ண வேண்டுமில்லையா?" என்று மென்குரலிலேயே வாதித்தாள் உதயரேகா.

"நான்தான் அந்த எண்ணத்தை அடியோடு விட்டு விட்டேன் என்றேனே?" என்று அவனும் அதே குரலிலேயே இயம்ப, அந்த அலை அத்தோடு ஓய்ந்தது.

உதயரேகாவின் பராமரிப்பில் மாடிச் செடிகள் செழிப்பாய் வளர்ந்து விட, அவைகளில் வண்ண மலர்கள் பல எட்டிப் பார்த்துக் கண்ணைக் கவர்ந்தன.

கணவன் – மனைவி இருவருமாய் அந்த செடிகளிடையே நின்றும், நடந்தும், பாதி மொட்டை மாடியை மறைத்து அமைத்த பச்சை வண்ண, ஒளி ஊடுருவும் ஓட்டுக் கூரையின் கீழ் அமர்ந்தும் தோட்டத்தைப் பார்த்து ரசித்தபடியே பேசிக் கொண்டு இருப்பது வழமை ஆயிற்று. அதிலும் இளவேனில் முடிந்து கோடை தொடங்கவும், இருவரின் பெரும் பகுதி நேரம் இந்தத் தோட்டத்திலேயே கழிந்தது.

அன்று காலையிலிருந்தே ஒரே புழுக்கமாய் இருந்து, மாலை வேளையில் இடி மின்னல், காற்றுடன் பெருமழை பொழியத் தொடங்கி விட்டது.

கூரை ஓடுகளின் மேல் படிந்திருந்த தூசியை மழை நீர் அடித்துச் செல்லும் வரை காத்திருந்த உதயரேகா, பிறந்த வீட்டுப் பழக்கத்தில், கொட்டும் மழையில் நின்று ஆனந்தமாய் நனையலானாள்.

அலுவல் முடிந்து திரும்பி வந்த கிருஷ்ணசந்திரன், சிறு பிள்ளை போல மழையில் நின்று கொண்டிருந்த மனைவியைப் பார்த்துத் திகைத்துப் போனான்.

"இது என்ன மடத்தனம், உதயரேகா? மழையை விட்டு உள்ளே வா. வந்து முதலில் உடம்பை நன்றாகத் துடை" என்று அதட்டினான்.

தொங்கட்டான்கள் ஆட, "ஊகூம்" என்று உதயரேகா தலையாட்டியதோடு சரி.

பதிவு எண்: 26383 போன்: 583241

# கல்பதரு பெனிபிட் பண்டு லிமிடெட்

(கம்பெனிகள் சட்டப்படி பதிவு செய்து நிறுவப்பட்டது)
பதிவு அலுவலகம்: 134, ராசப்ப செட்டி தெரு,
(ஸ்ரீ கந்தகோட்டம் அருகில்) பார்க் டவுன், சென்னை-600 003.

**பிக்சட் டிபாசிட் திட்டம் மாத வட்டிக்கான காசோலைகள் முன் கூட்டியே வழங்கப்படும்**

| காலம் | 46 நாள் | 90 நாள் | 6 மாதம் | 1 ஆண்டு | 2 ஆண்டு | 3 ஆண்டு | 4 ஆண்டு | 5 ஆண்டு |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருட வட்டி வீதம் | 14% | 15% | 16% | 17.5% | 18.5% | 19% | 19.5% | 20% * |



## குபேரன் வைப்பு திட்டம்

வட்டி 21% குறைந்த அளவு டிபாசிட் ரூ. 50,000/- காலம் : 5 வருடம்.
மாத வட்டிக்கான செக்குகள் முன்னதாகவே வழங்கப்படும்



## அமுத சுரபி டிபாசிட் திட்டம்

| டிபாசிட் தொகை | காலம் | கிடைக்கும் தொகை |
|---|---|---|
| ரூ. 5,600 | 15 வருடம் | ரூ. 1,00,000 |
| ரூ. 7,000 | | ரூ. 1,25,000 |



## கல்பதரு மணிபேக் திட்டம்

அ) பிரதி மாதம் ரூ.100/- வீதம் தொடர்ந்து 15 வருடம் செலுத்த வேண்டும்.
முதல் 5ம் ஆண்டு முடிவில் நீங்கள் செலுத்திய ரூ. 6000/-ஐ பெறுவீர் !
2வது 5ம் ஆண்டு முடிவில் மீண்டும் ரூ.6000/-ஐ பெறுவீர் !
3வது 5ம் ஆண்டு முடிவில் ரூ.51,000/-ஐ பெறுவீர் !



## முதியவர் நலத்திட்டம்: வயோதிகர் விதவைகள் கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.

| தொகை | காலம் | வட்டிவீதம் |
|---|---|---|
| ரூ. 10,000 | 12 மாதங்கள் | 20% |
| ரூ. 10,000 கீழ் | | 19% |

**சேமிப்பு டிபாசிட் திட்டம் - 10% வரை வட்டி வழங்கப்படும்**



**கடன்**

நகைகள் பேரில் கிராம் 1க்கு ரூ.300/- வழங்கப்படும் சென்னை மாநகரில் உள்ள சொத்துக்கள் பேரிலும் வழங்கப்படும்

வட்டி விகிதம் ரூ.1.95

அலுவலக நேரம் : காலை 8.30 முதல் 12.30 வரை மாலை 2.00 முதல் 6.00 வரை ஞாயிறு காலை 8.30 முதல் 12.30 வரை

பயன் பெற ரூ. 5/- செலுத்தி பங்குதாரர் ஆவீர். (செவ்வாய் விடுமுறை) பாதுகாப்பு • சேவை • சுபிட்சம்

## GROWTH THROUGH CUSTOMER SATISFACTION

# KUBER MUTUAL BENEFITS LTD

(A Central Govt. Approved Nidhi Company)

A UNIT OF KUBER GROUP - ESTD. 1980.

## SENIOR CITIZEN WELFARE YOJANA

Applicable for persons above 55 years, Pensioners, Handicapped and Widows.

Minimum Deposit Rs. 5,000/-

### ◆ READY RECKONER - 1 ◆

| Period | Rate of Interest (p.a.) | Monthly Interest on Rs. 5,000 Deposit (in Rs.) | Monthly interest on Rs.10,000 Deposit (in Rs.) |
|---|---|---|---|
| 12 Months | 20.5% | 85.50 | 171.00 |
| 24 Months | 21% | 87.50 | 175.00 |
| 36 Months | 21.5% | 89.60 | 180.00 |

❑ DOUBLE IN 42 MONTHS ❑ ❑ TRIPLE IN 60 MONTHS ❑

Loan facility avilable upto 75% of total deposit after 12 months. Minimum deposit Rs. 1000/- and additional amounts in multiples thereof. Premature withdrawal facility after one year permitted & the interest rate payable will be at our Fixed Deposit rate of interest applicable upto the date of premature withdrawal.

**TRANSACTION WITH MEMBERS ONLY**

## KUBER MUTUAL BENEFITS LTD

**Regd. Off. : Kuber Bhawan, Begum Bridge Road, Meerut Ph : 54 37 16, 54 37 17**

**Head Off : Kuber House S-32, Greater Kailash-1 New Delhi - 110 048.**

**Ph : 641 27 49 - 647 26 85 - 621 18 77 - Fax : 011-642 03 78 - 621 1879**

**Branch Off. : R-4 II-nd Floor, Hong Kong Complex, Ramanathan Street, T. Nagar, Madras - 600 017. Ph : 434 07 90.**



## "ஆர்த்ரிட்டீஸ் வலியிலிருந்து நான் நிவாரணம் அடைந்தேன் TABE க்கு நன்றி"



திரு. நம்புங்கள் நாராயணன்

(பிரபல எண் கணித ஜோதிடர்)

M.I.G. 86, அசோக் நகர், 3வது அவின்யூ, புதூர் மேல் நிலைப்பள்ளி எதிரில், சென்னை-83.

"எனது இடது முழங்காலில் அளவுக்கதிகமான வலியினால் நான் பாதிக்கப்பட்டிருந்தேன். எனது இரண்டாவது தளத்திலுள்ள வீட்டிலிருந்து படி இறங்கவே முடியவில்லை. என்னால் பயணம் செய்யவும் முடியவில்லை. 1993-ம் ஆண்டு அக்டோபரில் TABE-ஐ அணுகி அவர்கள் கொடுத்த மூலிகை பவுல்டைஸை தவறாது தினமும் எனது இடது முழங்காலில் தடவிவந்தேன். 20 நாட்கள் கழித்து எனக்கு மகத்தான முன்னேற்றம் தெரிந்தது. "தற்போது எனது இடது முழங்காலுக்கு சிகிச்சை முடிந்து 2 வருடம் ஆகியும் கூட வலி ஏதும் இல்லை". அதனால் நான் எனது வலது முழங்காலிலும் சில மாதங்களுக்கு முன் வலி ஏற்பட்டபோது உடனே TABE-ஐ அணுகி, சிகிச்சை செய்து கொள்ள முடிவு செய்தேன். சிகிச்சையும் முடிந்து, நான் தற்போது நலமாக இருக்கின்றேன். படி ஏறி இறங்குவதிலும் தற்போது எந்த சிரமமும் இல்லை "அதனால் தான் எனக்கு தெரிந்தவர்களிடம் TABE சிகிச்சை செய்து கொள்ளுங்கள் என்று சிபாரிசு செய்து வருகிறேன்."

★ காலத்தால் சோதிக்கப்பட்ட ஆயுர்வேத மூலிகை பவுல்டீஸ் (poultice) மூலம் நாங்கள் விரிவானதொரு வெளிப் பிரயோக சிகிச்சை திட்டத்தை ஆர்த்ரிட்டிஸ், ஸ்பாண்டிலிட்டிஸ், தோள்பட்டை வலி, இடுப்பு வலி, குதிகால் வலி போன்றவைகளுக்கு தகுதி வாய்ந்த ஆயுர்வேத மற்றும் அலோபதி டாக்டர்களின் மேற்பார்வையின் கீழ் வழங்குகிறோம்.

★ "இரு வேறு நபர்கள் ஒன்றுபோல் இருப்பதில்லை". என்பதை TABE கேர் கிளினிக்ஸ் (பி) லிமிடெட் நன்கு உணர்ந்துள்ளன. எனவே, காலம் மற்றும் விளைவுகளைப் பொறுத்தவரை சிகிச்சையும் பலன்களும் வேறுபடலாம்.

**கலந்து ஆலோசிக்க, இப்போதே தொடர்பு கொள்க: தொலைபேசி: 8553772**

1, ஸ்ரீரங்கம் அவின்யூ, 53, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை - 8

காலை 9.00 மணி முதல்; இரவு 7.00 மணி வரை. வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்.

அனைத்து முக்கிய கிரெடிட் கார்டுகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

TABE CARE CLINICS (P) LIMITED

**TABE சிகிச்சை நிலையங்கள் இப்பொழுது TABE கேர் கிளினிக்ஸ் (பி) லிமிடெட்**

## ஜனவரி மாத சிறப்புப் பரிசுகள்!

ஜனவரி மாதக் கல்கி இதழ்களில் வெளியான சிறுகதைகளில் சிறந்த சிறுகதையாகப் பெரும்பான்மை வாசகர்கள் தேர்ந்தெடுத்திருப்பது "தாய்மை" சிறுகதை. எழுதியவர் : சுப்புராஜ். (24-ஏ, கீழப்புது தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் – 625 125.)

இவருக்கான சிறப்புப் பரிசாக ரூ. 500 வழங்கப்படுகிறது.

'குடும்பத்தில் பொறுப்பும், அயலாரிடம் பரிவும், ஜனக் குழந்தையிடம் தாயன்பும் என ஒரு பண்பட்ட பெண்மையின் இனிய படப்பிடிப்பு!' என்று தாம் தேர்ந்தெடுத்ததற்கான காரணத்தைக் கச்சிதமாக எழுதி ரூ. 100 பரிசு பெறும் வாசகர் : கி.தாண்டேஸ்வரன் (138 -H, டி.பி. ரோடு, திருச்செந்தூர்.)

– ஆர்.

• சுப்புராஜ்



"சனிப் பிடித்துக் கொள்ளும். இருமல், காய்ச்சல் என்று நீதான் கஷ்டப்படுவாய். சொன்னால் கேள், உதயா" என்று கிருஷ்ணசந்திரன் அதட்டவும், "எங்கள் சித்தி மாதிரி கவலைப்படுகிறீர்களே! ஆனால் நாங்கள் யாரும் சித்தி சொல்வதை இந்த ஒன்றில் மட்டும் கேட்கவே மாட்டோ...ம்..." என்று அவள் முடிக்கையில் ஓர் ஊதல் காற்று அடிக்க, அதன் சிலுசிலுப்பில் உடல் நடுங்கிச் சிரித்தாள் உதயரேகா.

பொறுமையிழந்து, "சொன்னால் கேட்பது என்பது, உன் அகராதியிலேயே கிடையாதா? உன்னை..." என்று கையை நீட்டி மனைவியைப் பிடித்து இழுத்தான் கிருஷ்ணசந்திரன்.

அவள் திமிறிக் கொண்டு விடுபடச் செல்ல முயல, ஈரத்தரை வழுக்க, இருவருமே தரையில் சரிந்தனர்.

"ஆகா! இப்போது நீங்களும் சேர்ந்து நனைந்து விட்டீர்கள், பாருங்கள்!" என்று வெற்றியோடு சிரித்தவளை வெறித்து நோக்கினான் கிருஷ்ணசந்திரன்.

பெரிய மழைத் துளி ஒன்று உதயரேகாவின் செவ்விதழின் மீது 'பட்டுச் சிதறியது.

தன் வசமிழந்து, மனைவியைப் பற்றி அணைத்த கிருஷ்ணசந்திரன், வெற்றிச் சிரிப்பு சிரித்த அவளது வாயில் அழுந்த முத்தமிட்டான்.

அதற்கு மேல், இருவருக்கும் சுயஉணர்வு வந்த போது மழை சுத்தமாய் நின்று விட்டிருந்தது.

சுற்று முற்றும் ஒரு திகைப்புடன் சுழன்ற கிருஷ்ணசந்திரனின் பார்வை மீண்டும் மையலுடன் நோக்கிய மனைவியிடம் வந்து நின்றது.

"ராட்சசி!" என்றவன், சட்டெனக் குனிந்து மீண்டும் அவளை முத்தமிட்டான்.

அவளை எழுப்பி, "உள்ளே வா. முதலில் நல்ல வெந்நீரில் இந்தச் சில்லிப்புப் போகக் குளி" என்று கைப்பிடியாக அறைக்குள் அழைத்துச் சென்றான்.

'ஹீட்'டரைப் போட்டு விட்டு 'ஷவர்' அடியில் மனைவியை நிறுத்தியவனுக்கு, அங்கேயும் அவளை விட்டு விலக முடியாது போயிற்று. அப்போது மட்டுமல்ல; இரவெல்லாம் பகலானது போல, அன்றிரவு முழுவதுமே கிருஷ்ணசந்திரன் விநாடி நேரம் கூடக் கண்மூடி உறங்கவில்லை; அவளையும் உறங்க விடவில்லை. வாழ்நாள் முழுமைக்குமான இன்பங்கள் அத்தனையையும் அன்றே அனுபவித்துத் தீர்த்து விடுகிறவனைப் போல மீண்டும் மீண்டும் மனைவியை நாடினான்.

கீழ்வானத்தில் உதயம் வரப் போவதன் முன்னோடியாக கங்குல் கரைவதைக் கடைசியாகக் கண்ட ஞாபகம் உதயரேகாவுக்கு. அதன் பிறகு அவள் எப்போதோ உறங்கியிருக்க வேண்டும்.

மீண்டும் அவள் விழித்த போது கிட்டத்தட்ட உச்சிவேளையாகி விட்டிருந்தது.

பகல் வெளிச்சம் வராமல், இழுத்து மூடப்பட்டிருந்த ஜன்னல் திரைகள் கணவனின் கரிசனத்தைக் காட்ட, பெருமிதமாய் முறுவலித்தபடியே திரும்பிப் பார்த்தால் அங்கே கிருஷ்ணசந்திரனைக் காணவில்லை. மேஜை மேல் அவனது சிறு கைப்பெட்டியையும் காணாது போகவே, 'இன்னுமா அலுவலகம்? களைப்பாய் இராதா?' என்று எண்ணியவாறே சோம்பல் முறித்தவண்ணம் எழுந்த போது, அவள் கண்ணை அந்தக் கடிதம் உறுத்தியது.

பெரிய வெள்ளைக் காகிதத்தை நாலாக மடித்து, கட்டிலுக்கருகிருந்த மேஜை விளக்கருகே, ஒரு பேப்பர் வெயிட்டின் கீழ் இருந்தது.

எடுத்துப் படித்துப் பார்த்தவளுக்குத் திகைப்பும் அதிர்ச்சியுமாக ஒன்றுமே புரியவில்லை.

ஏனெனில், "இப்போது உன்னைப் பிரிந்து போகிறேன். விதி நல்லதாக இருந்தால், ஒரு வேளை, நாம் மீண்டும் சந்திக்கலாம். ஆனால் எந்தக் காரணம் கொண்டும் என்னை நீ தேட வேண்டாம் - தேடக் கூடாது" என்று கிருஷ்ணசந்திரன் அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தான்.

(தொடரும்)

# நீங்கள் கேட்டவை - தராசு

## 'ஜெ'க்குச் சிலை வைக்கப் போகிறார்களாமே?

● இரா. பிரபாகரன், நெய்தவாசல்.

? *ஒரு நாளைக்கு இருபது மணி நேரம் உழைக்கிறேன் என்கிறாரே 'ஜெ'?*

! இருபது மணி நேர உழைப்பிலேயே இத்தனை ஊழல் என்றால்... நல்லவேளை இருபத்து நாலு மணி நேரமும் அவர் நாட்டுக்காக உழைக்கவில்லை!

● பி. பிரகதீஸ்வரன், செங்கல்பட்டு.

? *'நர்சரி பள்ளிகளில் நன்கொடை வாங்கப்படுவதாகப் பொது மக்களிடமிருந்து அரசுக்குப் புகார் எதுவும் வரவில்லை' என்று அமைச்சர் பொன்னுசாமி கூறியுள்ளது குறித்து...?*

! புகார் இல்லாததால் குறைபாடு இல்லை என்று ஆகிவிடாது! மக்கள் தங்கள் குறைகள் ஒவ்வொன்றையும் புகாராக எழுத ஆரம்பித்தால் கோப்புகளுக்குக் கோட்டையில் இடம் காணாது - கிடங்குதான் கட்ட வேண்டியிருக்கும்!



• இருபது மணி நேரம்...

● புளியரை கணேசன், சென்னை - 30.

? *காவிரிப் பிரச்னையில் அரசியலை மறப்போம்; சமுகமாகப் பேச்சு வார்த்தை நடத்துவோம் என்று தேவகௌடா நேசக்கரம் நீட்டியிருக்கிறாரே...?*

! நேசக்கரமில்லை அது... வேஷக்கரம்!

● தி. பொ. சண்முகசுந்தரம், திட்டக்குடி. ❑

? *மௌனமாக இருப்பதில் வல்லவர் பிரதமரா? சூப்பர் ஸ்டாரா...?*

! ராவ் அபூர்வமாக வாய் திறந்தாலும் புதிதாக ஏதாவது சொல்வார். ஆனால் ரஜினி பேசினாலும் எழுதினாலும் புதிய கருத்து மிக மிக அபூர்வமாகவே வருகிறது. ஆக, இப்போதைக்கு வெற்றி பெற்று வருபவர் ரஜினிதான்!

● ஜோ. பன்னீர்செல்வம், சென்னை - 84.

? *சி.ஏ.ஜி. அறிக்கையில், தமிழக அரசின் சொத்து 17 சதவிகிதம் அதிகரித்தும் கடன் 89 சதவிகிதம் அதிகரித்து இருப்பதாகக் கூறப்பட்டுள்ளதே... இதற்குக் காரணம் என்ன?*

! அந்த அளவுக்கு மோசமான நிதி நிர்வாகம் என்று அர்த்தம்! 'திவாலா அரசு' என்று குமரி அனந்தன் வர்ணித்தது சரியே. 'சி.ஏ.ஜி. அறிக்கை ஒரு மாயத் தோற்றம்' என்ற முதல்வரின் மழுப்பல் முழுப்பூசணியைச் சோற்றில் மறைக்கும் முயற்சி!

● சு.நா. இராஜேஸ்வரன், மோரட்டுப்பாளையம்.

? *'ரஜினிக்கும் எனக்கும் உள்ள தொடர்பு பூர்வ ஜென்மத் தொடர்பு... அதுதான் தற்போது என்னையும் அவரையும் இணைத்திருக்கிறது. இந்த இயற்கையின் கட்டளையை நாம் மீற முடியாது' என்று ஆர்.எம். வீரப்பன் பேசியிருப்பது பற்றி...?*

! முன்பு காலத்தின் கட்டாயம்; இப்போது இயற்கையின் கட்டளை - வித்தியாசம் அவ்வளவுதான்!

● ஆர். இருதயராஜ், கும்பகோணம்.

? *'கொடைக்கானல் ஓட்டலுக்கு அனுமதி வழங்கியதில் மோசடி எதுவும் நடைபெறவில்லை; அனுமதி வழங்க சட்ட விதிகளைத் திருத்தியதைத்தான் தவறு என்று நீதிமன்றம் கூறியுள்ளது' என செல்வகணபதி புது விளக்கம் கொடுத்துள்ளாரே?*

! அப்பன் குதிருக்குள் இல்லை என்பது போன்ற விளக்கம்...! சட்டவிதிகள் திருத்தப்பட்டது எதனால்...? நீதிமன்றம் திருக்குறளை மேற்கோள் காட்டி முதல்வரைக் கண்டனம் செய்ததை அமைச்சர் மறந்தாலும் நாம் மறக்கவில்லை.

● சீதா மகன், மதுரை - 16.

? *தமிழகம் அமைதிப் பூங்காவாமே...?! - கவர்னர் பொய் பேசலாமா...?*

! கவர்னர் எங்கே பேசினார்? அம்மாவின் சொற்படி, எழுதிக் கொடுக்கப்பட்டதற்குச் சும்மா வாயசைத்தார். ஆளுனர் உரை என்பது ஆளுங்கட்சியின் கொள்கை விளக்க அறிக்கை, அவ்வளவுதான்! ஆளுனருக்கு அதில் ஒப்புதல் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை.

● என். சண்முகம், திருவண்ணாமலை.

? *ஸ்ரீரங்கத்தில் முதல்வர் ஜெயலலிதாவுக்*

குச் சிலை வைக்கப்படுவது குறித்து...?

! பொதுவாக, உயிருடன் இருப்போருக்குச் சிலை வைக்கும் வழக்கம் கிடையாது. ஒரு வேளை 'ஜெ' ஆட்சியின் அஸ்தமனத்தை உணர்த்துகிறதோ இந்த நடவடிக்கை...!?

● ஜெ. ரஜினி ராம்கி, மயிலாடுதுறை.

*? கிரிக்கெட்டில் இந்தியா சாம்பியனாகும் வாய்ப்பு குறைவா?*

! குதிரை ரேஸ் போன்ற 'பெட்'கட்டும் போட்டிகளில் ஈடுபட நான் விரும்பவில்லை. எனினும் 21/2 அன்று மேற்கிந்திய தீவுக்கும் இந்தியாவுக்கும் இடையே நடந்த போட்டி முடிவைப் பார்க்க, இந்தியாவின் வெற்றி வாய்ப்பு குறித்து நம்பிக்கை பிறக்கிறது.

● என். செல்வம், கொப்பம்பட்டி.

*? ஹவாலா ஊழலை அடுத்து, டெல்லியில் வீட்டு வசதி ஊழல் பூகம்பமாகக் கிளம்பியுள்ளதே?*

! அதிலும் உடனடி நடவடிக்கை எடுக்கும்படி சி.பி.ஐ.க்கு உச்சநீதிமன்றம்தான் உத்தரவு பிறப்பிக்க வேண்டி வந்தது. இல்லாவிட்டால் அதிகாரிகள், கையூட்டு அளித்த நபர்களுக்குச் சலுகை காட்டி, வீடுகள் ஒதுக்கீடு செய்த விஷயம் அம்பலமாகாமலே போயிருக்கும்!

● க.கு.வே. சித்திரவேலு, கருப்பம்புலம்.

*? வங்காள தேசத்தில் மீண்டும் ஆட்சியைப் பிடித்து விட்டாரே கலீதா ஜியா...?*

! எதிர்க்கட்சிகளெல்லாம் தேர்தலைப் புறக்கணிக்க, ராணுவத்தைக் காவலுக்கு நிறுத்தியல்லவா அது நடத்தப்பட்டது! எதிர்க்கட்சிகளின் அழைப்புக்கு இணங்கி, பெரும்பான்மை மக்கள் வோட்டே போடாமல் இருந்திருக்கிறார்கள். இந்த நிலையில் வெற்றிக்கு அர்த்தமே இல்லையே!

● கு. அருணாசலம், தென்காசி.

*? தென் ஆப்பிரிக்க கிரிக்கெட் வீரர் காரி கர்ஸ்டனின் உலகக் கோப்பை சாதனை பற்றி?*

! முந்தைய சாதனையை முறியடிக்கும் வகையில் 188 ரன்கள் எடுத்ததைப் பாராட்டும் அதே நேரத்தில், மிக பலவீனமான ஐக்கிய அரபிய நாடுகள் அணியை எதிர்த்து ஆடும்போது நிகழ்த்திய சாதனைதான் அது என்பதையும் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது.

• புது விளக்கம்



• வெற்றியா...?



• டி.கே.சி. முத்திரை



• ஏன் பேசினார்?



• நேசமில்லை....



• மீற முடியாதது...



● ஆர். நாகராஜன், செம்பனார்கோயில்.

*? ஹவாலா மோசடி வழக்கு தொடர்பாக பிரதமர் ராஜினாமா செய்யாதது ஏன்...?*

! இதுவரை ஜெயின் டைரியிலிருந்த பழைய கணக்குகள்தானே வெளிச்சத்துக்கு வந்துள்ளன... அதற்கே பல்ராம் ஜாகர், வி.சி. சுக்லா தொடங்கி சமீபத்திய பூடா சிங், அரவிந்த் நேதம், தவான் ராஜினாமாக்கள் என்று பட்டியல் நீள்கிறது. ஜெயினின் உறவினர் வீட்டில் சிக்கிய ஃப்ளாபி டிஸ்குகளில் இன்னும் சமீபத்திய கையூட்டு விவரங்கள் எல்லாம் இடம் பெற்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது. அந்த விவரங்களும் முழுமையாக வெளியானால், நீங்கள் சொல்வது போல் பிரதமரும் ராஜினாமா செய்ய வேண்டி வருமோ என்னவோ... இந்தக் கணம் வரை சி.பி.ஐ. பிரதமருக்கு 'மிஸ்டர் க்ளீன்' பட்டம்தான் வழங்கியுள்ளது.

● டி.ஆர். பாலசந்தர், திருநெல்வேலி - 6.

*? சமீபத்தில் படித்த துக்க செய்தி?*

! துறைவன் - எஸ். கந்தசாமி மறைந்த செய்தி. சிறுகதைகள், கவிதைகள் எழுதிப் புகழ்பெற்றவர். அபூர்வமாக எழுதினாலும் அருமையாக எழுதுவார். அகில இந்திய வானொலியில் பணிக்குச் சேர்ந்து படிப்படியாக உயர்ந்து துணை டைரக்டர் ஜெனரல் பதவியையும் வகித்தார். அரிய பண்பாளர். டி.கே.சி.யால் இனம்காணப்பட்டு இலக்கிய வட்டத்துக்கு அறிமுகப்படுத்தப்பட்டவர் என்பதற்கு அதிகமாக துறைவனின் ஆற்றல் குறித்து வேறெதுவும் கூறத் தேவையில்லை.

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
தி. பொ. சண்முகசுந்தரம்,
109, நெடுஞ்சாலை,
திட்டக்குடி வட்டம்,
606 106.

# எத்தனை விருதுகள் அம்மாவுக்கு!

◆ 'தண்ணி காட்டுகிறார்களே கௌடா' தலையங்கம், பொறுப்புடனும், நியாயமாகவும் தைரியமாகவும் எழுதப்பட்டது. பிரதமமந்திரியாகட்டும், தமிழக முதல்வராகட்டும், கர்நாடக முதல்வராகட்டும் யாருக்கும் பயிர்கள் வாடுவதோ, உயிர்கள் வாடுவதோ முக்கியமில்லை. தங்களுக்குத் தேவையெல்லாம், வோட்டு, வோட்டு, வோட்டு... இதற்காக மக்களை எப்படியும் திசை திருப்ப எந்த நடுவர் மன்ற உச்சநீதிமன்ற ஆணைகளையும் கிடப்பில் போடத் தயார். தலையங்கம் சரியான சாட்டை அடி.
விருதுநகர் - 1,
இரா. சந்திரசேகரன்.

◆ பொன் நகையைத் தொலைத்த தோழி, அப்புறம் 5004 ஜோடிகளின் அம்மா, ஜம்பதில் ஆசை வந்த மணமகன்... அப்பப்பா, அம்மான்னா சும்மாவா? வெளிச்சம் பரவப் பரவ விழா 'வெறுப்பு' வாங்கியது உண்மைதான். இன்று திருச்சி மக்கள் இருட்டையே இரவு நேர நிரந்தரமாய்க் கொண்டிருப்பதாய்ச் சொல்கிறது ஒரு பத்திரிகை! இதற்கு யாரிடம் மனு கொடுப்பதாம்?
புளியங்குடி, அ. ராஜமோகன்.

◆ டி. ராஜேந்தர் பேட்டியா? ஆச்சரியமாக இருக்கிறதே! பேச்சில் பட்டாசு வெடிக்கும் ராஜேந்தர், தென்றல் நடையில், அடக்கத்தின் மறுபதிப்பாய்... நம்ப முடியவில்லை.
கும்பகோணம் - 1,
டி.எஸ். சீதாராமன்.

◆ ஜெயலலிதாவிற்கு வழங்கப்பட்ட சிறந்த பெண்மணி விருது பற்றிய கட்டுரை பல உண்மைகளை வெளிப்படுத்தியது. ஜெயலலிதாவிற்கு சி.பி.ஐ. கொடுத்த 'அடிதடி விருது', அமலாக்கப் பிரிவு கொடுத்த 'ஊழல் விருது', வருமான வரித்துறை கொடுத்த 'வரி ஏய்ப்பு விருது' போன்ற இந்திய விருதுகளையெல்லாம் பின்னுக்குத் தள்ளிவிட்டு ஃபாரின் விருதை பிரம்மாண்டப்படுத்த நினைத்திருக்கிறார்கள் போலும்!
நெல்லையப்பபுரம்,
டி. செல்வன்.

◆ பாதி நோயைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கும்பொழுதே மருந்துகளை எழுத ஆரம்பிக்கும் தற்கால டாக்டர்களின் மத்தியில் தம்முடைய படிப்பு, பட்டம், பதவி, புகழ் ஆகியவற்றை ஒதுக்கி வைத்துவிட்டு நோயாளியின் நிலைக்கு இறங்கி வந்து, நோயின் தன்மையைப் பூரணமாக அறிந்து வைத்தியம் பார்க்கும் டாக்டர் சர்மா வித்தியாசமானவர்தாம். அவருடைய சேவை தொடரட்டும். சிறந்த டாக்டரை இனம் கண்டு அறிமுகப்படுத்திய கல்கியின் சேவையும் தொடரட்டும்.
சென்னை - 59,
ரொசாரியோ ரவிச்சந்திரன்.

◆ ஸ்ரீமன் நாராயண ஜீயர் சுவாமிகள் முன்னின்று நடத்திய விஷ்ணு சஹஸ்ரநாம பாராயணம் நிகழ்ச்சியில் ஆயிரக்கணக்கானவர்கள் பங்கேற்றது குறித்து மகிழ்ச்சி. இதேபோல் மற்ற ஆன்மிகத் தலைவர்களும் ஆன்மிக நிகழ்ச்சிகள் நடத்தினால் மக்களிடையே மேலும் ஆன்மிகப் பற்று வளரும்.
கோயமுத்தூர்,
கோ. கல்யாணசுந்தரம்.

◆ "லவ் பேர்ட்ஸ்" சினிமா விமர்சனம் தைரியமாக எழுதப்பட்ட ஒன்று. ரகுமான் எதைக் கொடுத்தாலும் கேட்க முடியுமா என்ன? "வழக்கத்துக்கு விரோதமாக இசைக்குப் பதில் இரைச்சல் தந்திருக்கிறார் ரகுமான்" என்று துணிந்து உண்மையை எழுதியுள்ளீர்களே, பாராட்டுக்கள்!
கொடுமுடி, ந. சேதுராமன்.

◆ 'பறக்கும் ஆசைகள்' சிறுகதை வெகு யதார்த்தம். நடையில் விறுவிறுப்பு. முடிவு கச்சிதம்.
திருச்சி - 14, கே. மீனா.

**ரூ. 25 பரிசு பெறும் கடிதம்:**

◆ 'திருச்சி அ.இ.அ.தி.மு.க. மாநாட்டு ஏற்பாடுகள் பொது மக்கள் போக்குவரத்திற்குக் குந்தகம் இன்றிச் செய்யப்பட்டுள்ளன. தஞ்சை - திருச்சி பஸ், டோல்கேட்டில் நிறுத்தப்பட்டு, எங்கிருந்து எங்கு வேண்டுமானாலும் செல்ல நகரப் பேருந்து கள் உண்டு.' இதுதான் பத்திரிகைகளில் வெளியான அறிவிப்பு. 8.2.96 பகல் ஒரு மணியளவில் எனது பேத்தி கடுமையாக நோய்வாய்ப்பட்டு திருச்சி சுப்ரமணியபுரம் கோபால் நர்சிங் ஹோமில் சேர்க்கப்பட்டுள்ளதாக எனது மாப்பிள்ளையிடமிருந்து தொலைபேசிச் செய்தி. நானும் என் மனைவியும் உடனே புறப்பட்டோம். தஞ்சை பஸ் ஸ்டாண்டில் திருச்சிக்கு டிக்கெட் எனக் கேட்டால், 'துவாக்குடி வரைதான்' என கண்டக்டர் டிக்கெட் கொடுத்தார். துவாக்குடியில் 'திருவெறும்பூர் வரை டவுன் பஸ் செல்லும்' என்றார்கள். டவுன் பஸ் செல்லக் கூடிய இதே ரூட்டில் தஞ்சை பஸ்ஸையும் விடக் கூடாதா? திருவெறும்பூருக்கு டவுன் பஸ்ஸில் சென்றால், அதற்குப் பிறகு எங்கும் பஸ் கிடையாது என்றார்கள். ஆட்டோவை சுப்பிரமணியபுரம் வருகிறாயா என்று கேட்ட போது 'ஐயய்யோ அதற்கருகில் டோல்கேட்டில்தான் அம்மா இருக்கிறாங்க. போக முடியாது' என்றார். ஓர் இரயில்வே ஊழியர் எங்களிடம் அலுவலகப் பணியாளர்களுக்கென 5.05க்கு ரயில் உள்ளது என்றார். அதில் ஏறிப் பொன்மலையில் இறங்கி நான்கு கி.மீ. தூரம் நடந்து கோபால் நர்சிங் ஹோமை அடைய இரவு மணி ஏழு! ஏறத்தாழ ஆறரை மணி நேரம் கழித்தே பேத்தியைப் பார்க்க முடிந்தது. இதுதான் பொது மக்களுக்குத் தொந்தரவு இருக்காது என்ற அறிவிப்பின் இலட்சணமா?
கல்யாணபுரம், அ. சம்பத்.

**வட்ட மேஜை**

# உள்ளத்தை அள்ளித்தா

**கா**தல் கிரௌண்டில் நகைச்சுவை ஒன் டே மேட்ச். கவுண்டமணி, கார்த்திக், மணிவண்ணன் என்று மூவரணி ஃபீல்டர்கள். ரம்பா பந்து வீச, திசைக்கொரு சிக்ஸர் அடித்து, பாணா கிளப்புபவர், டைரக்டர் சுந்தர்.சி.

முழு நீள நகைச்சுவைப் படம் என்று முடிவு செய்து கொண்டு, முதல் காட்சியிலேயே அதை பகிரங்கப் படுத்தி விடுவதால் நமது எதிர்பார்ப்புகளுக்குத் தானாக ஒரு எல்லை விழுந்து விடுகிறது. ஏமாற்றமில்லை. நோய் விட்டுப் போகும் என்பதற்கு நூறு சத உத்தரவாதம் தந்திருக்கிறார்கள்.

ஒரு மாதிரி 'லெயி'த்தனமாய் இழுத்துப் பேசி நடிப்பதை இதிலும் விடவில்லை, கார்த்திக். மிலிட்டரி அப்பாவின் அராஜகத்துக்குப் பயந்து, சொல்லாமல் ஊட்டிப் பக்கம் ஓடி விடுகிறார். ஊட்டி குளிர் போதாதா? உறை பிரித்த புது லக்ஸ் போல அங்கே ஒரு ரம்பா. துள்ளலும் சிணுங்கலும் காதலும் ஊடலுமாகப் பொழுது கரைகிறது.

நிஜத்தில் ஹீரோ, கார்த்திக் இல்லை. மாறாக, கவுண்டமணியும் மணிவண்ணனும். ஜேப்படி கவுண்டரும் கஞ்சர் மணியும் திரையை நிறைத்துக் கோலோச்சுகிறார்கள்.

வடிகட்டின கஞ்சத் தந்தையிடம் காசு பெயராமல் கஷ்டப்படும் ரம்பா, ஆள் செட்டப் பண்ணி தன்னைத்தானே கடத்தச் செய்கிறார். நிஜமாகவே ரம்பாவைக் கடத்தி, காசு பண்ண முயலும் கார்த்திக்- கவுண்டமணி கூட்டணி இடையே நுழைந்து குட்டையைக் குழப்ப, தியேட்டர் வெடிக்கிறது- சிரிப்புப் பட்டாஸில்.

பல பாடல்களிலிருந்து செதுக்கி எடுத்து புதுப்பாடல்கள் தந்திருக்கிறார் சிற்பி. ஒன்று தேறுகிறது.

'அழகிய 'லே'லா'. ஒளிப்பதிவில்' நிறைய 'ஜெர்க்' இருக்கிறது. ஆகவே கண் உறுத்தல்.

இதையெல்லாம் யாரும் படத்தில் கவனிக்க மாட்டார்கள். சிரிக்கவே நேரம் போதாது என்பது காரணம்.





வேலாயுதம் ஜமான்னா எங்க பக்கத்துல, தெருக்கூத்துக்கு ரொம்பப் பேர் போனது. இருந்தாலும் இப்போ அந்தக் கலைக்கு அவ்வளவு மவுசு இல்லை.

பக்கத்துக் குப்பத்திலிருந்து எங்க வீட்டு வேலைக்கு வந்து போய்க் கொண்டிருந்த வேலாயுதத்தின் மனைவி, அப்பாவிடம் 'தற்போது சின்டப்படாம நசிஞ்சு போய் ஈ ஓட்டிக் கொண்டிருக்கிற கூத்தாடிக் கலைஞர்களுக்கு அரசாங்கத்தில் நிவாரணம் கோர ஏதாவது வழி இருந்தா சொல்லுங்களேன் சாமி'ன்னு கேட்டப்போ -

"கவர்மென்ட்ல இதற்கான கோர்ஸ் ஏதும் இருக்கா, இல்லியான்னு எனக்குத் தெரியலை. இருந்தாலும் என் பெண்ணை ஒரு வார்த்தை கேட்டுட்டுச் சொல்றேன்"னு அப்பா சொன்னார்.

ஈஸிசேரில் ஏதோ சிந்தனையாக இருந்த அப்பாவை அணுகி, "யோசனை ரொம்ப பலமாப்பா?" என்றேன்.

"அதெல்லாம் ஒன்னுமில்லேம்மா. நம்ம வீட்டு வேலைக்காரி ஆனந்தாயி, எப்பவுமில்லாம என் நெஞ்சிலே ஒரு விஷயத்தை விதைச்சுட்டா. அதான், அவளுக்கு ஒத்தாசை பண்ண ஏதாவது வழி இருக்கான்னு..."

"....................."

"அவள் புருஷன் நல்ல கலைஞன்ம்மா."

"தெரியுமே!"

"போன போகியின் போது கூட பக்கத்துக் குப்பத்து எல்லையம்மன் கோவில்ல கூழ் ஊத்திக் கூத்து நடத்தினாங்க... அதிலே வேலாயுதம் வேஷம் தரிச்சு 'சல்லிய மகாராஜன் வந்தேன். தேரை விட்டுக் கீழே குதிச்சேன்'னு பாடிக்கிட்டு, அந்த மரக் குந்தாணியிலிருந்து தேரை விட்டுக் கீழே குதிக்கிற பாவனையில் தாவிக் குதித்து, 'மோரை விட்டுக் கூழைக் கரைச்சேன்'னு பாடினதும், அவங்கவங்களும் பகபகன்னு வாய் விட்டு, விலா நோகச் சிரித்ததை இன்னமும் என்னால மறக்க முடியலேம்மா."

வாஸ்தவம்தான்.

அப்பா நூத்துக்கு நூறும் அப்படியே அச்சாய்ச் சொன்னார். பிசகில்லே.

பழைமையை அசைபோட்டுக் கொண்டு வெட்டியாய் திண்ணையைத் தேய்த்த கலைஞர்களுக்கு என்னாலான உதவியைச் செய்யலாமென்று, கடந்த தடவை எங்கள் பிரிட்டிஷ் கலாசார, தகவல் மையத்திற்கு லண்டனிலிருந்து வந்து போன நாடக, இசை, திரைப்பட நுண்கலைப் பரிவர்த்தனைக் குழுவினரை மகிழ்விக்க, அவர் புரோகிராம் ஒன்றை ஏற்பாடு செய்தேன்.

அப்பா சொன்ன மாதிரியே வேலாயுதம் வேஷம் தாங்கி, 'சல்லிய மகாராஜன் வந்தேன். தேரை விட்டுக் கீழே குதிச்சேன்'னு பாடிக்கிட்டு அந்த மரக்குந்தாணியிலிருந்து தாவிக் குதிச்சே, வந்திருந்த மேலைநாட்டவர்களை ஒரு அசத்து அசத்திட்டார்.

அதனால, இம்முறை இத்தாலியிலிருந்து வந்திருக்கும் கலைக் குழுவினரை மகிழ்விப்பதற்காக வரச் சொல்லி, ஆனந்தாயியிடம் தகவல் சொல்லி அனுப்பினேன்.

அவரிடமிருந்து பதில் ஏதுமில்லை.

'ரேட் கட்டலே. வேற இடத்துல அட்வான்ஸ் வாங்கிட்டதினால தேதி ஈரெட்டா இருக்கு'ன்னு எல்லாம் சொல்ல வாய்ப்பில்லே. ஏன்னா, அவர் கிராக்கி இல்லாம உன்னி பிடிச்சு உட்கார்ந்திருக்கிறது ஊரறிஞ்ச விஷயம்.

இருந்தும் அவர் ஆஜராகாததினால எனக்கு முன்ளு மேல நிற்கிற மாதிரி ஆகிட்டது.

"மேலைநாட்டுக் கலைஞர்கள் முன்னாடி ஆடவும் பாடவும் கொடுத்து வச்சிருக்கணுங்கிறதைப் புரிஞ்சுக்காம பெரிசா பீஸ்காரம் பண்றீங்களே"ன்னு நாலு வார்த்தை உறைக்கிற மாதிரி கேட்டுடறதுன்னு கைஎடிக்கை எடுத்துக்கிட்டு நானே புறப்பட்டேன்.

வாசலில் உட்கார்ந்திருந்த வேலாயுதம், "வாங்கம்மா. வரச் சொல்லிச் சொன்னீங்கன்னு எம் பொஞ்சாதி வந்து

சி. எம். நாராயணன்



# கலைஞன்

கேட்டுடணும் போல உள்ளுக்குள் எரிச்சல் மண்டிற்று.

தணித்துக் கொண்டேன்.

"போன தடவை நீங்க நடத்திக் காட்டின நிகழ்ச்சியினால எங்களுக்கு அமோக பேர். இந்தத் தடவை இத்தாலியிலிருந்து வேறொரு கலைக் குழு வந்திருக்கு. நாளைய மறுநாள் ராத்திரி... ஒரு மணி நேரம் உங்க புரோகிராமை நடத்திக் காட்டினீங்கன்னா..."

"ஒரு மணி நேரம் என்னம்மா... ஒரு ராத்திரி பூராவும் ஆடக் கூட நாங்க தயாரா இருக்கோம். ஆனா..."

"ஆனா என்ன சொல்லுங்க."

"மத்த மத்த கலைஞர்கள் மாதிரி எங்க ஆட்டத்தையும் பாட்டத்தையும் படம்பிடிச்சுக் காட்டியோ, பாராட்டி எழுதியோ, பார்த்துப் பரவசப்பட வாய்ப்பத்தவங்க நாங்க..."

"வாஸ்தவம்தான்."

"உங்க முணுமுணுப்பும் முகச்சுளிப்பும்தாம்மா எங்க உயிர் மூச்சு. கைப்புண் மாதிரி எதையும் கண்ணுக்கு முன்னாடி..."

"புரியலியே. ரெமுனரேஷன் போதலேங்கறீங்களா?"

"கலைஞனுக்கு காசும் பணமும் ரெண்டாம் பட்சம்தாம்மா. நான் சொல்ல வர்றது..."

அவர் தயங்கவே ஊக்குவித்தேன்.

"நம்ம ஜனங்களானா இதுக்கு முன்னாடி எத்தனை தடவை எங்க ஆட்டபாட்டத்தைப் பார்த்திருந்தாலும் நான் வேஷங்கட்டி தேரை விட்டுக் கீழே குதிக்கிற பாவனையில் அந்த மரக் குந்தானியிலிருந்து தாவிக் குதிச்சு 'சல்லிய மகாராஜன் வந்தேன். தேரை விட்டுக் கீழே குதிச்சேன்'னு பாடறதுக்குள்ளேயே சொல்லுச்சி"ன்னு வார்த்தைகளை வெருவாக விழுங்கினார். உட்கார்ந்து பேச ஒரு முக்காலியைக் கொண்டு வந்து போட்டார்.

"முடியலேன்னு சொல்லிட்டா நான் வேற ஏதாவது புரோகிராமுக்கு அரேஞ்சு பண்ணுவேனில்ல? அத்த விட்டுட்டு சொல்லிச்சி, கொல்லிச்சின்னு இழுக்கடிக்கறீங்களே"ன்னு அதநும் 'ஹா ஹா'ன்னு வாயைப் பிளந்துக்கிட்டு விழுந்து விழுந்து சிரிக்குங்க... இவங்களானா..."

என்ன சொல்கிறார் இவர்?

"மோரை விட்டுக் கூழைக் கரைச்சேன்னு விளாவரியா பாடியும் கூட ஒரு பாதிப்பும் இல்லாம, பிகுபிகுன்னு முழிச்சுகிட்டு, விளக்கிச் சொல்றவர் வார்த்தைக்குத் தவம் கிடக்கிறாங்க. இவர்களுக்கு கையைக் காலை மட்டுமே ஆட்டி அபிநயிக்கிற பொம்மலாட்டம் போதுமேம்மா. என் கூத்து எதுக்கு அனாவசியமா?"

என்னுள் சிவுக்கென்றது.

"நான் இப்படிச் சொல்றேனேன்னு வருத்தப்படாதீங்கம்மா. காதலுக்கு வேணா வாய் வார்த்தைகள் தேவையற்றதாய் இருக்கலாம். ஆனா ஆட்டத்துக்கு இசைவா, பாடற வாய்ப்பாட்டை தன்னிச்சையா உணர்ந்து ரசிக்கத் தெரியாதவங்க கிட்ட ஆடவும் பாடவும் செய்யறது கஷ்டம்மா. ஆயிரம்தான் கேட்கிறதுக்கு மேல நீங்க அதிகப்படியா பணம் கொடுக்கிறதாயிருந்தாலும், வைக்கோல் கன்னுக் குட்டியைப் பார்த்து மாடு ஏங்கற மாதிரி மனசுக்கு வேதனையா இருக்கும்மா... அதனால..."

புலி பசித்தாலும் புல்லைத் திங்காதுங்கிற போது எப்படிக் கட்டி இழுக்கிறது? விட்டுட்டேன்.

## 9. ஆதித்யன் அடைந்த ஆச்சர்யங்கள்!

சுக்கிலபட்சம் துவங்கி மூன்று நான்கு தினங்களே ஆகியிருந்தன. மேற்கில், மூக்கா லுக்கும் மேல் வெட்டப்பட்ட நிலவும் இறங்கி மறைந்து விட்டது. தஞ்சையை நோக்கிச் சென்ற அந்தப் பாதையில், இடையில் குறுக் கிட்ட சிறு ஊர்களைத் தவிர வழியில் வேறு ஒளியேதும் இல்லை. கும்மிருட்டாக இருளடித் துக் கிடந்த அந்த வேளையில் எதிரில் வெறும் நிழலுருவங்களாகப் புரவிகளும் அந்த நான்கு வீரர்களும் புலப்பட்டனர். தனது புரவியின் வேகத்தைக் குறைத்து விட்ட ஆதித்யன், அவர்கள் போசள வீரர்களாயிருக்கும் பட்சத் தில் அவர்களை ஒழித்து விட்டே தஞ்சையை அடைவது என்று தீர்மானித்தான்.

ஆனால் அவன் எதிர்பார்த்ததற்கு மாறாக அவர்களை நெருங்கியதும் புரவியிலிருந்து குதித்த நால்வரில் ஒருவன், ஆதித்யனை அணுகி, ஒருமுறை தலைதாழ்த்தி வணங்கிய துடன், கச்சையிலிருந்து எதையோ எடுத்து பாண்டிய இளவலின் முன்பு நீட்டவும் செய் தான். அந்த இருளிலும் பளீரென்று சிவந்த ஒளியை வீசிய அதை உற்றுக் கவனித்த ஆதித் யனுக்கு அது சோழ மன்னரின் முத்திரை மோதிரம் என்பது புலப்பட்டது. புலியின் உருவம் பொறிக்கப்பட்ட அந்த மோதிரத்தின் சிவந்த விழிகள் ஆதித்யனை உற்றுப் பார்த் தன.

அடுத்து அந்த வீரனின் குரலும் ஒலித்தது. "பாண்டிய இளவலுக்கு வணக்கம். நாங்கள் சோழர் படையைச் சேர்ந்தவர்கள். தங் களைப் பாதுகாப்புடன் அழைத்து வரும்படி துறவியாரின் கட்டளை" என்றான் அந்த வீரன்.

"அப்படியானால் நீங்கள் என்னை இத்தனை தூரம் பின்தொடர்ந்திருக்க வேண்டாமே. ஆரம்பத்திலேயே என்னி டம் கூறியிருக்கலாமே" என்றான் ஆதித் யன்.

"இல்லை இளவரசே! துறவியார் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார். வீரர்கள் சூழ தாங்கள் பகலில் வருவது பலர் கவனத்தை யும் ஈர்க்கலாம். எனவே இருள் கவிந்த பின்பே தங்களைச் சந்தித்து விவரம் தெரிவிக்கவும் உத்தரவிட்டிருந்தார்" என்றான் அந்த வீரன்.

"சரி, இனி நாம் செல்லலாமல்லவா?" ஆதித் யன் வினவினான்.

"சற்றுப் பொறுங்கள் பிரபு. தஞ்சையை நெருங்க நெருங்க போசள வீரர் நடமாட்டம் அதிகரிக்கும். தாங்கள் இந்த சோழ வீரர் உடையை அணிந்து கொண்ட பின்பு செல்ல லாம் பிரபு" என்ற வீரனின் கரத்தில் ஒரு துணி மூட்டையும் தோன்றியது.


துறவியாரின் எச்சரிக்கையை எண்ணி உள்ளுக்குள் வியந்து கொண்ட ஆதித்யன், அந்த வீரனிடமிருந்து உடைகளைப் பெற்றுக் கொண்டு சற்று நேரத்தில் சோழ வீரனாகவே மாறி வந்தான்.

"பிரபு, இனி நாம் செல்லலாம்" என்ற வீரன், தொடர்ந்து, "கோட்டை வாயிலைக் கடக்கும் போது சற்று வேகமாகக் கடந்து விடுங்கள். நேராக அரண்மனையை அடைந்த தும் உள்ளே சென்று அரண்மனை வீரர்களு டன் கலந்து விடுங்கள்" என்றான்.

துறவியாரின் ஏற்பாட்டின்படியே சகல மும் நடந்தன. அந்த வீரனைக் கண்டதும் கோட்டை வாயில்கள் திறக்க முற்பட்டன. கனவேகமாக அந்த வீரர்களுடனேயே உள்ளே நுழைந்து விட்ட ஆதித்யன், சற்றுத் தொலை வில் பெரும் புலிக் கொடி கம்பீரமாகப் பறந்த அரண்மனையை நோக்கிப் புரவியை துரித மாகச் செலுத்தினான். அரண்மனை வாயிலி லும் துறவியாரின் ஏற்பாடுகள் கனகச்சிதமாக இருந்தன.

ஆதித்யனின் புரவி, வாயிலை அடைந்து அவன் கீழே குதிப்பதற்கும் அரண் மனையின் பக்கவாட்டிலிருந்து இருபதுக் கும் குறையாத சோழ வீரர்கள் வெளி வந்து அரண்மனைக்குள் நுழைவதற்கும் சரியாயிருந்தது. வீரர்களுடன் வீரனாக உள்ளே நுழைந்த ஆதித்யன், பிரமித்தான். அவன் உள்ளே நுழைந்ததும் அரண் மனையின் வெளிப்புற வாயில் மூடப்பட்டது. உடன் நுழைந்த வீரர்களும், உள்ளே ஏற்கெனவே இருந்த சோழ வீரர்களும் சட்டென்று இரு பக்கங் களிலும் அணிவகுத்து

# இந்திர தனுசு



வாட்களைத் தாழ்த்தி பாண்டிய இளவலை வரவேற்றார்கள்.

உருவித் தாழ்ந்த வாட்களும், மரியாதை நிரம்பிய வீரர்களின் பார்வையும் போதாதென்று உள்ளிருந்து "பாண்டிய இளவல் வர வேண்டும், வர வேண்டும்" என்று முகமன் கூறியபடியே வந்த சோழப் பேரமைச்சரையும் கண்ட ஆதித்யனின் பிரமிப்பு அதிகரித்தது.

அவனை நெருங்கி ஒருமுறை தலையைத் தாழ்த்திய பேரமைச்சர், "பாண்டிய இளவலை கோட்டை வாயிலிலிருந்து வரவேற்பதுதான் முறை. ஆனால் கோட்டையிலிருந்து இந்த அரண்மனை வரை இருப்பவர்கள் போசள வீரர்கள். ஆனால் அரண்மனைக்குள் முற்றிலுமாக சோழ வீரர்கள்தான். எனவேதான் தாங்கள் உள்ளே நுழைந்த பின்பு இந்த வரவேற்பு" என்றார் சற்று சங்கடம் தொனித்த குரலில்.

ஆதித்யனுக்கு நிலைமை புரிந்தது. துங்கபத்திரா நதியிலிருந்து தெற்கே குமரி வரை ஒரே குடையின் கீழ் தமிழகத்தை ஆண்ட சோழ வம்சம் அன்னியருக்கு இடம்கொடுத்த ஒரே குற்றத்துக்காக, ஓர் இளவரசனுக்கு விரும்பியபடி பகிரங்கமாக வரவேற்பு அளிக்கவும் அதிகாரமின்றி அரண்மனைக்குள்ளேயே

**விஷ்வக்சேனன்**

## அருள்வாக்கு



புத்தியைக் கெடுப்பதில் கள்ளு, கஞ்சா அளவுக்குப் போகாவிட்டாலும், 'அடிக்ட்' - ஆக அடிமைப் படுத்துகிற சக்தி காபி, டீக்கும் இருப்பதால்தான் அவை உதவாது என்பது. போதையை உண்டுபண்ணுவது - Intoxicant - என்று இவற்றைச் சொல்ல முடியாவிட்டாலும், நரம்பை ஊக்குவிக்கிறவை - stimulant- என்பதால் தள்ளத்தான் வேண்டும். 'ஸ்டிமுலேட்' பண்ணுவது அப்போதைக்குக் கிளுகிளுப்பைத் தந்து உத்ஸாஹப்படுத்துவதாமானாலும், முடிவிலே இப்படி செயற்கையாக தூண்டப்பட்ட நரம்பு மண்டலம் பலஹீனம்தான் அடையும். காபியில் இருக்கிற 'கஃபைன்' விஷவஸ்துவே என்று ஸகலரும் ஒப்புக் கொள்கிறார்கள்.

டீயும் அநாசாரம்தான். என்றாலும் காபி போல் அவ்வளவு மோசமில்லையாதலால், சுறுசுறுப்புக்கு ஏதாவது பானம் வேண்டத்தான் வேண்டும் என்கிறவர்கள் டீ வேண்டுமானால் கொஞ்சம் சாப்பிடலாம். இப்படிச் சொன்னதால், "பெரியவா டீ சாப்பிடச் சொல்றா" என்று அர்த்தம் பண்ணிக் கொண்டு விடக் கூடாது. காபி, டீ மாதிரி ஏதுவாவது இல்லாமல் முடியவே முடியாது என்று இருக்கிறவர்கள் டீ வேண்டுமானால் கொஞ்சம் சாப்பிட்டுக் கொண்டு, அதையும் படிப்படியாக விட வேண்டும்.

நல்ல வஸ்துவான பாலில் இந்த ஸாமான்களைக் கலந்து கெடுக்க வேண்டியதே இல்லை. அதிகாலையில் வெறும் பாலே சாப்பிடலாம். பகலில் மோராக்கிக் குடிக்கலாம். மோர்க் கஞ்சியாகவும் சாப்பிடலாம்.

**- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.**

சுருங்கி விட்ட அவலம் அவன் உள்ளத்தை உருக்கியது. அவன் சித்தத்திலோடிய எண்ணங்கள் முகத்தில் படர்ந்த வருத்தக்குறியைக் கொண்டே யூகித்த பேரமைச்சரின் சொற்கள் சற்று வேகத்துடனேயே வந்தன : "பாண்டிய இளவலின் வருத்தம் புரிகிறது. ஆனால் இந்த நிலை மாறும் நாள் அதிக தூரத்தில் இல்லை. வாருங்கள், தங்களுக்காகத் துறவியார் காத்திருக்கிறார்" என்றபடியே திரும்பி நடந்த பேரமைச்சரைத் தொடர்ந்த ஆதித்யன், மேன்மாடத்தை நோக்கிச் சென்ற படிகளில் ஏறத் துவங்கினான்.

இரண்டாவது மாடத்தை அடையும் முன்பு குறுக்கிட்ட சிற்பத் தூண்களும், நுணுக்கமான வேலைப்பாடுகள் நிறைந்த பெரும் கதவுகளும், சுவர்களில் தீட்டப்பட்டிருந்த சித்திரங்களும் ஆதித்யனைப் பிரமிக்க வைத்தன. மேன்மாடத்து அறையின் வாயிலிலேயே நின்ற அமைச்சர், ஆதித்யனை உள்ளே செல்லும்படி கூறிவிட்டு வாயிலில் நின்றார்.

அறைக்குள் நுழைந்த ஆதித்யனின் பிரமிப்பு இன்னும் உயர்ந்தது. அறையின் மூலைகளில் நின்ற பாவை விளக்குகள் வீசிய ஒளியும், மேலிருந்து தொங்கிய யவனர் சர விளக்குகள் பொழிந்த ஒளிவெள்ளமும் அந்த அறையை இந்திரலோகமாகவே மாற்றியிருந்தன. சுவர்களில் பல நாட்டுப் படைக்கலங்களும், பல போர்களில் சோழர் படைகள் கலந்து கொண்ட விதங்களைப் பற்றிய சித்திரங்களும் தெரிந்தன. அறையின் மூலையில் உயர்ந்த பட்டுத் துணிகளை விரிப்புகளாகக் கொண்டு, ஓர் அழகிய மஞ்சமும் கிடந்தது. விரிப்புக்கள் கருங்காமலும் கசங்காமலுமிருந்த விதம் அதை யாரும் பயன்படுத்தவில்லையென்பதைத் தெரியப்படுத்தியது. ஏறக்குறைய ஒரு அரசனின் அந்தரங்க அறையைப் போலவேயிருந்த அந்த அறை, உண்மையில் ஒரு துறவியின் அறை தானா என்ற சந்தேகத்தை எழுப்பியது.

அறைக்குள் துறவியாரோ வேறு பணியாட்களோ இல்லாததைக் கவனித்த ஆதித்யன், உட்புறமாக மேலும் நடந்து வெளித் தாழ்வரையை அடுத்து நீண்ட உப்பரிகையை அடைந்தான். உப்பரிகையின் கைப்பிடிச் சுவரில் ஒரு காலை ஊன்றி, ஒரு கரத்தை இடையில் முட்டுக் கொடுத்து, பலத்த சிந்தனையில் ஆழ்ந்திருந்தார் சைவத் துறவியார்.

துறவியாரின் அகலமான முதுகின் உரத்தையும், திரண்ட புஜங்களையும், நீண்ட கரங்களில் முழங்கைக்குக் கீழே தெரிந்த வாள் வடுக்களையும் கவனித்த ஆதித்யன், அவர் துறவறம் பெறுவதற்கு முன்பு தமிழகத்தின் சிறந்த மல்லராகவோ, பெரும் வாள் வீரராகவோ இருந்திருக்க வேண்டும் என்று தீர்மானித்தான்.

அவன் காலடியோசை கேட்டு நிதானமாகத் திரும்பிய துறவியாரின் பெரு விழிகள் ஆதித்யனைக் கண்டதும் இன்னும் மலர்ந்தன. நீண்ட சடை முடியையும், தாடியையும், நீறு பளிச்சிட்ட அகன்ற நெற்றியையும், அரையில் உடுத்தியிருந்த காவியையும் கண்ட ஆதித்யன், அந்த அறையின் ராஜ போகத்திற்கும் அவருக்கும் அறவே தொடர்பில்லாமலிருந்ததையும் கவனித்தான். எல்லாவற்றையும் விட அவனைப் பெரிதும் கவர்ந்தவை துறவியாரின் கண்கள்தாம். அகன்று பெரிதாக விழித்த அந்த

# ஈடு இணையற்ற டெபாசிட் திட்டங்கள்

பென்ஷனர்/பொதுஜன பாதுகாப்புத் திட்டம் : } 1 வருடம் : 30%
3 வருடம் : 36%

வட்டி மாதா மாதம் வழங்கப்படுகிறது

## மேக்சிமம் இன்கம் ஸ்கீம்

ரூ. 5,000 : 1 வருடம் கழித்து ரூ. 6,750 ஆகும்
3 வருடத்தில் ரூ. 12,577 ஆகும்

## முன்கூட்டிய வருவாய் திட்டம்

குறைந்தபட்ச டெபாசிட் தொகை ரூ. 5,000/-
வட்டி : 1 வருடம் 20%; 2 வருடம் 24%. ஒரு வருட வட்டியை டெபாசிட் செய்யும் தேதியன்றே பெறலாம்

## குழந்தைகள் எதிர்காலப் பாதுகாப்புத் திட்டம்

ரூ. 5,000 : 15 வருடத்தில் ரூ. 1,76,250 ஆகும்
10 வருடத்தில் ரூ. 53,700 ஆகும்

## தாத்தாவின் பரிசுத் திட்டம்

ரூ. 1,000 : 10 வருடத்தில் ரூ. 10,740 ஆகும்
15 வருடத்தில் ரூ. 35,250 ஆகும்

## சுமங்கலி கல்யாண திட்டம்

ரூ. 10,000 : 3 வருடத்தில் ரூ. 25,155 ஆகும்
சேமிப்புக் கணக்கு : 14%

டெபாசிட்டுகள் கம்பெனியின் சொத்தின் மீதான தொடர் உரிமையால் பாதுகாக்கப்படுகின்றன. டெபாசிட் செய்யும் தேதியன்றே அசலுக்கும், மாத வட்டிக்கும் செக் தரப்படும்.

பெஸ்ட் பெனிபிட் அண்ட் கேரண்டி ஃபண்ட் டிரஸ்ட்,
பெஸ்ட் பெனிபிட் ஃபண்ட் லிமிடெட்.
3-வது மாடி, சாந்தி காம்ப்ளக்ஸ், 26, ரங்கநாதன் தெரு,
சென்னை - 600 017. போன் : 4348560, 4347025.

கிளைகள் :
- 5, 2-வது மெயின் ரோடு, நியூ காலனி, குரோம்பேட்டை, சென்னை - 600 044.
- 7, ஸ்டேஷன் ரோடு, சானடோரியம், சென்னை - 600 047.
- நெ. 13, காலேஜ் ரோடு, நங்கநல்லூர், சென்னை - 600 061.

# சர்க்கரை வியாதியிலிருந்து நான் மீண்டது எப்படி?

நலமடைந்தவரின் கடிதமும், விலாசமும்: திரு.S. அய்யாசாமி, சின்டிகேட் ரெசிடென்சி,
3, Dr. நாயர் ரோடு, தி.நகர், சென்னை-17. போன்: 4340087/ 4344610

அன்புள்ள J.V.G. சேகர், Dr. மதுரம் சேகர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி! நான் தங்களின் மருத்துவத்தைப் பற்றி அனுபவத்தில் கண்ட அளவிற்ற கருத்தினை தங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். இக்கடிதம் தங்களின் கடினமான உழைப்பினை மேலும் ஊக்கப்படுத்துவதற்கு ஒரு பெரிய கருவியாக அமைய வேண்டும். சுமார் 30 வருடமாக என்னை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்த சர்க்கரை நோய், B.P. யினால் எனக்கு 2 முறை ஹார்ட் அட்டாக் வந்துள்ளது. நான் சென்னையில் பிரபலமான அலோபதி மருத்துவமனைகளில் மருத்துவம் பார்த்தும், பல இலட்சங்கள் செலவு செய்தும் எனது உடல்நிலை நாளுக்கு நாள் நோய் அதிகரித்துக் கொண்டே கட்டுப்பாடில்லாமல் இருந்தது. நீரழிவு நோய்க்கு பல வருடமாக இன்சுலின் ஊசி காலை, மாலை 40 யூனிட் போட்டும் கட்டுப்படாமல் மேலும் கால்களில் உணர்ச்சியற்ற நிலை, மலச்சோர்வு, நரம்புத் தளர்ச்சி, வேலை செய்ய முடியாமை, அதிக களைப்பு, தூக்கமின்மை போன்ற இடிபாடுகளுடன் வாழ்ந்து கொண்டிருந்தேன்.

எனது நண்பர் அன்பாலயா பிலிம்ஸ் நிறுவனர் (வழக்கறிஞர்) திரு.K. பிரபாகரன் அவர்கள் என்னை பார்த்தபொழுதெல்லாம் தங்களின் காந்திஜி இயற்கை நல்வாழ்வு நிலையத்திற்கு வந்து சிகிச்சை எடுக்குமாறு வற்புறுத்திக் கொண்டே இருந்தார். நம்பிக்கையில்லாமல் நானும் அவருடன் தங்கள் நிலையத்திற்கு வந்து ஆலோசனை பெற்றும், நம்பிக்கையில்லாமல் சென்று விட்டேன். 10 நாட்களிலேயே நான் சுய நினைவிழந்து சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டு குணமாகாமல் கஷ்டப்பட்டேன். அப்போதும் நண்பர் திரு.K. பிரபாகரன் அவர்கள் என்னை வற்புறுத்தி தங்கள் நிலையத்திற்கு அழைத்து வந்தார்.

என் மனைவிக்கும், எனக்கும் அன்பான ஆறுதலுடன் நல்ல நம்பிக்கை அளித்து உணவு முறைகளை அறிவுறுத்தி மேலும் உயிருள்ள இயற்கை மூலிகை மருந்துகளை கொடுத்தீர்கள். அதோடு 15 நாட்களுக்கு அக்குபங்சர் சிகிச்சை செய்தீர்கள். முதல் வாரத்திலேயே தங்களின் மருத்துவத்தால் உணர்ச்சியே இல்லாத என் கால்களில் நல்ல உணர்ச்சியை கண்டேன். மேலும் கொடுமைப்படுத்திய சர்க்கரை வியாதி 38-ம் நாள் தங்களின் மருத்துவத்தால் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. இன்சுலின் ஊசி தினமும் 2 முறை போட்டும் கட்டுப்படாமல் ஒரு நாள் கூட நார்மல் ரிசல்ட்டை பார்க்காத நான் தங்களிடம் நலமடைந்தேன். தினமும் 500 அடிகள் கூட நடக்க முடியாமல் இருந்த நான் 7 கிலோ மீட்டர் வரை நடக்க முடிகிறது. மேலும் எனது உடல் எடை 95 கிலோவிலிருந்து 74 கிலோவாக குறைந்து நலமுடன் இருக்கிறேன். எனது மனைவிக்கும் சர்க்கரையின் அளவு தங்களால் கட்டுப்பாடுடன் இருந்து வருகிறது.

இனி உயிர் வாழ்வோமா? வாழ மாட்டோம் என்று எனது வாழ்க்கையில் நம்பிக்கை இழந்த நிலையில் என்னை பூரண உடல் நலத்துடன் சர்க்கரையின் அளவு தொடர்ந்து இரத்தத்திலும், சிறுநீரிலும் கட்டுப்பாடுடன் இருப்பதற்கு காரணம் தங்களின் ஈடு இணையற்ற மருத்துவ தொண்டால்தான் என்பதை இவ்வுலக மக்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். தங்கள் பணி மேலும் வளர்ந்து பலரும் நலம் பெற வேண்டுமென எண்ணி தங்களுக்கு இறைவன் அருள் புரிய வேண்டுமென வாழ்த்துகிறேன். அன்புடன், S.அய்யாசாமி,



**Dr.J.V.G. SEKAR,** Ph.D. (Medicine)
**GANDHIJI NATURE CURE CENTRE**

23-D, North Boag Road, (Mandira Apartments)
T.Nagar, MADRAS-600 017.
Ph: 8257059, Resi: 8257462 Fax: 091-044-8255630

NATURE CURE
GINRC-INDIA

## மாற்றப்பட்டுள்ள புதிய முகாம் ஒவ்வொரு ஆங்கில மாதமும்

1-ந் தேதியும் 18-ந் தேதியும் சென்னை: காலை 10 மணி முதல் 1 மணி வரை மேலே உள்ள முகவரியில் ☎ 044/8257059

2-ந் தேதி காஞ்சிபுரம்: காலை 11 மணி முதல் 12 மணி வரை, ஹோட்டல் ஜெயபாலா இன்டர்நேஷனல் (ஹோட்டல் சரவண பவன்), 504, காந்தி ரோடு ☎ 04112/242348

2-ந் தேதி பாண்டிச்சேரி: மாலை 5 மணி முதல் 7 மணி வரை, ஹோட்டல் ராம் இன்டர்நேஷனல், ராமன் தியேட்டர் அருகில். ☎ 0413/37230 (10 lines)

3-ந் தேதி கடலூர்: (S.A.Dt.) காலை 8 மணி முதல் 11 மணி வரை, ஆற்காடு உட்லண்ட்ஸ் ஹோட்டல் ☎ 04142/20707, 20717

3-ந் தேதி சிதம்பரம்: பிற்பகல் 2 மணி முதல் 3 மணி வரை, M.A.T. லாட்ஜ், 24-27, S.P. கோவில் தெரு, ☎ 04144/22457

3-ந் தேதி மயிலாடுதுறை: மாலை 5 மணி முதல் 6 மணி வரை, செல்வா லாட்ஜ், 15-A, கச்சேரி ரோடு (B.D.O. ஆபீஸ் எதிரில்) ☎ 04364/24329

4-ந் தேதி கும்பகோணம்: காலை 8 மணி முதல் 10 மணி வரை, ஹோட்டல் ஆதித்யா, 11, தஞ்சாவூர் மெயின் ரோடு, ☎ 0435/21794,21795,23262

4-ந் தேதி மன்னார்குடி: பிற்பகல் 12 முதல் 1 மணி வரை, P.M.M.லாட்ஜ், 57, மேல ராஜ வீதி. ☎ 04367/22477

4-ந் தேதி தஞ்சாவூர்: மாலை 4 மணி முதல் 6 மணி வரை, அசோகா லாட்ஜ், சாந்தி, கமலா தியேட்டர் ரோடு, ☎ 04362/20021

5-ந் தேதி திருச்சி: காலை 8 மணி முதல் 11 மணி வரை ஹோட்டல் ஆனந்த். (சென்ட்ரல் பஸ் நிலையம் அருகில்) ☎ 0431/460545

5-ந் தேதி விழுப்புரம்:பிற்பகல் 3 மணி முதல் 4 மணி வரை ஸ்ரீ ராமகிருஷ்ணா லாட்ஜ், கே.கே.ரோடு, முருகன் தியேட்டர் அருகில் ☎ 04146/23289

8-ந் தேதி சேலம்: காலை 11 மணி முதல் 12 மணி வரை, ஹோட்டல் செல்வம் புதிய பஸ் நிலையம் அருகில், ☎0427/449331, 449333

8-ந் தேதி ஈரோடு: மாலை 4 மணி முதல் 12 மணி வரை, ஹோட்டல் ஆக்ஸ்போர்டு, பஸ் நிலையம் அருகில் ☎ 0424/70761

9-ந் தேதி கோயம்புத்தூர்: காலை 9 மணி முதல் 11 மணி வரை சேரன் பேலஸ் சாந்தி தியேட்டர் பின்புறம் ☎ 0422/210265

10-ந் தேதி மதுரை: காலை 8 மணி முதல் 11 மணி வரை ஹோட்டல் கிரான்ட் சென்ட்ரல் மேல பெருமாள் மேஸ்திரி தெரு. (தங்கம் தியேட்டர் அருகில்) ☎ 0452/543941

10-ந் தேதி கரூர்: மாலை 5 மணி முதல் 6 மணி வரை, ஹோட்டல் ஆர்த்தி. (திண்ணப்பா தியேட்டர் அருகில்) ☎ 04324/20122

11-ந் தேதி நாமக்கல்: காலை 9 மணி முதல் 10.30 மணி வரை ஹோட்டல் தேவி அன்னபூர்ணா, திருச்சி ரோடு. ☎ 0486/20433, 21336

11-ந் தேதி தர்மபுரி: பிற்பகல் 2 மணி முதல் 3 மணி வரை ஹோட்டல் ராமசஸ், பைபாஸ் ரோடு ☎ 04342/ 60141

14-ந் தேதி பெங்களூர்: காலை 9 மணி முதல் 1 மணி வரை ஹோட்டல் பிராட்வே, கெம்ப கவுடா ரோடு, (கல்பா தியேட்டர் அருகில்) ☎ 080/2872321 Resi: 2281381

15-ந் தேதி திருப்பத்தூர்: (N.A.A.Dt.) மாலை 4 மணி முதல் 5 மணி வரை, 102/2, இரயில்வே ஸ்டேஷன் ரோடு (சப்-கோர்ட் எதிரில்) ☎ 04179/ 22134, 20882, 20699

16-ந் தேதி ஆம்பூர்: காலை 10 மணி முதல் 11 மணி வரை சம்பங்கி லாட்ஜ் ☎ 04176/ 43311

16-ந் தேதி வேலூர்: (N.A.A.Dt.) பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரை ஹோட்டல் கன்னகா (ஹோட்டல் கங்கா) 16, ஆபீசர் லைன், ☎ -416/23060

18-ந் தேதி சென்னை: காலை 10 மணி முதல் 1 மணி வரை மேலே உள்ள முகவரியில் ☎ 044/8257059

விழிகளில் ஒரு கம்பீரமான அழகு தெரிந்தது. கூர்மையாகப் பாய்ந்த பார்வையில் ஒரு கனவுச் சாயை லேசாகப் படர்ந்திருந்தது. இவற்றைக் கவனித்த ஆதித்யனுக்கு இவர் உண்மையில் துறவிதானா என்ற சந்தேகமும் எழுந்தது.

அவனது ஆராய்ச்சிப் பார்வையைக் கவனித்த துறவியாரின் இதழ்களில் படர்ந்த முறுவல், விழிகளிலும் பரவி, அவர் முகத்துக்கு ஒரு களையை அளித்தது. "வா, ஆதித்யா!" என்ற அவர் குரலில் முழுமையான அன்பு கலந்து ஒலித்தது.

"சோழ நாட்டு சைவத் துறவியாரைப் பற்றிப் பலமுறை கேள்விப்பட்டிருக்கிறேன். நேரில் சந்திக்கும் பாக்கியம் இன்றுதான் கிடைத்தது."

துறவியாரின் பதில் நிதானமாக வந்தது. "நினைவு தெரிந்து நீ இப்பொழுதுதான் சந்திக்கிறாய் ஆதித்யா."

"தாங்கள் கூறுவது விளங்கவில்லை" – ஆதித்யனின் குரலில் சந்தேகம் லேசாகத் தொனித்தது.

"இதற்கு முன்பே நான் உன்னைப் பல முறை சந்தித்திருக்கிறேன். ஆனால் அது உனக்கு நினைவிருக்கக் காரணமில்லை. என் தோற்றமும் அப்போது வேறு விதமாயிருந்தது. உனக்கும் மிகவும் சிறு வயது. எனவே நினைவிருக்கக் காரணமில்லை. அதிருக்கட்டும். பாண்டிய மன்னர் என் வேண்டுகோளுக்கு ஒப்புக் கொண்டாரா?" துறவியாரின் குரலில் ஆவல் தெரிந்தது.

"ஆம்" என்ற ஆதித்யனின் பதிலைக் கேட்டதும், "மிக்க மகிழ்ச்சி ஆதித்யா" என்றார் துறவியார். "இனி நம் பணியைத் துரிதமாகத் தொடங்கலாம். என் வாழ்நாளுக்குள் தமிழகம் அன்னியரிடமிருந்து விடுபட்டு மீண்டும் தமிழ் மன்னர்களின் அரசு அமைவதைக் காண வேண்டும் என்ற என் லட்சியம் நிறைவேறி விடும்" – துறவியாரின் முகத்திலும் வார்த்தைகளிலும் மிதமிஞ்சிய நம்பிக்கை தெரிந்தது.

அவரது மகிழ்ச்சியும், நகைப்பும் ஆதித்யனையும் தொற்றிக் கொண்டது.

அதே மலர்ந்த பெருவிழிகளால் ஆதித்யனை ஏறிட்ட துறவியார், "ஆதித்யா, பாண்டிய மன்னரின் நோக்கமும் எனது வாழ்வின் லட்சியமும் ஒரே திசையில் ஓடுகின்றன. ஆனால் நான் போசளரையோ, தொண்டை மண்டலத்திலிருக்கும் காகதீயரையோ நேரிடையாக சோழ வீரர்களைக் கொண்டு எதிர்க்க இயலாது. சோழ ராஜேந்திரருக்கு முன்பு அரியணையிலிருந்த மூன்றாம் ராஜராஜர் அவர்களுடன் செய்து கொண்டிருக்கும் ஒப்பந்தங்களை ராஜேந்திரரோ, அவர் சார்பில் ஆட்சியைக் கவனிக்கும் நானோ மீற இயலாது. ஆனால் மறைமுகமாக அவர்களின் பலத்தைக் குறைக்கலாம். சோழர் படையிலும் தற்போது அதிக வீரர்கள் இல்லை" என்றார். பேச்சை சற்று நிறுத்தி ஆதித்யனுக்குத் தாம் கூறியவை பற்றி சிந்திக்கச் சற்று அவகாசமும் அளித்தார்.

ஆதித்யனுக்கு அவர் கூறியவை அனைத்தும் சரியென்று பட்டாலும் அவரது வார்த்தைகளின் இறுதிப் பகுதி சற்று சந்தேகத்தை அளித்ததால் அவரை உற்றுநோக்கினான்.

அவன் முகபாவத்தை கவனித்த துறவியார், "ஆதித்யா, உன் மனத்தில் ஏதோ சந்தேகம் தோன்றியிருக்கிறது. நாம் பரஸ்பரம் கொள்ளும் சந்தேகம் நமது நோக்கத்தையே பாழடித்து விடும். எனவே தயங்காதே, எதுவானாலும் கேள்" என்றார்.

ஒருகணமே தயங்கிய ஆதித்யன், "சோழ ராஜேந்திரர் பட்டமேற்று மூன்று ஆண்டுகள் வரையில் பாண்டியருடனும், போசளருடனும் கூடப் போரிட்டார். பிறகு சோழ நாட்டில் போர் எதுவும் நடைபெறவில்லை. அப்போது இருந்த பெரும்படை பிறகு என்னவாயிற்று? அத்தனை வீரர்களும் எங்கே சென்று விட்டார்கள்?" என்று வினவினான்.

துறவியாரின் முகத்தில் விஷமம் பரவியது.


The following particulars regarding the ownership of 'KALKI' the Tamil Weekly newspaper, are published, as called for by rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

## FORM IV


| | | |
|---|---|---|
| 1. Place of Publication | : | Madras |
| 2. Periodicity of Publication | : | Weekly |
| 3. Name of Printer | : | V. Murali |
| Nationality | : | Indian |
| Address | : | D-38, Nelson Chambers, 115, Nelson Manickam Mudaliar Road, Aminjikarai, Madras - 600 029. |
| 4. Name of Publisher | : | K. Rajendran |
| Nationality | : | Indian |
| Address | : | 1, 5th Street, Lake Area, Nungambakkam, Madras - 600 034. |
| 5. Name of Editor | : | Seetha Ravi |
| Nationality | : | Indian |
| Address | : | 'Mangala Ganesh', Second Floor, 15, IV Seaward Road, Valmiki Nagar, Thiruvanmiyur, Madras - 600 041. |

6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital : **Bharathan Publications Private Limited, 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Madras - 600 097.**

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

1.3.1996

K. Rajendran
Publisher



"கிரிக்கெட்லே நம்ம அணி அதிக ரன் எடுக்க என்ன வழி?"

"ஒரே வழிதான்; நம்ம அணி வீரர்கள் பேர்லேயே 'ரன்' வர்ற மாதிரி 'சசிதரன், முரளிதரன், கங்காதரன், தினகரன்'னு தேர்ந்தெடுக்கணும்!"

— பரணி மனோ

"ஆதித்யா, உன் சந்தேகம் நியாயமானதுதான். நான் முன்பு கூறியபடி போசளரை நேரிடையாக எதிர்ப்பதில் ராஜேந்திரருக்குப் பல சங்கடங்கள் இருந்தன. காடவ கோப் பெருஞ்சிங்கனுடன் இன்னும் சில சிற்றரசுகளும் சேர்ந்து உட்பகையை வளர்த்து விட்டார்கள். எனவே தஞ்சையின் காவலுக்கு சிறு பகுதியை மட்டும் நிறுத்திக் கொண்ட ராஜேந்திரர் மீதிப் படைகளைக் கலைத்து விட்டார். ஆனால் சோழ வீரர்கள் படையை விட்டு விலக விரும்பவில்லை." துறவியார் தமது விளக்கம் ஆதித்யன் புத்தியில் உறைய சற்று அவகாசம் அளித்து விட்டுத் தொடர்ந்தார் : "எனவே, படையின் பெரும் பகுதி கொங்கு நாட்டுக்கு, சாதாரண மக்களாகச் சென்று கொங்கு மண்ணின் விடுதலையை விரும்பும் வீரர்களையும் சேர்த்து ஒரு விடுதலைப் படையை உருவாக்கியது. மீதிப் பேர்..." துறவியாரின் சொற்கள் பாதியில் நின்றன. அவர் பெரு விழிகளில் வழிந்த விஷமம் கூடியது.

"மீதி வீரர்கள் என்ன ஆனார்கள்?" ஆதித்யனின் கேள்வி சாதாரணமாகத்தான் வந்தது. ஆனால் துறவியார் கூறிய பதிலில் அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

"மீதி வீரர்கள் பாண்டிய நாட்டிலிருக்கிறார்கள்" என்ற துறவியார் மென்னகைத்தார்.

"என்ன? சோழ வீரர்களில் பாதிப் பேர் பாண்டிய நாட்டிலிருக்கிறார்களா?" - ஆதித்யனின் திகைப்பு அவன் கேள்வியிலும் ஒலித்தது.

"ஆம் ஆதித்யா! ராஜேந்திரரின் நோக்கம் போசளர்களைத் தமிழகத்திலிருந்து விரட்டுவது. நேரிடையாக சோழ வீரர்களைக் கொண்டு அதை சாதிக்க இயலாது. ஆனால் போசளரின் பரம வைரிகளான பாண்டியர் படையிலிருந்து கொண்டு அவர்களை எதிர்ப்பதும் போரிடுவதும் இயலும். எனவே பாண்டிய மன்னர் திரட்டிக் கொண்டிருந்த படையில், சோழ வீரர்கள் சாதாரணக் குடிகளாகச் சென்று இணைந்து கொண்டார்கள்" என்றார் சைவத் துறவியார் வெகு சாதாரணமாக.

ஆதித்யன் துறவியாரைப் பார்த்த பார்வையில் பிரமிப்பு வழிந்தது. தமிழகத்திலிருந்து போசளரை விரட்ட சோழ ராஜேந்திரர் திட்டம் வகுத்து நீண்ட காலமாகி விட்டது என்பதை உணர்ந்தான். தமிழகம் விடுதலை பெற, சோழர் பெரும்படையை கலைக்கவும் தயங்காத அபூர்வ பிறவி சோழ மன்னர் என்பதும் புரிந்தது அவனுக்கு.

அவன் பிரமிப்பைக் கவனித்த துறவியார், "ஆதித்யா, பாண்டியருக்கு உதவ சோழ வீரர்களை அனுப்பி வைத்ததோடு மட்டும் நிற்கவில்லை சோழ மன்னர். மேலும் படை திரட்டவும், போருக்குப் பின் நாட்டை வளப்படுத்தவும் பெரும் செல்வமொன்றையும் பரிசாக அளிக்கத் தீர்மானித்திருக்கிறார்" என்றார்.

"பெரும் செல்வமா? என்ன அது?" என்றான் ஆதித்யன் பிரமிப்பு இன்னும் நீங்காத குரலில்.

துறவியாரின் முகத்தில் நிதானம் படர்ந்தது. அடுத்து ஒலித்த அவர் குரலிலும் நிதானம் பெரிதும் காணப்பட்டது. "ஆம் ஆதித்யா, பெரும் செல்வம்தான் அது. அதன் பெயர் இந்திர தனுசு" என்றார் துறவியார்.

(தொடரும்)



"நீ சின்ன வயதில் கிரிக்கெட் விளையாடியிருக்கிறாயா?"

"ஓ. நிறைய."

"நீ அடித்த அதிகபட்ச ரன்கள் எவ்வளவு?"

"70"

"ப்பூ! இவ்வளவுதானா? நான் 175 அடித்திருக்கிறேன். சரி, அதிக பட்சமாக எவ்வளவு விக்கெட் சாய்த்திருக்கிறாய்?"

இந்த முறை முதலில் நீ சொல். அப்புறம் நான் சொல்கிறேன்!"

— ஆத்மா முரளி

# வெள்ளி விழாப் பள்ளியின் வெற்றிப் படிகள்

வெள்ளி விழாக் கோலம் பூண்டு, வெற்றிப் பாதையிலே வீர நடையிட்டுச் செல்லும் பெர்க்ஸ் பள்ளியே, உனக்கு எம் பொன்னான வாழ்த்துக்கள் !

தென்னிந்திய நாட்டின் தொழில் நகராம் கோவையிலே தொழில்கள் மட்டுமென்ன, உயர்ந்த கல்வியும் சிறப்பாகத் தரமுடியும் என்று திட்டங்கள் பல தீட்டித் திறம்பட செயலாற்றிவரும் பெர்க்ஸ் பள்ளியே, நீ வாழ்க பல்லாண்டு!

ஒரு மாணவன், தன் ஏற்றமிகு வாழ்விற்கு "ஏட்டுக்கல்வி மட்டும் போதாது. பாடப் புத்தகங்கள் பகுத்தறிவை வளர்க்கட்டும். அத்தோடு, அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு" என்று ஆன்மீகக் கல்வியையும் இங்கு பயில்கிறான். இன்றைய மாணவனுக்கு ஒழுக்கமும் கல்வியும் எவ்வளவு தேவையோ, அந்த அளவிற்கு அவனுக்கு விளையாட்டிற்கும், உடற்பயிற்சிக்கும் இடம் தந்து, வளமான வாழ்வை அமைத்துக் கொள்ள இங்கே வசதிகள் ஏராளம்! பச்சைப் பசேலென சோலைகள் சூழ்ந்த பெர்க்ஸ் வளாகத்தின் எழில்மிகு நீச்சல்குளம், ஏற்றமிகு நவீன இயந்திரங்கள் கொண்ட உடல்நல மையம் (Health Center) ஆராய்ச்சிக்கும் ஆன்மீகத்திற்கும் நிலைத்ததொரு சின்னமாய் உருவாக்கப்பட்டு நாள்தோறும் நூற்றுக்கணக்கானோர் வந்து பார்வையிடும் பிரமிடு, (Pyramid) மற்றும் வெள்ளித் திரையிலேயும், விரிவாகப் பாடங்களைப் பயில உதவும் திரை அரங்கம் (Perks Mini Theatre) ஆகியன வேறு எந்தப் பள்ளியிலும் பார்க்க முடியாதவை!

அண்மையில் இப்பள்ளியில் நடைபெற்ற அனைத்துத் தென்னிந்திய மாநிலங்களின் அறிவியல் கண்காட்சி ஒரு கண்கொள்ளாக் காட்சி! கேரளம், ஆந்திரம், கர்நாடகம், பாண்டிச்சேரி, தமிழ் நாடு ஆகிய மாநிலங்களிலிருந்து வந்திருந்த ஆயிரக்கணக்கான மாணவர்கள், தங்கள் அறிவியல் கண்டுபிடிப்புகளுடன் பங்கேற்ற இந்தக் கண்காட்சியைப் பார்த்துப் பயன்பெறத் திரண்டதே கூட்டம் ! அப்பப்பா...! அதை நினைத்துப் பார்க்கும் போது மூன்றாண்டுகளுக்கு முன்னர் நம் தமிழகத்திலேயே முதன் முறையாக நடைபெற்ற அகில இந்திய யோகா போட்டியிலே, நாட்டின் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் இப்பள்ளிக்குத் திரண்டு வந்து கலந்துகொண்ட அந்த விழா நினைவிற்கு வருகிறது.

அதுபோன்று அவ்வப்போது நடைபெற்று வரும் தேசிய அளவிலான போட்டிகள் இங்கே அடிக்கடி நடைபெறுகின்றன. இவ்விதம் நாட்டுப் பணிகளை நன்முறையில் ஆற்றிவரும் இப்பள்ளியின் சிறப்பு, நாட்டிற்குப் பெருமை அளிப்பதன்றோ! இந்திய நாட்டின் இன்றைய டென்னிஸ் வீராங்கனை குமாரி நிருபமாவை ஊக்குவித்து, சீரிய பயிற்சிகள் அளித்து உருவாக்கி வைத்த பள்ளியே! நீ வாழி!

நாட்டின் தலைசிறந்த வீரர்களையும், வீராங்கனைகளையும் ஒரு பள்ளி வளாகத்திலேதான் உருவாக்கமுடியும். பெர்க்ஸ் பள்ளியால் அதைச் செய்து காட்ட முடியும்! எதிர்காலத்தில் பல்வேறு துறைகளில் வீரர்களையும், வீராங்கனைகளையும் உருவாக்க இருக்கும் இப்பள்ளியின் சேவை நாட்டிற்குத் தேவை. "காலை எழுந்தவுடன் படிப்பு, மாலை முழுவதும் விளையாட்டு" ஆம். அமரகவி பாரதியின் கனவு இங்கு நனவாகிறது!

வெள்ளி விழாவை ஒட்டி இப்பள்ளி எதிர்வரும் கல்வி ஆண்டிலிருந்து (1996-1997) புகுத்த உள்ள புதிய திட்டத்தையே இங்கே குறிப்பிடுகிறோம். காலை 7.00 மணி முதல் பாட வகுப்புகள், நடுப்பகல் 12.00 மணி வரை நடைபெறும். அதன்பின் புத்தகங்களை அவன் மூடிவைத்து விடலாம். பிற்பகலில் தனக்குப் பிடித்த விளையாட்டை, நம்நாட்டின் தலைசிறந்த விளையாட்டு வீரர்களிடமிருந்து கற்கிறான். ஒவ்வொரு நாளும் குறைந்தது 4 மணி நேரம் இந்தப்பயிற்சியைப் பெறுகிறான். இத்தகைய பயிற்சி பெறும் மாணவனுக்குப் பாட வகுப்புகள் காலை 7 மணி முதல் நடைபெற இருப்பதால் அவன் பள்ளி விடுதியிலேயே வசிக்கும் அவசியம் ஏற்படுகிறது. 1996 ஜூன் மாதம் தொடங்க உள்ள கல்வி ஆண்டில் ஐந்து, ஆறு ஆகிய இரண்டு வகுப்புகளுக்கு, ஒவ்வொரு வகுப்பிலும் 40 மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்பட்டு இத்தகைய தனிப்பள்ளி துவங்குகிறது. தொடர்ந்து பள்ளி இறுதி ஆண்டு வகுப்பு வரை இவர்கள் இத்தகைய கல்வி பெற வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

எண்ணிலடங்கா புத்தம் புதுத்திட்டங்களைப் புகுத்தி மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதை வலியுறுத்தி வரும் பெர்க்ஸ் பள்ளியே , வாழ்க உன் பணி! உனக்கு எங்கள் மனமார்ந்த வெள்ளி விழா வாழ்த்துக்கள்!

---


**AREMPEE INDUSTRIES**
N.S.R. Road, Saibaba Mission (P.O), Coimbatore 641 011.
Air Compressors ; Blow Moulding Machine Makers.
•**Mr. T. RAMA CHANDRAN**, Sengalipalayam..

**V.Rajagopal**
Sub Inspector (retired)
Department of Police, Coimbatore - 641 009.

# காதல் காட்சி

"இது மாதிரி விவகாரங்களிலே நீங்க அவசியம் தலையை நுழைச்சுக்கணுமா?"

என் மனைவி வந்தனா கேட்டபோது, நான் அந்தக் கேள்விக்கு எந்தவித முக்கியத்துவமும் அளிக்க வில்லை.

"நான் பேசினால் அசோக் தனக்கு அனுகூலமாய் இருக்கும்னு நினைக்கிறான். அவனும் தீப்தியும் ஒருத்தரை ஒருத்தர் விரும்புகிறார்கள். இந்தக் கல்யாணம் நடப்பது நிச்சயம். எல்லாம் சம்பிரதாயப்படி நடந்தால் அசோக்கின் பெற்றோருக்குச் சந்தோஷமாக இருக்கும்."

அசோக்-தீப்தி இருவரின் பெற்றோருக்கும் பொதுவான நண்பன் நான்.

"அசோக்கின் அம்மா சுசீலாவுக்கு அவ்வளவாய் நல்ல பெயர் இல்லே!" என்றாள் வந்தனா.

"எஸ்- தெரியும்! பப்ளிக் லைஃப்லே நுழைஞ்சுட்டா ஜனங்க அவங்ககிட்டே பர்ஃபெக்ஷனை எதிர்பாக்கிறாங்க. சின்னதாக ஒரு குறை இருந்தால் கூட அதை பூதக் கண்ணாடி வெச்சு விளம்பரப்படுத்தறாங்க. சுசீலா ஒரு பிரபல சமூக சேவகி இல்லையா! உலகம் அப்படித்தான் விமர்சனம் பண்ணும். அதை எல்லாம் நாம் கண்டுக்கவே கூடாது."

"என்னவோ செய்யுங்க. உங்க இஷ்டம்!" வந்தனா அலுப்புடன் பின் வாங்கினாள்.

அன்று மாலை நான் அசோக் வீட்டுக்குப் போன போது, சுந்தரமும் சுசீலாவும் வரவேற்பறையில் உட்கார்ந்து டீ.வி. பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"அடடா! வாங்க விஜயன்! ஏது அபூர்வமாய் இந்தப் பக்கம்?"- சுந்தரம் வரவேற்றார். சமையல்காரரிடம் சொல்லி காபி வரவழைத்துக் கொடுத்து உபசரித்தார்.

நான் காபியை அருந்தி முடிப்பதற்குள் சுசீலாவுக்கு இரண்டு முறை டெலிபோன் அழைப்பு வந்தது.

"மிஸ்டர் சுந்தரத்தைவிட நீங்கதான் அதிக பிஸிபோல இருக்கு!" என்று ஐஸ் வைத்தேன்.

"அப்படித்தான்னு வெச்சுக்கங்க!" சுசீலா சிரித்தாள்.

"இரண்டு பேரும் நல்ல மூடில் இருக்கிறார்கள், ஆரம்பிக்கலாம்" என்று எண்ணி, பின்னால் புத்தக அலமாரியைக் குடைகிற பாவனையுடன் நின்ற அசோக்கைப் பார்த்தேன்.

'பெஸ்ட் ஆஃப் லக்' என்று ரகசியமாய் கையசைத்தான் அவன்.

"தீப்தியை உங்களுக்குத் தெரியுமா?"

"யாரது?" என்றாள் சுசீலா.

"அசோக் உதவி மானேஜராய் இருக்கிற கம்பெனியிலேயே ரிசப்ஷனிஸ்டாய் வேலை பார்க்கிறாள்."

"ஓ... தெரியாது!"

"தீப்தியின் அப்பா நடேசன் என்னுடன் வேலை பார்க்கிறார். உங்களை மாதிரி அவரும் எனக்கு ரொம்ப நாளாய் பரிச்சயம்."

"ஐ ஸீ..."

"தீப்தி, அவரது மூத்த பெண். மூன்று பெண்கள் அவருக்கு. தீப்திக்கு இப்போ வரன் பார்க்கிறார். 'நல்ல இடமாய் சொல்லுங்கன்னார்' சட்டுனு எனக்கு நம்ம அசோக் ஞாபகம் தான் வந்தது. அவர்கிட்டே சொல்றதுக்கு முன்னாடி உங்களை எதுக்கும் ஒரு வார்த்தை கேட்டுடலாமேன்னு நினைச்சேன்."

ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணம் என்றால், என் முதல் பொய் ஆரம்பமாகிவிட்டது. தீப்தியின் அப்பா வரன் பார்க்கவும் இல்லை. என்னிடம் சொல்லவும் இல்லை!

சுசீலா பதில் பேசவில்லை.

நான் சொன்ன விஷயம் அவள் சுவாரஸ்யத்தை அவ்வளவாகத் தூண்டவில்லை என்று தோன்றியது.

அசோக் அவளிடம் தன் காதல் விஷயமாகப் பேச ஏன் தயங்கினான் என்பது புரிந்தது. இருந்தாலும் அதை நான் கவனிக்காதவன் போல், "என்ன சொல்றீங்க?" என்றேன்.

"அசோக்குக்குப் பிடிச்சாப் பார்க்கலாம்" என்றாள் அவள்.

எனக்கு அந்த வார்த்தையே போதுமானதாக இருந்தது.

"தீப்தி நல்ல பெண். தெரிஞ்ச குடும்பம். என் சிநேகிதர் உங்களை வந்து பார்ப்பார்.."

**எ**டுத்த எடுப்பிலேயே நடேசன் தயங்கினார்.

"எங்க அந்தஸ்துக்கு அத்தனை செல்வாக்கான குடும்பம் சரிப்படுமா சார்?"

"முயன்றுதான் பாருங்களேன்!"

"வந்து..."

"ப்ளீஸ், மிஸ்டர் நடேசன். நோ ஆர்க்யுமென்ட்ஸ்!"

**ந**டேசனும் அவர் மனைவி வசுதாவும் சம்பிரதாயப்படி அசோக்கின் பெற்றோரைப் பார்க்கப் போனார்கள்.

கிளிப்பிள்ளையாய் நான் சொல்லிக் கொடுத்த வசனங்களை ஒப்பித்தார்கள்.

அசோக் நாடகத்தின் ஒரு பகுதியாய், 'பெண்ணைப் பார்க்க வரமாட்டேன்' என்று முரண்டு பிடித்தான். நானும் அவனை ரொம்பவும் சிரமப்பட்டு சம்மதிக்க வைக்கிறவளைப் போல் நடித்தேன்.

"உங்களுக்குத் தெரிஞ்சவங்களா இருக்கலாம் அங்கிள். ஆனால் பெண் எனக்குப் பிடிச்சாத்தான் சரின்னு சொல்லுவேன்."


அசோக் பிகு பண்ணினான்.

மனசுக்குள் 'படுவா ராஸ்கல்! தீப்தியை காதல் பண்ணிட்டு சேர்த்து வையுங்கன்னு கெஞ்சினே! இப்போ, வரமாட்டேன்னு டிராமாவா போடறே?' என்று அவனை முறைத்தேன், செல்லமாக.

விஷயம் எதுவுமே தெரியாத சுசிலா, அவன் பெண்ணைப் பிடிக்கவில்லை என்று நிச்சயம் நிராகரித்து விடுவான் என்று எதிர்பார்த்தாள்.

அசோக்குக்கு தீப்தியைப் பார்த்ததுமே பிடித்து விட்டது.

லக்ஷ்மி ரமணன்



"கொடுக்கல் வாங்கல் ஏதாவது...?"

"நத்திங் டூயிங். நான் ஒரு சமூக சேவகி. வரதட்சணைக்கு எதிராய்க் கொடி பிடிக்கிறவள். நான் வரதட்சிணை வாங்குவதாவது? மருமகளே வீட்டுக்கு வருகிற லட்சுமி. அது போதும்!"

தீப்தியின் தாய் வசுதாவுக்கு சம்பந்தியம்மாளைப் பற்றி ஏகப் பெருமை.

"இப்படியொரு மாமியார் கிடைக்க என் பெண் ரொம்ப அதிர்ஷ்டம் செய்திருக்கணும்" என்று வார்த்தைக்கு வார்த்தை புகழ்ந்தாள்.

"முப்பது பவுன் நகை. நாலு பட்டுப் புடைவை. லட்டு, அதிரசம், மைசூர்பாகு முறுக்கு எல்லாம் அம்பத்தி ஒண்ணு வெச்சிடறோம். எதுவுமே இல்லாமே கலியாணம் பண்ணுவாளா? பெண்ணுக்கு நாலு கல்வெச்சு நவீன டிசைனில் வைரத்தோடு போடுவதாக இருக்கோம்!"

நடேசனும் வசுதாவும் பிள்ளை வீட்டார் கேட்காமலேயே விளம்பரப்படுத்திக் கொண்டார்கள்.

திருமணத்துக்கு இரண்டு நாள் முன்பு நடேசன் என்னிடம் வந்தார். முன்னால் நின்று கையைப் பிசைந்தார்.

"என்ன விஷயம்?"

"நினைச்ச அளவுக்குப் பணம் புரட்ட முடியல்லே. அதனால் நகை பதினைஞ்சு பவுன் தான் போட முடியும்" என்றார்.

"இதை பிள்ளை வீட்டார்கிட்டே நேரடியாச் சொல்லிடுங்களேன்? அவங்க நல்ல மாதிரி, இதை எல்லாம் பெரிய குறையாய் நினைக்கிற டைப் இல்லே!"

"புடைவையும் ரொம்ப விலையாய் இருக்கு. ரெண்டுதான் வாங்கியிருக்கோம். மிச்சத்தை பாலியஸ்டர் வாங்கி அட்ஜஸ்ட் பண்ணிட்டோம்."

"......"

"அமெரிக்கன் டைமண்ட் வெச்ச தோடு..."

"நடேசன்!"

"எனக்கு இன்னும் ரெண்டு பெண் இருக்காங்க சார். வைரம் போட்டுக் கட்டுப்படியாகாது."

"ப்ளீஸ், இதெல்லாம் ஏன் என்கிட்ட சொல்றீங்க? உங்க சம்பந்திகிட்டயே நேரடியா சொல்லிடுங்க. தவிர, இதெல்லாம் உங்களுக்கு முன்பே தெரியாதா? எதுக்காக அவங்ககிட்ட வாக்குக் கொடுக்கணும்? பின்னால 'மனஸ் தாபம் வந்ததுன்னா எல்லாருக்கும் கஷ்டம்."

"தப்பு தான் சார். ஏதோ உற்சாகத்துல... அவசரத்துல..."

எனக்கு மிகவும் தர்ம சங்கடமாகப் போய் விட்டது.

கலியாணத்திலும் காண்ட்ராக்ட் கொடுத்த சமையல்காரர்களிடம் சரியாக விருந்தினர் எண்ணிக்கையைச் சொல்லாததால், மூன்றாம் பந்தியில் உட்கார்ந்த சம்பந்திகளுக்கே சாப்பாடு இல்லை!

சமைக்க நேரம் இல்லாமல் ரகசியமாய் ஹோட்டலிலிருந்து காரியரில் சாப்பாடு வந்தது!

கசீலாவும், சுந்தரமும் வாயைத்திறக்க வேண்டுமே? முகத்திலிருந்த புன்னகை மாறவே இல்லை. ஒரு கடுப்பு.... சிடுசிடுப்பு கோபம்... எதுவுமே இல்லை!

எனக்கு மட்டும் பயம்.

எரிமலை இன்றில்லா விட்டாலும் என்றாவது வெடிக்கத் தான் போகிறது!

'கடவுளே! பிரியப்பட்டு தீப்தியும் அசோக்கும் மணந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இல்லறம் நன்றாக இருந்தால் போதும்' என்று வேண்டிக் கொண்டேன்.

கல்யாணம் ஆனவுடன் புதுமணத் தம்பதிகள் தேனிலவுக்கு கோவா போனார்கள்.

# கொசுவத்தியா ஜாக்கிரதை!

கொசுக்களை விரட்டும் சாதனங்களில் (வத்தி, வில்லை முதலியன) 'அல்லெத்ரின்' என்ற பூச்சிக் கொல்லி உபயோகப் படுத்தப்படுகிறது. இதனால் உபயோகிப்பாளரின் உடல் நலம் எவ்வளவு தூரம் பாதிக்கப்படுகிறது என்பது சர்ச்சைக்குரிய விஷயமாகவே இருந்து வருகிறது.

வில்லைகளில் அதிகபட்சம் 4 சதம் அல்லெத்ரின் இருக்கலாம். வத்தியில் அதிகபட்சமாக 5 சதம் இருக்கலாம் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதுவரை ஒரே ஒரு நிறுவனம்தான் அங்கீகாரம் பெற்றிருக்கிறது.

அல்லெத்ரினால் புற்றுநோய் முதலிய வியாதிகள் மனிதர்களுக்கு (குறிப்பாக குழந்தைகளுக்கு) ஏற்படும் அபாயம் உள்ளது என்றும் அபிப்பிராயம் வெளியிடப்பட்டிருக்கிறது.

இவ்விதமாக மாற்றுக் கருத்துக்கள் இருக்கும் போது கொசுவலையை உபயோகிப்பதே சிறந்தது.

நன்றி : பறம்பை நுகர்வோர் குரல்
தகவல் : நாஞ்சில் க. நாகராஜன்

நானும் அலுவலக வேலையாக பம்பாய் போக வேண்டி வந்தது. திரும்ப, பதினைந்து நாட்களாயின.

வந்ததும் வந்தனாவை, அசோக்-தீப்தியைப் பற்றித்தான் விசாரித்தேன்.

"அவங்களைப் பத்தி நியூஸ் தெரியாது. ஆனால் சுசிலா உங்களுடன் பேசணும்னு ரெண்டு மூணு முறை போன் செய்தாங்க."

"எதுக்கு?"

"எனக்கெப்படித் தெரியும்?"

அன்று மாலையில் சுசிலா- சுந்தரம் இருவரையும் பார்த்து விட்டு வரக் கிளம்பினேன்.

வாசலில் புதிதாய் கூர்க்கா நின்றான்.

"யார் நீங்க?" விசாரித்தான்.

"சுந்தரம் ஐயாவுடைய சிநேகிதன் 'விஜயன்'னு பேரு."

"உங்களை உள்ளே விடக் கூடாதுன்னு அம்மா சொல்லி இருக்காங்க."

"ஏன்?"- அதிர்ந்தேன்.

"காரணம் தெரியாது சார்."

"அசோக்-தீப்தி நல்லா இருக்காங்களா?"

"அவங்க தனியாய் கே.கே. நகர்லே பிளாட் பார்த்துக்கிட்டு போயிட்டாங்க."

நான் வீட்டுக்குப் போய் போன் செய்த போது சுசிலாதான் எடுத்தாள். என் குரலைக் கேட்டதும், "நீ..... ஒரு சிநேகிதன்தானா? ரிசீவரை வை கிழே.... என்ன தைரியத்திலே போன் பண்ணினே?"

ரிசீவரை நான் வைக்குமுன் அவள் வைத்து விட்டாள்.

எனக்குப் புரிந்தது.

அசோக்கின் பெற்றோர்களுக்கு என்மேல் எக்கச்சக்க கோபம்! ஏன் என்று நான் ஆராயவில்லை.

அது, கவரிங் நகையால் இருக்கலாம். பாலியஸ்டர் புடைவை வாங்கிய நடேசனின் சின்னத்தனத்தால் இருக்கலாம். அமெரிக்கன் டைமன்ட் தோடுகளால் இருக்கலாம். சம்பந்திகளுக்கு சாப்பாடு கூட சரியாகப் போடாமல், அதைப் பற்றிக் கொஞ்சம் கூட அலட்டிக் கொள்ளாத நடேசனின் நடத்தையால் இருக்கலாம். திருமணம் ஆன கையோடு தனிக்குடித்தனம் போய் விட்ட தீப்தியின் மீது ஏற்பட்ட எரிச்சலினால் கூட இருக்கலாம்!

வீடு கட்ட அஸ்திவாரம் போடும்போது நிறைய உள் மண்ணை எடுத்து வெளியே தள்ள வேண்டி இருக்கிறது. அப்போது தான் செங்கல் உள்ளே உட்காரும். நான் தள்ளப்பட்ட மண்!

'அசோக் தீப்தியின் இல்லற அஸ்திவாரம் உறுதியாக அமைந்தால் சரி!' என்று நினைத்துக் கொண்டேன்.



"தேசிய நீரோட்டத்தில் கலந்துக்க ஏன் யோசிக்கிறீங்க?"

"எனக்கு நீச்சல் தெரியாதுங்களே!"

- ஞா.ஞானமுத்து



"நான் கரப்பான் பூச்சியை விட 'கேவலமா' போயிட்டேனா சார்?"

"சே...சே... யார் அப்படி சொன்னது?"

"பாருங்க. எனக்குப் பயப்படாத என் மனைவி, கரப்பான் பூச்சிக்குப் பயப்படறாளே...?"


– ஆர். வசந்தகுமார்

"தலைவரு படா கில்லாடிப்பா. கூட்டத்துல கணிசமான தேர்தல் நிதி வசூல் ஆகலைன்னு வச்சுக்கோ, அதுக்கும் ஒரு மாற்று ஏற்பாடு செய்யச் சொல்லியிருக்காரு."

"என்ன?"

"ரகசியமா நமக்கு தெரிஞ்ச நூறு பிக் பாக்கெட் ஆசாமிகளை கூட்டத்தில விடச் சொல்லியிருக்காரு...."

– நெய்வேலி ஜீவி



# ஹவாலா



• எங்கள் தலைவர்கள்
இந்தியத் தரத்தில் இருந்த
ஊழல்களை
இப்போது
உலகத் தரத்திற்கு
உயர்த்தி விட்டார்கள்.

இன்று
உலக ஊழல் சந்தையில்
இந்தியாவின் ஹவாலா ஊழலுக்கே
முதல் இடம்!

• எங்கள் தலைவர்களில் சிலர்
தேசிய அரசு
அமைக்க விரும்பினார்கள்
அதற்கு வெள்ளோட்டமாக
ஒரு தேசிய ஊழலை
அறிமுகம் செய்திருக்கிறார்கள்
ஆம்.
சர்வ கட்சியும் சங்கமம்
ஹவாலா மோசடியில்தானே!

• இன்றைய ஊழல்களை
நாளைய ஊழல்களால்
மறக்கச் செய்யும்
சாகசக் கலைஞர்கள்
எங்கள் தலைவர்கள்

பாருங்களேன்.
சுக்ராமுக்கு சுக்ரதிசை.
ஹவாலா சந்தடியில்
தொலைபேசி (ஊழல்) சத்தமே
தொலைந்து போனது.

• எத்தனை ஊழல்கள்
வந்தால்தான் என்ன?
விடிந்தால்,
வீடியோ பார்க்க வேண்டும்
செயற்கைக் கோள்களுக்குள்
சிறகடிக்க வேண்டும்.

ஆதலால்
நாளை
இந்த ஹவாலாவை மறந்து
இன்னொரு
உஜாலாவுக்கு மாறிவிடுவார்கள்
எங்கள் மக்கள்.



- கோ. வெள்ளைச்சாமி

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : வி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.

**ஒரு சேமிப்புக் கணக்கைத் துவக்கி ரூ.1000 கோடி வைப்பு நிதியுள்ள வங்கியின் ஒப்பற்ற சேவையை அனுபவியுங்கள்.**

**LVB-ல் நீங்கள் ஒவ்வொருவரும் முக்கியமானவரே.**



SAVINGS A/C
LVB
SCHEME

*சிறப்பம்சங்கள்:*

- கனிவான, தனிப்பட்டமுறையிலான சேவை
- பெயர் மூலம் அறியப்படும் தனித்தன்மை
- சிறந்த வட்டி, உடனடி ரொக்கமாகக்கூடிய வசதி
- சேமிப்பினை ஒரு பழக்கமாக ஆக்கும் திட்டம்
- 70-வருட அனுபவமுள்ள வங்கியின் பக்குவமான சேவை.
- குறுகிய காலத்திற்கு உங்கள் பணத்தை பாதுகாப்பாக எளிதில் எடுக்கக்கூடிய வகையில் சேமிக்கும் வசதி

என்றென்றும் ஆனந்தம் மலர,
இன்றே சேருங்கள் !

மேலும் விபரங்களுக்கு அணுகுவீர்:

**லக்ஷ்மி விலாஸ் பேங்க் லிமிடெட்.**
பதிவு மற்றும் நிர்வாக அலுவலகம்:
சேலம் ரோடு, காதப்பாறை
கரூர் - 639 006. தமிழ்நாடு

**ஜி.வி. ராவ்**
சேர்மன்

*உயர்வான சேவையை நட்புடன் வழங்கும் LVB*

ADWAVE/LVB/5188 TAM B

REGISTERED NO. M. 4322
Registered as Newspaper in

